www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

Jude

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

ரூபா 11/00

மார்ச் 22-28,1998

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 249

## பாரதம்

## பா ரா மு க ம் தொ ட ரு மா ?




## பதுங்கலும் பாய்தலும்

## பொதிக்கு குறி

## களப் பார்வை





## க ம ல் ஜெ யி த் தா ர்

## பைபிள் கதைகள்

இராஜகுமாரன்



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## பிரிவினைக்கான பணி

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

மட்டக்களப்பு-அம்பாறை
மாவட்டங்களிலிருந்து
வெளியே வரவும்
உட் செல்லவும்
வாகனங்களுக்கு
தடை விதிக்கப்பட்டது!

தடையைத் தொடர்ந்து
ஏற்பட்ட
பாரிய எதிர்ப்புக்கள்தான்
தடை தளரக் காரணம்!
அரசின் மனிதாபிமானமல்ல!

எதிர்த்து நின்ற
சகல தரப்பையும்
மனதார பாராட்ட வேண்டும்!

தவிர்க்க முடியாத காரணங்களால்
தடை தளர்த்தப்பட்டாலும்கூட
இவ்வாறான கெடுபிடிகள்
பல உண்மைகளை
உணர்த்துகின்றன!

பிரிவினைத் தடைச் சட்டம்
என்ற ஒன்று
நாட்டில் இருக்கிறது!

பிரிவினையைத் தூண்டுவதோ
ஆதரிப்பதோ குற்றம்!

இன்று- பிரிவினையைத்
தூண்டுவது மட்டுமல்ல,
பிரிவினையே
நடந்து கொண்டிருக்கிறது!

அரசாங்கமும்
அதன் படைகளும்தான்
அக்காரியத்தைச் சிரத்தையுடன்
செய்து வருகின்றன!

இவ்வாறான காரியங்கள்
தமிழ் மக்களிடம் இருந்து
புலிகளை
தனிமைப்படுத்தும் என்று
ஒருவேளை நினைக்கலாம்!

அந்த நினைப்புக்கு
நேர்மாறான விளைவுகள்தான்
ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன!

நெருக்கடிகளுக்குள்
வாழப் பழகிவிட்டால்
போராட்டமே வாழ்க்கை-
வாழ்க்கையே போராட்டம்-
என்பது மக்களுக்கு
பழக்கமாகிவிடும்!

நெருக்கடிகளை எதிர்கொண்டு
வாழ்வதை
சவாலாக எடுத்துக்கொள்ளும்
மனப்பக்குவமும் வந்துவிடும்!
அவ்வாறான நிலையில்
புலிகளின் தளம்
விரிவாகுமே தவிர
சுருங்கிப்போகாது!

எனவே- கெடுபிடிகளால்
அரசும், படைகளும்
புலிகளுக்குத் தளம்
தேடிக் கொடுக்கின்றன!

அப்படிப் பார்த்தால்-
புலிகளுக்கான ஆட்சேர்ப்பு,
ஆதரவுத்தள உருவாக்கல்
ஆகிய பணிகளையும்
அரசே செய்கிறது
என்றுதான் அர்த்தம்!

எனவே- தனது
தடைச் சட்டங்களை
அரசே தவிர்க்கமுடியாமல்
மீறி வருகிறது எனலாம்!

பாதைக் கதவுகளை மட்டுமல்ல,
மனக்கதவுகளையும்
அரசாங்கம் இப்போது
இழுத்து மூடிவிட்டது!

அரைகுறையான
தீர்வொன்றை வழங்கக் கூடியதும்,
தனது செல்வாக்கை
உயர்த்தக்கூடியதுமான
போர் வெற்றிக்காக
தமிழ் பேசும் மக்களை
ஒட்டு மொத்தமாக விரோதிக்கவும்
அரசு தயங்காது என்பது
தெளிவாகிவிட்டது!

எனினும் வெளியுலகுக்காக
அரசியல் தீர்வு என்றும்
சமாதானம் தேவை என்றும்
உதட்டளவில் பேசப்படுகிறது!

புலிகள் தாக்கினால்
படைத்தரப்பு
தமிழ் மக்களைத் தாக்கும்
சம்பவங்கள் பல நடந்துள்ளன!

அப்போதெல்லாம்
தமிழ்க் கட்சிகள்
அரசாங்கத்திடம் முறையிடுவதுண்டு!
அல்லது முறையிடுவதுபோல
காட்டிக் கொள்வதுண்டு!

இப்போது அந்த அரசாங்கமே
நேரடியாக உத்தரவிட்டு
பாதைக் கதவுகளை மூடுகிறது!

புலிகளின் நடவடிக்கைக்குப்
பதிலடியாக
தமிழ் மக்களை மறைமுகமாகத்
தண்டிப்பது போன்றதே இது!

இப்போது
எங்கள் தமிழ்க் கட்சிகள்
எங்கு சென்று
முறையிடப்போகின்றன?!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## ஆன்மீகம்



### புனித சேவை மூலம் இறை அருள்

இறைவனின் அருளைப் பெற பல வழிகள் உள்ளன. அவற்றுள் மிகவும் இலகுவான வழி தான் தர்மங்கள் செய்வதாகும். ஆடம்பரத்துக்காக செய்கின்ற செலவுகள் நமக்கு மேலும் ஆசைகளைத் தூண்டுவதுடன் பொருள் அழிவைக் கொடுக்கின்றன. ஆனால் தர்ம கைங்கரியங்களுக்காகச் செலவப்படுகின்ற செலவு சிறிதளவாக இருந்தாலும் எமது மனதை தூய்மை ஆக்கி, தீமைகளிலிருந்து நம்மைக் காப்பாற்றி, நம்மையும் நமது சந்ததிகளையும் வாழவைக்கும்.

பெருக்கும் புகழுக்கும் தர்மம் செய்வது கீழ்த்தரமானது. கேட்கும்போது கொடுப்பது நடுத்தரமானது. ஆனால் கேட்காமல் கொடுப்பதும், கொடுப்பதை பிறர் அறியாமல் கொடுப்பதும்தான் முதல் தரமான தர்மம். தான தர்மங்கள் செய்வது வசதியுள்ளவர்களுக்கு அல்ல; ஏழைகளுக்கு, அனாதை இல்லங்களுக்கு அங்கவீனர்கட்கு, வயோதிப இல்லங்கள் போன்றவற்றிற்குத்தான் கொடுக்க வேண்டும்.

வருமானத்தில் பத்துவீதத்தை தான தர்மங்களுக்குச் செலவிட வேண்டும் என்று சாஸ்திரங்களும் சமயங்களும் பகர்கின்றன. தர்மம் செய்பவர்களின் சொத்துக்கு அழிவு ஏற்படாது- வளர்ச்சியே ஏற்படும். ஆடம்பரத்துக்காக ஆயிரக்கணக்கில் செலவு செய்கின்றோம். ஆனால் சிறிதளவாவது தர்மத்துக்காக ஏழைகளுக்கு, நோயாளிகளுக்கு செலவு செய்யும் மனம் கொண்டவர்களுக்கு அன்னை மகாலெட்சுமியின் அருள் தவறாமல் கிட்டும். தர்மம் செய்பவர்களே! நீங்கள் சம்பாதிப்பது ஒரு நாளும் வீண்போகாது. இப்போது வசதியும் மகிழ்வும் கொண்டு வாழ்பவர்களே! அது உங்கள் முன்னோர் செய்த தர்மம். நீங்களும் தொடர்ந்து தர்மம் செய்தால் உங்கள் வம்சமும் சிறப்பாக வாழும்.

ஸ்ரீகாந்தா சிவகுமார், கொழும்பு-15.

### அல்லாஹ்வை சிந்தனை செய்வது சிறந்தது

ஹஜ்ரத் ஆமிர் இப்னு அப்து கைஸ் (ரஹ்) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "நான், ஸஹாபாக்கள் பலபேரிடமும் கேள்விப்பட்டிருக்கிறேன். 'ஈமானுக்கு ஒளியும், உறுதியும் அல்லாஹ்வைப் பற்றி சிந்தனை செய்வதிலேயே அமைந்திருக்கிறது.'" என்பதாகக் கூறியுள்ளார்கள்.

ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அறிவிக்கிறார்கள். "ஒரு மணிநேரம் அல்லாஹ்வைப் பற்றி சிந்தனை செய்வது, இரவு முழுவதும் வணங்குவதைவிடச் சிறந்ததாகும்." அல்லாஹ்வின் படைப்புக்களைப்பற்றி ஒருமணி நேரம் சிந்தனை செய்வது, என்பது வருஷங்கள் இபாதத் (நபி வணக்கம்) செய்வதைவிடவும் மேலானதாகும். என்று அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். அபூதர்தா (ரலி) அவர்களின் சிறந்த வணக்கம் எதுவாக இருந்தது' என்று உம்முதர்தா (ரலி- அன்ஹா) அவர்களிடம் கேட்டதற்கு, "அல்லாஹ்வைப்பற்றி சிந்தனை செய்வது" என்று சொன்னார்கள்.

'ஒரு மணிநேரம் அல்லாஹ்வைப் பற்றி சிந்தனை செய்வது என்பது ஆண்டுகள் வணங்குவதைவிடச் சிறந்ததாகும்.'

ஒரு மனிதன் வீட்டின் மாடத்தின் மீது படுத்துக்கொண்டு, வானத்தையும், நட்சத்திரங்களையும் பார்த்தவனாக, "அல்லாஹ்வின் மீது சத்தியமாக, உங்களையெல்லாம் படைத்தவர் ஒருவனிருக்கிறான், என்பதை உறுதியாக நம்புகிறேன், யா அல்லாஹ்! என்னை மன்னிப்பாயாக! என்று வேண்டி துஆச் செய்வாராயின், அவர்மீது அல்லாஹ் அருள் புரிந்து மன்னித்துவிடுவான்." என நபி (ஸல்) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

தொகுப்பு:- செல்வி பௌக்கியா மன்சூர், மருதமுனை-03.

## கவிதைப் போட்டி இல.246

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்.**

### பரிசுக்குரிய கவிதை

#### கை வீசு!

கை வீசம்மா
கை வீசு!
காட்டுக்குப் போகலாம்
கை வீசு!
பங்கர் தோண்டலாம்
கை வீசு!
பதுங்கிக் கொள்ளலாம்
கை வீசு!

எம்.அலக்சாண்டர்- ஹய்.:.போரஸ்ட், கந்தப்பொள.

#### 'சீ'வியம்

காலடியில்
கண்ணீர்!
எதிரே
கானல் நீர்!!

எஸ்.பிரபா-பதுளை.



#### அம்மா வரட்டும்!

ஆடுவோம் பாடுவோம்
அருமை மகனே!
ஓடுவோம்; விளையாடுவோம்!
ஆம் மகனே!
சவுதி போய். ஃபொரின் போய்
அம்மா வருமட்டும்...!

கவிஞன் திக்கவயல்-மன்னார்.

#### யுத்தமும் இரத்தமும்

இளைப்பாறும் இடமெலாம்
அலை மோதுது யுத்தம்!
அலை பாயும் கடலெலாம்
தினம் பாயுது இரத்தம்!!

செல்வி ப்ரியநேசி- களுத்துறை (தெற்கு)

#### கண்டிக் கடல்

உனக்குப் பின்னால்
'பெயர்ப் பலகை' நாட்டி
"இதுதான் கண்டி"
என்றால்
நான் நம்புவேன்!

சுபா வரன்-கண்டி.

#### அந்த நாள்...?

ஊராரைப் பிரிந்தாய்!
உறவுகளைப் பறி(லி)கொடுத்தாய்!
ஆராரோ வந்துன்னை
அரவணைத்துக்கொண்டாலும்
தீராத யுத்தமிங்கு
தீராத நாள் வரையில்
தீருமா உன் துயரம்?
திரும்பிடுமா நிம்மதி?

சி.மு.சுந்தரேசன்-மஸ்கெலியா.

#### கூவிவரும்...!

கடலோரம்
நடைபோடும் உங்கள்
உயிரோடு விளையாடும்
கூவிவரும் ஷெல்கள்!

தெ.லோஜனா- கொழும்பு-15.

## கவிதைப் போட்டி இல.249



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 28.03.1998

முகவரி: கவிதைப் போட்டி இல.248, தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

#### ஓடிப் பழகி விடு

ஓடப் பழக வேணும் பாப்பா-நாம்
ஓடித் திரியுமினம் பாப்பா!
அகதியாய் அவதியில் ஓட வேண்டும்
பாப்பா!
அதற்கு முன் ஓடிப் பழகிவிடு பாப்பா!

கே.மகேஸ்வரலிங்கம்-வவுனியா.

#### அ(டை)க் க(ல)ம்!

தப்பித்தான் கரைசேர்ந்தோம்- இந்த
தரைதான் அடைக்கலம்!
தப்பித்தான் சுடப்பட்டால்
இங்குதான் சுதந்திரம்!

டி.ஜோர்ஜ்-லபுகலை.

## வாசக(ர்)சாலை



### விமர்சனம் மட்டுமல்ல...

எதிர்த்தரப்புகளுக்குள்ளே இருக்கும் முரண்பாடுகளை நம் தரப்புக்கு சாதகமாகப் பயன்படுத்த தெரியாதவர்களாக உள்ளன தமிழ்க் கட்சிகள். அதனை இராஜதந்திரியார் இடித்துரைத்திருப்பது மட்டுமல்லாமல், என்ன செய்யலாம் என்ற யோசனையும் கூறியுமுள்ளார். வெறுமனே விமர்சனம் பண்ணுவது இலகு. ஒன்று பிழை என்றால், சரியான போக்கு எவ்வாறு அமையவேண்டும் என்பதையும் எடுத்துக் காட்ட வேண்டும். 'முரசு'ம் இராஜதந்திரியும் அதனைச் செய்கின்றமைக்குப் பாராட்டு. ஆயினும் தமிழ்க் கட்சிகள் தூங்குவது போல நடிப்பதால், தங்கள் பிழைகளை நிவர்த்தி செய்யப் போவதில்லை.

ஆ.விஜயகுமார், யாழ்ப்பாணம்.

### பலியிடப்பட்ட போராட்டம்

காணாமல் போனோர் பலியாகிவிட்டனர் என்பதை 'முரசு' திரும்பத் திரும்பக் கூறியது. காணாமல் போனோர் எங்கே? என்று கேட்பதை விடுத்து, பலியானவர்களுக்கான நஷ்டஈடு கோருவதே முறையானது என்பதை 'முரசு' வலியுறுத்தியது. யாரும் கேட்கவில்லை. சிலரது பிரபலங்களுக்காகவும், குறுகிய நலன்களுக்காகவும் காணாமல் போய் பலியானோர் விவகாரம் பயன்பட்டதுதான் கண்ட பலன். சத்தான போராட்டத்தை சமரசப் பாதையில் கொண்டுபோய் கவிழ்த்தாகிவிட்டது. போராட்டங்கள் நடத்துவது பெரிய விஷயமல்ல: யார், என்ன நோக்கத்துக்காக நடத்துகிறார்கள் என்பதைப் பொறுத்தே அவற்றின் வெற்றி- தோல்வி நிர்ணயிக்கப்படுகிறது. 'நக்கீரன்' எழுதியிருந்ததுபோல, சில தனிநபர்கள் முகவிலாசம் தேட முகவரி இழந்த மனிதர்களுக்காக போராட்டம் பலியிடப்பட்டுவிட்டது.

இ.பரமேஸ்வரி, வட்டுக்கோட்டை.

இராமாயணம் தொடர் ஒவ்வொரு வாரமும் இலக்கியக் கடலில் நம்மை மூழ்கவைத்தது. முத்தான முரசு தந்த மற்றொரு முத்துக் குவியல். இராஜகுமாரனுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கவும்.

சா.பாலேஸ்வரி, நீர்கொழும்பு.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.

### அழிப்பும் நிதியளிப்பும்

வடபகுதியின் புனரமைப்புக்கு அரச நிதி ஒதுக்கீடு செய்வதாக அடிக்கடி அறிவிப்புக்கள் வெளியாகின்றன. சில தமிழ்க் கட்சிகள் அதனை தமது திறமையால் கிடைத்த பலாபலன்போல தாமே செய்தியாகவும் வெளியிட்டு அரசுக்கும் 'நல்ல பிள்ளை' பட்டம் பெற்றுக் கொடுக்கின்றன. தினமும் வடக்கு-கிழக்கில் போரால் ஏற்படும் அனர்த்தங்கள், அத்துமீறல்கள், கெடுபிடிகளுடன் ஒப்பிட்டால் மேற்கண்ட நிதி ஒதுக்கீடுகள் கிட்ட நிற்கமுடியுமா? ஒரு விமானக் குண்டின் விலை என்ன? அதனால் ஏற்படும் குடிமனை அழிவுகளின் பெறுமதிதான் என்ன? ஒரு புறம் அழிப்பு, மறுபுறம் நிதியளிப்பா? தமிழ்க் கட்சிகள் இதற்குத் துணையளிப்பா? மக்களை முட்டாள்களாக நினைக்கலாமா? தீர்வு யோசனைகளைத் தூக்கி வீசிய அரசு, இவர்கள் கேட்டதும் நிதி ஒதுக்கீடுகள் செய்கிறது என்றால், காரணம் இல்லாமல் போகுமா? ஏன்தான் இப்படி அலைகிறார்கள்?

வே.செபஸ்தியன், திருக்கோணமலை.

### மங்காத தமிழ் வளம்

இராமாயணத்தை தெள்ளிய தமிழில் தந்த இராஜகுமாரனுக்கு இதயம் நிறைந்த பாராட்டுக்கள். 'தாய்', 'தூக்குமேடைக்குறிப்பு' போன்ற புரட்சிகர இலக்கியங்கள் வேறு விதம். அவை இலட்சிய உறுதிக்கு உரமானவை. 'இராமாயணம்' உண்மையா? பொய்யா என்பதைவிட, அதனை கம்பன் தந்த விதமும், தமிழ் வளமும் அற்புதம். என்றும் அழியாத காவியம் அது. கம்பன் வடித்த நயம் குறையாமல் இராமாயணத்தை தன் நடையில் நமக்களித்த இராஜகுமாரனின் பணி சிறப்பானது.

எஸ்.சீவரத்தினம், வவுனியா.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில நாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

அன்புள்ள இராஜகுமாரனுக்கு,

மகாபாரதத்தின் பின்னர் 'இராமாயணம்' படைத்து எங்கள் இல்லத்தில் இராமாயண வாசகர்களை உருவாக்கிவிட்டீர்கள். என் பதினொரு வயது மகன் இராமாயணக் கதையை மனப்பாடம் போன்று சொல்கிறான். உங்கள் அடுத்த படைப்புக்கும் முன்கூட்டியே வாழ்த்துக்கள்!

என்.ரங்கராஜன், மஸ்கெலியா.

முரசே!

நீ தாங்கிவரும் அனைத்து விடையங்களும் சூப்பர். அதிலும் 'தேன்கிண்ணம்', 'பூலான்தேவி' தொடர், அற்புதன் எழுதும் 'அரசியல் தொடர்', 'இலக்கியநயம்' அனைத்தும் சூப்பர். மாணவர்களுக்கு பயன் தரக்கூடிய 'அதிசயம் -ஆனால் உண்மை' எங்களுக்குப் பயன் தருகின்றது.

க.குமார் வந்தாறுமூலை.

அன்பின் முரசே!

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர். அதிலும் 'அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை', 'கொள்ளை ராணி பூலான் தேவி' ஆகிய தொடர்கள் எம்மை அசத்துகின்றன. அத்தொடர்கள் மூலம் நாங்கள் அறியாத பல செய்திகளையும் அறிந்து கொள்ளுகின்றோம். முரசே உனக்கு எங்களுடைய மனமார்ந்த வாழ்த்துக்கள்!

எஸ் சிறிகரன், பலாங்கொட.

### குவைத்தில் தடை

'முரசி'ல் வெளியான 'இரும்பு மனிதன்' சதாம் என்ற தலைப்பின் கீழ் ஆசிரியர் எழுதிய கட்டுரையை பாராட்டுகிறேன். சதாம் உசைன் பாராட்டப்பட வேண்டியவரே. அதே வேளையில் எங்களை போன்ற வாசகர்களையும் 'முரசு' நினைவில் கொள்ள வேண்டும். காரணம் அப்பத்திரிகையில் முன் அட்டையில் சதாம் உசைனின் படம் வெளியாகியிருந்த படியால் 'குவைத்தில்' அப் பத்திரிகை தடை செய்யப்பட்டது. இருந்தும் விநியோகத்தர்களின் சாமர்த்தியத்தின் பேரால் 'முரசு' சில வாசகர்கள் கரம் கிடைத்தது. ஒரு வாரமேனும் 'முரசு' தடைபடுமானால் நம் போன்ற 'முரசு' வாசகர்களின் இதயங்கள் மிகவும் வேதனைப்படும். ஆதலால் இனி மேலும் இம்மாதிரியான இக்கட்டான நிலமைகள் ஏற்படாது என நம்பிக் கொண்டு 'முரசு'க்கு எந்த நாட்டிலும், எந்த இடத்திலும் களங்கம் ஏற்பட்டுவிடக்கூடாது, என்று விரும்பும் வாசகர்களில் ஒருவன்.

என்.ராஜன், குவைத்.



படிப்பகம்

www.padippakam.com

# "அரசுக்கான ஆதரவை விலக்குக! பாராளுமன்றத்தை பகிஷ்கரியுங்கள்!"

## தமிழ் பா.உக்களுக்கு நெருக்கடி

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களின் வாகனங்களுக்கு விதிக்கப்பட்ட தடை இரண்டு வாரங்களுக்கு மட்டுமே தளர்த்தப்பட்டுள்ளது. இதனை பாதுகாப்பு அமைச்சு தெளிவாக அறிவித்தும்கூட தமிழ்க் கட்சிகளோ, தமிழ்பேசும் பா.உக்களோ எதிர்ப்புத் தெரிவிக்காமல் இருந்தனர்.

மக்களின் அன்றாடப் பிரச்சனைகளை தீர்க்கவே அரசுடன் ஒத்துழைத்து வருவதாக கூறும் தமிழ்க் கட்சிகள் மாபெரும் அன்றாட அவலம் குறித்து மௌனம் சாதிப்பது மக்களிடம் பாரிய அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

"அறிக்கைகள், பத்திரிகைகளுக்கு கொடுக்கும் கண்டனச் செய்திகள் போன்றவை புளித்துப்போன அரசியல் விளையாட்டுக்களாகும். மிக நெருக்கடியான இந்த நேரத்தில் தமிழ்க் கட்சிகள் செய்யக் கூடியது ஒன்றே ஒன்றுதான். அரசுக்கு தாம் வழங்கும் ஆதரவை விலக்கிக் கொள்ள வேண்டும்" என்று மட்டக்களப்பில் இயங்கிவரும் தொண்டர் நிறுவனப் பிரதிநிதி ஒருவர் கூறினார்.

கிழக்கில் இருந்து வாகனங்கள் வெளியே செல்லத் தடை. வடக்கில் இருந்தும் வாகனங்கள் கொழும்பு செல்லத் தடை. ஆனால் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் தங்குதடையின்றி சென்று அரசுக்கு ஆதரவாக வாக்களிக்க அனுமதி உண்டு.

'மக்களுக்கு விதிக்கப்பட்ட தடை விலகும் வரை பாராளுமன்றம் செல்ல மாட்டோம் என்று வடக்கு-கிழக்கு தமிழ் பா.உக்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபடவேண்டும், அல்லது அரசுக்கு எதிராக வாக்களிக்க வேண்டும். வெறுமனே கண்டன உரையாற்றினால் போதாது' என்று மட்டக்களப்பு மாவட்ட கூட்டணிக் கிளைப் பிரமுகர் ஒருவர் கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தை பகிஷ்கரிக்க வேண்டும், அல்லது அரசுக்கு வழங்கும் ஆதரவை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று கோரி மட்டக்களப்பு கூட்டணியிக் கிளை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றக்கூடும் என்று தெரிகிறது.

'தமிழ் மக்களின் உணர்வுகளை துச்சமாகக் கருதி வரலாறு காணாத தடைகளையும், நெருக்கடிகளையும் ஏற்படுத்திவரும் அரசுக்கு தமிழ்க் கட்சிகள் எந்த அடிப்படையில் ஆதரவளிக்கப் போகின்றன?!' என்று வியப்புத் தெரிவித்தார் சிங்களப் பத்திரிகையாளர் ஒருவர்.

## பாதைத் திறப்புக்கு வன்னி யுத்தம்
### பாதை மூடலில் கிழக்கில் நாட்டம்!

(நமது நிருபர்)

வன்னியில் ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயரக் காரணமான பாரிய யுத்தம் நடைபெற்று வருகிறது.

யாழ் குடாநாட்டு மக்களுக்கு தரைப் பாதை ஒன்றை திறந்து, அவர்களுக்கு சுகமான, இயல்பான போக்குவரத்திற்கு வழிசெய்வதே தமது நோக்கம். அதற்காகவே 'ஜயசிக்குறுய்' நடவடிக்கை தொடர்கிறது என்று அரசு கூறிவருகிறது.

ஆனால், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் வாகனப் போக்குவரத்துத் தடை விதிக்கப்பட்டதானது அரசின் கூற்றை சந்தேகத்துக்கு உள்ளாக்கியுள்ளது.

வடக்கு-கிழக்கில் ஏற்கனவே இருக்கக் கூடிய தரைப்பாதைகள் ஊடாக நடந்துவரும் போக்குவரத்தை நடத்த தடை செய்யும் அரசும், படையினரும் யாழ் தரைப்பாதையை திறந்து இயல்பான போக்குவரத்துக்கு உதவப்போவதாக கூறுவது பொருத்தமில்லாமல் இருக்கிறது.

புலிகளை ஓரம் கட்டி, அரசியல், இராணுவ முனைப்பில் தனது முஷ்டியை உயர்த்திக் காட்டவே 'ஜயசிக்குறுய்' படை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற கணிப்பு தற்போது உறுதியாகியுள்ளது என்று அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

வாகனத் தடைகள், பாதுகாப்பு கெடுபிடிகள் ஊடாக பல இலட்சம் தமிழ் மக்களின் அதிருப்தியை சம்பாதித்துக் கொள்ள தயங்காத அரசாங்கம், ஒரு சிறு பிரிவினரான இனவாதிகளை திருப்தி செய்வதற்காக தனது அரசியல் தீர்வுப் பொதியில் பல மாற்றங்களை செய்தது. அதில் முன்னர் கூறப்பட்ட அதிகாரங்களைக் குறைத்தது என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

### தமிழ்ப் பொலிசார் இடமாற்றமா?

மருதானைக் குண்டுவெடிப்பின் எதிரொலியாக தமிழ்ப் பொலிஸ் அதிகாரிகள் தலைநகரில் இருந்து இடமாற்றம் செய்யப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த காலத்தில் ஜே.வி.பி. கிளர்ச்சிக் காலத்தில் படைகளுக்குள் ஜே.வி.பி. ஊடுருவல் இருந்தது. அதற்காக சிங்களப் படையினருக்குப் பதிலாக தமிழ், முஸ்லிம் படையினர் சேர்க்கப்பட்டனரா? இல்லையே. இவ்வாறான செயற்பாடுகள் தற்போதைய யுத்தத்தை இனங்களுக்கிடையான யுத்தமாக கருதும் நிலைக்கும் இட்டுச் சென்றுவிடும் என்று கூறப்படுகிறது.

இந்தியாவில் பஞ்சாப் போன்ற மாநிலங்களில் பிரிவினைக் கிளர்ச்சிகள் நடைபெற்ற போதுகூட சீக்கியர்களே இந்திய இராணுவத்தின் மிக உயர் பதவிகளில் இருந்தனர்.

பாரதப் பிரதமர் இந்திரா காந்தி சீக்கியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட போதும், இந்திய இராணுவத்தில் சீக்கியர்கள் உயர் பதவிகளில் இருந்தனர். இந்தியத் தரைநகரத்திலும் பஞ்சாபிலும்கூட சீக்கிய படைப்பிரிவுகள் பணியில் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## வரலாறு காணாத கொடுமையில் கிழக்கு மக்கள்!
### அரசின் பிரித்தாளும் சதி என்று கண்டனம்!

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலுள்ள தமிழ்-முஸ்லிம் பிரதேச வாகனங்கள் அனைத்தும் அந்த மாவட்ட எல்லையை விட்டு நாட்டின் எந்தவொரு பகுதிக்கும் செல்லமுடியாது என்று மார்ச் மாதம் 11 ஆம் திகதி அரசு அறிவித்த திடீர்த் தீர்மானம் கிழக்கிலுள்ள தமிழ்-முஸ்லிம் மக்களைக் கொதிப்படைய வைத்தது.

பல நூற்றுக் கணக்கான வாகனங்களும், ஆயிரக்கணக்கான பயணிகளும் மனிதாபிமானமற்ற முறையில் மட்டக்களப்பு-கொழும்பு வீதியில் மாதுறு ஓயாச் சந்தியிலும், அம்பாறை சியம்பலாண்டுவையிலும் இடை வழியில் நடுத்தெருவில் தவிக்க நேரிட்டது. ஈவிரக்கமற்ற பாதுகாப்புக்கெடுபிடிகளினால் மக்கள் துவண்டு போயுள்ளார்கள்.

#### எதிர்ப்பால் தளர்வு

உடனடியாகத் தமிழ்-முஸ்லிம் மக்கள் எதிர்ப்புக் காட்டப் புறப்பட்ட வேளையில் அரசு தந்திரமாகச் செயற்பட்டு ஹஜ்ஜாஜிகளுக்காக இந்தப் பாதுகாப்பு விதிமுறையைத் தற்காலிகமாகத் தளர்த்துவதாகவும், தனியார் வாகனங்கள் கொழும்புக்கும் நாட்டின் இதர பகுதிகளுக்கும் செல்வதில் மாதுறு ஓயாச் சந்தியிலும் (சிங்கள மக்கள் இதை மட்டக்களப்புச் சந்தி என்றே அழைக்கின்றனர்) சியம்பலாண்டுவப் பகுதியிலும் விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தை அரசுக்கு அபகீர்த்தியை உண்டு பண்ண அரசுக்கு எதிரான சக்திகள் பயன்படுத்தும் என்று அமைச்சர் அஷ்ரப் விளக்கிக் கூறியதாலேயே இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது என்றும் மார்ச் 12ஆம் திகதி மாலை இரவு வானொலிச் செய்தியறிக்கையில் சொல்லப்பட்டது.

இதனை நம்பி நிம்மதிப் பெருமூச்சு விட்ட தமிழ்-முஸ்லிம் மக்கள் மறுநாள் தமது பயணத்தைத் தொடரும் நப்பாசையில் சென்றனர். அந்தோ பரிதாபம்! அவர்கள் எச்சரிக்கப்பட்டு மிகக் கேவலமான முறையில் திருப்பியனுப்பப்பட்டனர். இந்நிலையில் யாருடைய கதையை மக்கள் நம்புவது? அரசையா? அரச வானொலியையா? அல்லது அமைச்சர் அஷ்ரப்பின் கருத்தையா? என்று மக்கள் குழம்பிப் போயுள்ளார்கள்.

யார் நாட்டை ஆள்கிறார்கள் பாதுகாப்புப் படையினரா? என்ற கேள்வி எழுகிறது. தீர்மானம் எடுப்பதும் நடைமுறைப்படுத்துவதும் பாதுகாப்புப் படையினராக உள்ள போது போலிச் சமாதானத்தைக் கூறும் தமிழ்-முஸ்லிம் தலைவர்களின் கதைகளை ஏன் நம்ப வேண்டும் என்று மக்கள் கொதித்தெழுந்து போயுள்ளார்கள்.

கிழக்கில் தமிழ்-முஸ்லிம் மக்களின் ஒன்றுபட்ட எதிர்ப்பு உருவாகும் சூழ்நிலை ஏற்பட்டதாலேயே வாகனத்தடை தற்காலிகமாக தளர்த்தப்பட்டது.

#### மாறுபட்ட விதிகள்

இனிமேல் மேற்கொள்ளப்படப்போகும் தடை நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு விதிமுறைகள் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையே பேதங்களை உருவாக்கக்கூடிய விதமாக நடைமுறைப் படுத்தப்படலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப் படுகிறது.

உதாரணமாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இருந்து வெளிப்பகுதிக்கு செல்லும் தமிழ் மக்கள் தாங்கள் எங்கு செல்கிறோம், ஏன் செல்கிறோம் என்ற காரணங்களை கூறவேண்டும் என்று கேட்கப்படக்கூடும். முஸ்லிம்களோ, சிங்களவர்களோ காரணம் கூறத்தேவையில்லை என்று விதி தளர்த்தப்படும் என்று ஒருதகவல் கூறுகிறது.

ஏற்கனவே வடபகுதியில் இருந்து கொழும்பு செல்லும் பயணிகளுக்கு இருந்த கெடுபிடிகளை இனிமேல் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட தமிழ் மக்களும் சந்திக்கப் போகின்றனர்.

#### மக்கள் கேள்வி

கிழக்கில் இருந்து குண்டுலொறிகள் செல்வதால் வாகனத் தடை பிறப்பிக்கப் படுவதாக அரசு நியாயம் கூறுகிறது. அப்படியானால் வடக்கு-கிழக்கில் படைகள் நிலைகொண்டிருப்பதால்தான் குண்டுலொறிகள் கொழும்பு செல்கின்றன. அரசு தன் படைகளை வாபஸ் பெற்று எல்லைகளில் நிறுத்திக் கொள்ளலாம்தானே என்று மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மக்கள் பரவலாக பேசிக்கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

'நாங்கள் நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து படைகளை வடக்கு-கிழக்குக்கு அனுப்புவோம். இராணுவ நடவடிக்கைகளும் தொடரும். ஆனால் புலிகள் மட்டும் எதிர் நடவடிக்கையில் இறங்கக்கூடாது. இறங்கினால் தமிழ் மக்கள்தான் அதற்கான தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்று அரசு கருதுவது என்ன நியாயம்? என்றும் கேள்விகள் எழுந்துள்ளன.

## புத்தூரில் பொட்டம்மான்
### பதவி விலகக் கோரிக்கை

யாழ் குடாநாட்டில் புலிகளின் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள பொட்டம்மான் சமீபத்தில் புத்தூர், சுன்னாகம், நீர்வேலி ஆகிய பகுதிகளுக்கும் வடமராட்சியில் சில பகுதிகளுக்கும் சென்று விட்டு திரும்பியதாகக் கூறப்படுகிறது.

யாழ்குடாநாட்டில் பாரிய தாக்குதல்களுக்கான சாதக பாதகங்களை அறிவதற்காகவே சென்றிருந்தார் என்று தெரியவருகிறது.

பொட்டம்மான் புத்தூரில் நின்றபோதே படையினர்மீதான கிளைமோர் தாக்குதல் ஒன்று நடைபெற்றது. 13.03.98ல் நடைபெற்ற அத் தாக்குதலில் டிராக்டர் ஒன்றில் ரோந்து சென்ற நான்கு படையினர் பலியாகினர். பொட்டம்மானுக்காக பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. கண்ணிவெடிகளும் ஆங்காங்கே புதைக்கப் பட்டிருந்ததாக தகவல் ஒன்று கூறுகிறது.

"இதேவேளை, உள்ளூராட்சிச் சபைகளில் வெற்றிபெற்ற சில பிரமுகர்களுக்கு பதவி விலகுவது உங்களுக்கு நல்லது," என்ற தொனியில் புலிகளால் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளதாம்.

### நோட்டை விழுங்கினார்

இலங்கைப் பொலிஸ் படையைச் சேர்ந்த பொலிஸ்காரர் ஒருவர் இலஞ்சம் வாங்கும்போது கையும் களவுமாகப் பிடிபட்டுவிட்டார். உயர் அதிகாரிகள் அவரை அணுகு முன்னதாகவே இலஞ்சமாக வாங்கிய பண நோட்டுக்கள் அத்தனையையும் வாயில் போட்டு மென்று விழுங்கிவிட்டாராம்.

இத்தகவலை கனடா ரொரண்டோவில் இருந்து வெளியாகும் 'த ரொரண்டோ சண்' என்ற தினசரி (25.02.1998) வெளியிட்டுள்ளது.

## பாரதிய ஜனதா ஆட்சி!
### பாராமுகம் தொடருமா?

பாரதிய ஜனதா அரசு பதவிக்கு வந்த பின்னரும் "இலங்கைப் பிரச்சனையில் இந்தியாவின் பாராமுகம் தொடருமா?" என்று ம.தி.மு.க. தலைவர் வை.கோபால்சாமியிடம் கேட்கப்பட்டது.

"இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு தமிழீழமே ஒரே தீர்வு," என்பதுதான் ம.தி.மு.க.வின் நிலைப்பாடாகும். ஆனால் பாரதிய ஜனதா கட்சிக்கும் சொந்த நிலைப்பாடு இருக்கவே செய்யும். எப்படியிருப்பினும் முன்னைய அரசுகளைப்போல் அல்லாமல் இலங்கைப் பிரச்சனையில் ஆக்கபூர்வமான கவனம் செலுத்த நாம் வற்புறுத்துவோம்" என்று அவர் கூறினார்.

"கச்சதீவை மீட்டு தமிழ்நாட்டுக்கு சொந்தமாக்கியே தீருவோம்!" என்று ஜெயலலிதா கூறியிருந்தார். தற்போது பாரதிய ஜனதா அரசில் ஜெயலலிதா தலைமையிலான கூட்டணிக் கட்சிகளே பிரதான பங்கு வகிக்கின்றன.

எதிர்காலத்தில் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் முன்னர்- போன்று பாதிக்கப்பட்டால், பாரதிய ஜனதா அரசு தன் அதிருப்தியை தெரிவிக்காமல் விடாது.

ஏனெனில் ஜெயலலிதா, வை.கோ. போன்றோர் தமிழக மீனவர் பிரச்சனையில் தி.மு.க. அரசின் மெத்தனப் போக்கையும், மத்திய அரசின் அலட்சியத்தையும் முன்பு கண்டித்தே வந்தனர்.

எனவே, தமிழக மீனவர்கள் பாதிக்கப்படுவது தொடருமானால், அதுவே இலங்கை-இந்திய அரசுகள் இடையே விரிசல்களை தோற்றுவிக்கும் முதற் காரணியாக அமையலாம், என்று அரசியல் விமர்சகர் ஒருவர் கருத்து வெளியிட்டார்.

#### கவலை

பாரதிய ஜனதா அரசு பதவி ஏற்பதையிட்டு தென்னிலங்கையில் உள்ள பேரினவாத சக்திகள் கவலையடைந்துள்ளன. குறிப்பாக புலிகளின் ஆதரவாளராகக் கருதப்படும் வை.கோபால்சாமி தமிழக அரசியலில் செல்வாக்குள்ளவராக மாறி வருவதையிட்டு அதிக கவலையடைந்துள்ளனர்- என்று சிங்கள விமர்சகர் ஒருவர் தெரிவிக்கிறார்.

"இலங்கையில் உள்ள எந்த அமைப்புக்கும் ஆதரவு அளிக்கமாட்டோம். ஆனால், இலங்கைத் தமிழர் பிரச்சனையில் நியாயமான அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்பதற்கு ஆதரவான எண்ணம் கொண்டுள்ளோம்!" என்று பாரதிய ஜனதா முக்கியஸ்தர் ஒருவர் முரசுக்கு தெரிவித்தார். தற்போது இது ஒரு இராஜதந்திர பிரச்சனை என்பதால் தன் பெயரைக் குறிப்பிட வேண்டாம் என்று அவர் கூறினார்.

## பறிபோனது வேலை

பொலன்னறுவை, அனுராதபுர மாவட்டங்களின் எல்லையிலுள்ள கட்டுவன் விலவில் பெப்ரவரி 24ம் திகதி புலி இயக்கத்தினர் தாக்குதல் நடத்தியதில் 5 ஊர்காவலர்களும் ஒரு பொலிஸாரும் கொல்லப்பட்டதுடன் அவர்களது ஆயுதங்களையும் மேலும் அங்கிருந்து பின்வாங்கித் தப்பியோடிய ஊர்காவல் படையினரின் 20க்கு மேற்பட்ட ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றிச் சென்றதாகக் கூறப்பட்டது.

அத்தாக்குதலின் போது எதிர்த்து நின்று புலிகளை முறியடிக்காது பின்வாங்கி ஆயுதங்களையும் பறிகொடுத்த ஊர்காவலர்கள்மீது இப்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்களாம்.

## இராணுவ கோப்ரல் பலி-பதில் தாக்குதலில் குடிமகன் பலி!
### ஒரு கிரனேற் வீச்சு ! ஆயிரக் கணக்கில் துப்பாக்கிச் சூடுகள்!

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு-செங்கலடிச் சந்தியில் மார்ச் 14ம் திகதி பிற்பகல் 3.55க்கு நடந்த சம்பவமொன்றில் புலி இயக்கத்தினரின் நடமாடும் அணியினர் பதுங்கியிருந்து கடைத் தெருவில் நின்ற படையினர்மீது கிரனேற் வீசி வெடித்ததில் இராணுவ கோப்ரல் ஒருவர் கொல்லப்பட்டார். எந்நேரமும் இராணுவம், பொலிஸ், ரெலோ, மற்றும் புளொட் இயக்கத்தினரின் கடுமையான கண்காணிப்பு உள்ள அவ்விடத்தில் புலி உறுப்பினர்கள் இருவர் எவ்வாறு உள்ளே நுழைந்து தாக்குதலை சாதுரியமாக நடத்தி விட்டுத் தப்பிச் சென்றார்கள் என்று பெரும் ஆச்சரியமாகப் பேசப்படுகிறது.

குறித்த நேரத்திற்குச் சில நிமிடங்கள் பிந்தி இராணுவ வாகன அணி அவ் வழியால் வந்து கொண்டிருந்தது.

தாக்குதலை நடத்திய புலி இயக்க உறுப்பினர் இரு கைக்குண்டுகளை அவ்விடத்தில் வீசியுள்ளனர். அதில் அகப்பட்ட இராணுவ கோப்ரல் வெடித்துச் சிதறினார். அவரது உடலின் பாகங்கள் முழுமையாக எடுக்கப்படவில்லை. இத்தனைக்கும் மத்தியில் அவர் அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவராக இருந்தார் என்று பலராலும் அனுதாபம் தெரிவித்துப் பேசப்படுகிறது.

இதனிடையே குண்டு வீசப்பட்ட பின்னர் அங்கு நின்ற படையினரும், பொலிஸாரும், தமிழ் இயக்கங்களை சேர்ந்தோரும் சரமாரியாகச் சுட்டதில் அவ்விடத்தில் கடைகளும், வீடுகளும், தொலைபேசிக் கம்பிகளும் சேதமாக்கப்பட்டன. செங்கலடி ஏறாவூர் வீதி நெடுகிலும் ஆயிரக் கணக்கான துப்பாக்கி ரவை வெற்றுக் கோதுகள் கிடக்கக் காணப்பட்டன. மறுநாள் படை அதிகாரி வந்து சீற்றத்துடன் அவற்றை அகற்றுமாறு கேட்டுக் கொண்டார். அத்தாக்குதலில் கொல்லப்பட்ட பலசரக்குக் கடை ஊழியர் காரைநகர் வெடியரசன் வீதியைச் சேர்ந்த மார்க்கண்டு-திரு சோமு (22) என்பவராகும்.

## 60 கோடிக்கு உணவு
### மோசடி அம்பலம்

சிறிலங்கா இராணுவத்துக்குரிய உணவுப் பொருட்களை வழங்கும் உரிமையைப் பெற்றுள்ள நிறுவனம் ஒன்றின் கணக்கு வழக்குகளை ஆராய்ந்தறிய முற்பட்ட இராணுவப் பொலிசாருக்கும் அதிர்ச்சிக்குமேல் அதிர்ச்சி ஏற்பட்டதாக 'சண்டே ரைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

வருடாவருடம் நடைபெற்றுவரும் ஆய்வுகளின்படி உணவுப் பொருட்களுக்கான செலவு தற்போது 60 கோடியையும் தாண்டி விட்டதாகத் தெரிகிறது.

இராணுவத்துக்கு வேண்டிய பொருட்களில் ஆக 80 சதவீதமானவையே வழங்கப்பட்டுவருவதாகவும் எஞ்சிய 20 சதவீதத்துக்கான பணத்தை விநியோகிக்கும் நிறுவனமும் பொருட்களைப் பொறுப்பேற்போரும் இவற்றுக்கான ஏற்பாடுகளைக் கவனிப்போரும் பகிர்ந்து கொள்வதாக விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது.

தொலைக் காட்சிப் பெட்டிகள், வீடியோ கசெட் ரெக்கோடர்கள், வானொலிப் பெட்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள், கமராக்கள் போன்றவற்றை சில அதிகாரிகளுக்கு, பொருட்களை விநியோகிப்பவர்கள் சந்தோஷமாக வழங்கியிருப்பதை இராணுவப் பொலிசார் கண்டுள்ளனர்.

## ஐந்தரை மணிநேர கடற் சமர்
### பதிலடி நடத்திய சிறுத்தை அணி

முல்லைத்தீவு புல்மோட்டை கடற்பரப்பில் 9.03.98 அன்று இரவு 10.30 முதல் அதிகாலை 4 மணிவரை கடற் சமர் இடம் பெற்றது.

கடற்படையினரின் அதிவேக டோராப் படகுகள் ரோந்தில் ஈடுபட்டிருந்தபோதே கடற்புலிகளுக்கும், கடற்படையினருக்குமான மோதல் ஆரம்பமானது. ஐந்தரை மணிநேரம் நடைபெற்ற கடற்சமரில் கடற்புலிகளின் படகுகள் சில சேதமாகின.

கடற்புலிகள் நடத்திய தாக்குதலில் கடற்படை டோரா படகு ஒன்று பலத்த சேதமானது. மற்றொரு படகு சிறு சேதத்துக்கு உள்ளானது.

கடற்புலிகள் தரப்பில் இருவர் கடற்படையினரின் தாக்குதலில் பலியாகினர். மேஜர் கருணாகரன் (மன்னார்) கப்டன் கோமளன் (யாழ்ப்பாணம்) ஆகியோரே பலியானார்கள். கடற்படையினர் தரப்பில் எவ்வித இழப்பும் ஏற்படவில்லை.

இச் சமர் தொடர்பாக படைத்தரப்பு வெளியிட்ட செய்தியில் 5 கடற்புலிப் படகுகள் அழிக்கப்பட்டதாகவும், 15 கடற்புலிகள் பலியானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

#### பதிலடி

கடற்புலிகள் இருவர் பலியானதற்கு பதிலடி கொடுக்கும் நோக்கத்தோடு சிறுத்தைப் படைப்பிரிவின் கடலணியைச் சேர்ந்த கரும்புலிகள் அனுப்பப்பட்டனர்.

பிரபாகரனது நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள சிறுத்தைப் படையணியே முன்னர் திருமலை புல்மோட்டையில் இல்மனைற் ஏற்றிய கப்பலையும் தகர்த்திருந்தது.

திருமலைத் துறை முகப் பகுதிக்குள் புகுந்து பலியான இரு கடற்புலிகள் நினைவாக பதிலடி நடத்துமாறு சிறுத்தைக் கடலணி கரும்புலிகளுக்கு உத்தரவிடப்பட்டது.

வெடிமருந்து நிரப்பிய படகு ஒன்றில் 11.03.98 அதிகாலை சரியாக 12.30 மணியளவில் திருமலை துறைமுகப் பகுதிக்குள் ஊடுருவிய சிறுத்தை கடலணி கரும்புலிகள், கடற்படையினரின் வோட்டர் ஜெட் படகு ஒன்றுடன் மோதினார்கள்.

இத் தாக்குதலில் ஏழு கடற்படையினர் பலியாகினர். வோட்டர் ஜெட் படகு மூழ்கியது.

கப்டன் இசையாளன் (கிளிநொச்சி) கப்டன் ஆர்வலன் (நுவரெலியா) ஆகியோரே பலியான சிறுத்தை கடலணி கரும்புலிகளாவர்.

திருமலைத் துறைமுகப் பகுதிகளுக்கு வந்து செல்லும் வர்த்தகக் கப்பல்களை- குறிப்பாக மூலப் பொருட்களை எடுத்துச் செல்லும் கப்பல்களே கடற்புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகக்கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# விவசாயிகளிடம் வசூல்!
## செங்கலடியில் ரெலோ

தமிழர் உரிமைப் போராட்டத்தினை ஆயுதத்துடன் முன்னெடுத்த இயக்கங்கள் பல இன்று மிதவாத அரசியல் நீரோட்டத்தில் இணைந்து அரசியல் கட்சிகளாகத் தம்மைப் பதிந்து, வடக்கிலும் கிழக்கிலும் தேர்தலில் போட்டியிட்டு உள்ளூராட்சிச் சபைகளையும் கைப்பற்றியுள்ளன. இவ்வகையில் கிழக்கில் கூடுதலான உள்ளூராட்சிச் சபைகளைக் கைப்பற்றி ஆட்சி செய்யும் இயக்கமாக ரெலோ அமைப்பு விளங்குகின்றது.

இருந்தும் விடுதலைப் புலிகளிடம் இருந்து தம்மைக் காத்துக் கொள்ள அரசாங்க உதவியுடன் ஆயுதங்கள் பெற்று அரச படைகளின் முகாமிற்கு அருகில் முகாமிட்டும் உள்ளன. இவ்வாறே செங்கலடி இராணுவ முகாமிற்கு அருகிலும் ரெலோ இயக்கம் முகாமிட்டுள்ளது.

ரெலோ அமைப்பினர் உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றி மிதவாத அரசியலில் ஈடுபட்டாலும்கூட பழைய குணங்களை மறந்தவர்களாக இல்லை. இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் பெரும்போக நெற்செய்கையில் ஈடுபட்டு விளைபொருட்களை- கடன்கொடுத்த முஸ்லிம் வர்த்தகர்களுக்குக் கொடுப்பதற்காகக் கொண்டு வரும்போது வழியில் மறித்து ஒரு மூடைக்கு 15/- ரூபா வீதம் வசூல் செய்கின்றனர்.

கிழக்கில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலின் போது தமிழ் மக்கள் ரெலோ இயக்கத்தை ஏகோபித்து வாக்களித்து அரசியல் கட்சியாக மாற்றினர். இன்று அதே இயக்கம் பிரதேச அபிவிருத்தியை விடுத்து விவசாயிகளின் அபிவிருத்திக்கு குறுக்கே நிற்பது எவ்வகையில் நியாயம்? கிழக்கில் பல நெல் வயற்பிரதேசங்கள் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியிலே தான் உள்ளன. எனவே நெற் செய்கைக்கு வேண்டிய எரிபொருள், உரவகைகள், மருந்துகள் எடுத்துச் செல்ல இராணுவ தரப்பில் கட்டுப்பாடே உள்ளது. அதை நிவர்த்தி செய்ய தனது பிரதேச அபிவிருத்தி கருதி ரெலோ நடவடிக்கை எடுக்கவே இல்லை.

இன்று பல வழிகளிலும் நொந்து போயுள்ள தமிழர்கள் தமது விவசாய முயற்சிகளை முன்னெடுக்கும் வகையில், ஏறாவூர் பகுதி முஸ்லிம் வர்த்தகர்களிடம் பணம், விதைநெல், உரம், மருந்து வகைகள் போன்ற பலவகையான பொருட்களையும் கடனாகப் பெற்று மேலதிகச் செலவிற்குட்பட்டுள்ளார்கள்.

மிதவாத அரசியல் கட்சிகளாக மாறியுள்ள இயக்கங்கள், தமது பிரதேச அபிவிருத்தி கருதி விவசாயிகளுக்கென பணம், விதை நெல், மருந்து, உரம் போன்றவற்றை கடனாகவேனும் வழங்கி உதவும் என எதிர்பார்க்கையில், கடும் மழை, நோய் மத்தியில் காத்து- விளைவித்து எடுத்த நெல்லைக் கொண்டுவரும்போது ஏதோ தடைசெய்யப்பட்ட கள்ளப் பொருளை கண்டு பிடிக்க இருப்பவர்கள்போல, கதிரை போட்டு அமர்ந்து காசு பறிப்பது எவ்வகையில் நியாயம்? ஐயா! அரசியல் தலைவர்களே! உங்களுக்கே இது சமர்ப்பணம். தமிழரின் தலைவிதியை யார்தான் மாற்றியமைப்பார்?

கே.மகேசன்–செங்கலடி.

# யாழுக்கு வெளியே பரீட்சை

(திருமலை நிருபர்)

வட இலங்கை சங்கீத சபை ஐந்தாம் ஆறாம் தரப் பரீட்சைகளை யாழ்ப்பாணத்துக்கு வெளியிலும் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோருகிறார்கள், பரதம், சங்கீதம் ஆகிய துறைகளில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள்.

நாடு அமைதியாக இருந்த நாட்களில் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் இப் பரீட்சைகள் நடைபெற்று வந்தன. நான்காம் தரம் வரை சித்தியெய்திய மாணவர்கள், தமது அடுத்த நிலைப் பரீட்சைகளை விரும்பிய இடத்தில் அச்சமின்றியும் அதிக பொருட் செலவின்றியும் எடுக்கக்கூடியதாக இருந்தது.

கடந்த பல வருடங்களாக இப்பரீட்சைகள் யாழ்ப்பாணத்துக்குள் மாத்திரமே முடக்கப்பட்டுவிட்டன. இதனால் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாணவர்கள் பரதக் கலையிலோ, சங்கீதத் துறையிலோ நான்காம் தரத்துக்கு மேற் செல்ல முடியாமல் இடைநடுவில் கல்வியை நிறுத்த வேண்டியவர்களாகிறார்கள். இலக்கை எட்டாமல் இடைநடுவில் கல்வியை விடுவதால் ஏற்கனவே சித்தியடைந்த தரங்களும் பெறுமதியற்றவையாகி விடுகின்றன.

ஒரு கலைத்துறைப் பரீட்சைக்காக ஆயிரக்கணக்கில் செலவு செய்வதும் ஆபத்துக்களை எதிர்கொள்ளுவதும் எவ்வகையிலும் நியாயமாகாது.

எனவே வட இலங்கைச் சங்கீத சபையால், வெளிமாவட்ட மாணவர்களின் நலன் கருதி தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென பரத, சங்கீத கலையார்வலர்கள் கேட்டுக்கொள்கிறார்கள்.

# அரச வாகனங்கள் சொந்தச் சொத்தா?

அரச திணைக்கள வாகனங்களைச் 'சொந்த உபயோகத்துக்காக' என்று வைத்துக் கொள்ள முடியுமா? 'முடியும்' என்கிறார் திருக்கோணமலை வீதி அபிவிருத்தித் திணைக்கள அதிகாரியொருவர். இந்த விடயத்தை எழுத்திலும் தைரியமாகக் கொடுத்திருக்கிறார்.

வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு இரண்டு வாகனங்களே உள்ளன. பழைய மகேந்திரா ஜீப் ஒன்று, மற்றது புதிய பிக்-அப் ஒன்று.

பிரதம பொறியியலாளரோ மகேந்திரா ஜீப்பை மட்டும்தான் திணைக்களப் பயன்பாட்டுக்கு கொடுத்திருக்கிறார். பிக்-அப் வாகனத்தைத் தன் தனிப்பட்ட தேவைக்காகவே பயன்படுத்தி வருகிறார். அவசர நிலையில் வாகனம் தேவைப்பட்டாற்கூட "அது எனது உபயோகத்துக்குள்ளது" என்று கூறி ஏனைய உத்தியோகத்தர்களின் பணித்தேவைகளுக்குக் கொடுக்க மறுத்து வருகிறார்.

"இவர் அரச வாகனத்தைச் சொந்தத் தேவைக்கு வைத்துக்கொள்ளும் தகைமையுடைய அதிகாரியல்ல, இவர் செய்வது அடாத்தானது," என்கிறார்கள் திணைக்கள உத்தியோகத்தர்கள்.

"மாகாண சபையில் யார் யோக்கியமாக நடக்கிறார்கள், நான் யோக்கியமாக நடப்பதற்கு?" என்று இந்த அதிகாரி நினைக்கிறாரோ என்னவோ?

# யார் அவர்?

திருக்கோணமலையில் மரியதாஸ் என்பவர் தன்னை முரசின் நிருபராகக் கூறித்திரிகிறார். சில பாடசாலைகளில் சென்றும் தன்னை 'முரசு' நிருபராக கூறி பிரச்சனை கிளப்பியுள்ளார்.

இவர் போன்ற ஒருவரை 'முரசு' நிருபராக வைத்திருக்க மாட்டாது என்பது எம்து உறுதியான நம்பிக்கை. எனினும் இதனை தாங்கள் தெளிவுபடுத்துவதே நல்லது.

இங்கு மட்டுமல்ல வேறு பகுதிகளிலும் போலி நபர்கள் தலையெடுக்காது இருக்கவும் ஏதுவாக இருக்குமல்லவா?

கே.சபாபதி- திருமலை.

# ஆசிரியர் நியமனங்கள்
## ஏன் இந்தப் பாரபட்சம்?

(கண்டி நிருபர்)

தமிழ்மொழி ஆசிரியர் தொடர்பான ஹரிஸ்பத்துவ உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள வெற்றிட விபரங்களை கல்விச் சேவைக் குழுவுக்கு அறிவிப்பதில் காட்டப்பட்ட பாரபட்சம் காரணமாக உகுரஸ்ஸப்பிட்டிய, குருந்து கொல்லை, இனிகலை, எண்டறுதன்னை, பல்கும்புரை ஆகிய கிராமங்களிலிருந்து விண்ணப்பித்த முஸ்லிம் இளைஞர்கள் பெரும் அதிருப்தியடைந்துள்ளனர்.

கண்டி மாவட்ட ஆசிரியர் வெற்றிடங்கள் பற்றி அறிவிக்க வேண்டிய விபரத்தை, மத்திய மாகாண கல்வி அமைச்சின் முஸ்லிம் பிரிவு காட்டிய இந்த அசிரத்தையினால் நியமனம் பெற வேண்டிய பலர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த 17 பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஹரிஸ்பத்துவ செயலாளர் பிரிவில் வெற்றிடம் இல்லையென அறிவிக்கப்பட்டது. பின்னர், வேறு பிரதேச பிரிவுகளிலிருந்து 1.3.98க்கு முன்னர் புதிய நியமனம் வழங்க இருக்கையில் மேற்படி ஐந்து பாடசாலைகளிலும் நிலவி வந்த வெற்றிடங்களைத் திடுதிப்பென பூர்த்தி செய்ததேன்? எனவும் பாதிக்கப்பட்ட இளைஞர்களும் யுவதிகளும் வினவுகின்றனர்.

இப்பிரதேசப் பிரிவில் ஆசிரியர் வெற்றிடங்கள் பல நிலவிய பொழுதே தாம் அப்பிரதேசத்திற்கு விண்ணப்பித்து பரீட்சை எழுதியதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். தமக்கு விண்ணப்பிக்கும் தறுவாயில் இருந்த வெற்றிடங்களுக்கு நியமனங்களை வழங்க வேண்டுமெனவும் மகஜர் ஒன்றின் ஊடாக கல்வி- உயர் கல்வி அமைச்சரைக் கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக கல்விச் சேவை ஆணைக் குழுவையும் சந்தித்து தமக்கு ஏற்படுத்தப்பட்ட அநீதி குறித்து நிவாரணம் பெற்றுத் தருமாறும் சிலர் கேட்டுள்ளனர். இதே வேளையில் 331 தமிழ்மொழி ஆசிரியர்களுக்கு மத்திய மாகாண சபையும் 21 பேருக்கு கல்வி- உயர் கல்வி அமைச்சும் நியமனங்களை 1.3.98 தொடக்கம் வழங்கியுள்ளது.

# போலி நிருபர்!

திருமலையில் மரியதாஸ் என்னும் ஒரு நபர், தன்னை முரசின் நிருபராகக் கூறிவருவதாகத் தகவல் கிடைத்துள்ளது. எமது திருமலை நிருபரிடம் பலர் புகார் தெரிவித்துமுள்ளனர். அவ்வாறான ஒருவருடன் முரசுக்கு எவ்வித தொடர்பும் கிடையாது.

'முரசு' நிருபர்கள் தங்களை இன்னாரென்று இனம் காட்டிக் கொண்டு தம்பட்டம் அடிப்பதில்லை. அவ்வாறானவர்கள் 'முரசு' நிருபர்களாகவும் இருக்க மாட்டார்கள். முரசின் வழி தனி வழி.

-ஆ.ர்.

# இது நியாயந்தானா?

பயிலுநர் ஆசிரியர்களாக 01.01.1990ல் நியமிக்கப்பட்ட 35000 பேர்களின் நிலை முழு நாடும் அறிந்ததே. இவர்களின் துயரம் எப்படிப்பட்டது என்று முரசுகூட இதற்கு முன் செய்தி வெளியிட்டிருந்தது.

இவ்வாசிரியர்கள் தொலைக்கல்வி மூலம் பயிற்சி பெற்று 1995.08.01முதல் பயிற்றப்பட்ட ஆசிரியர் சான்றிதழ்களும் பெற்றுள்ளனர். ஆனால் பல பகுதிகளில் இதுவரை பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்குரிய சம்பளம் கொடுக்கப்படவில்லை. அதிலும் பல தேசியப் பாடசாலைகளில் கடமையாற்றுபவர்களுக்கு மாத்திரம் சம்பளம் அதிகரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. ஏன் இந்தப் பாரபட்சம்? மாகாண சபைகளுக் குக்கீழ் சிறு பாடசாலைகளில் சேவை புரிபவர்கள் ஆசிரியர்கள் இல்லையா? இவர்கள் புறக்கணிக்கப்படலாமா? இது நியாயமா?

ஏ.யூ.எம்.நிஸான் அலி-பசறை.

# ஏன் இந்த நிலைமை

சனிக்கிழமைகளில் 9.15க்கு தற்போது ஒலிபரப்பாகி வரும் சிங்களவர்களும் தமிழர்களும் இணைந்து நடித்த "யுக விலக்குவ" என்ற தொலைக்காட்சி நாடகம் அருமையாக இருந்த போதும், பேச்சுத்தமிழை கொச்சைப்படுத்துவதுதான் வேதனைக்குரிய விடயம். ஏன் தமிழுக்கு பஞ்சமா? அல்லது தமிழ் மக்களுக்கு பஞ்சமா? எமது நாட்டில் எவ்வளவு தமிழ் மக்கள் இருந்தும் இவ்வாறான அவல நிலை கண்டு தமிழ் மக்களாகிய அனைவரும் வேதனைப்படக்கூடிய விடயமே! இனியும் இவ்வாறான நிலை உருவாகக்கூடாது. சம்பந்தப் பட்டோர் கவனம் செலுத்துவார்களா?

பரிமளகாந்தி கந்தையா.நாவுஓயா.

## விளம்பரப் பகுதி


கொழும்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்குவதில் முன்னோடி....

நாகூர் டிரவல்ஸ் & டுவர்ஸ்

★ குவைத் ★ டுபாய் ★ சவூதி அரேபியா ★ ஜோர்தான் ★ சிங்கப்பூர் நாடுகளில் ஆண், பெண் இருபாலாருக்கும் ஏராளமான வேலைவாய்ப்புக்கள் - இன்றே நாடுங்கள்

NAGOOR Travels & Tours

33 DIAS PLACE, GUNASINGHEPURA, COLOMBO - 12.

அங்கீகார இல: 1094

☎ 439392

Royal - 071-35132



மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPHY)

வவுனியாவிலும் சந்திக்கலாம்

இளைஞர்களே! மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை. இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

SEXUAL DISORDERS

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான்வீரியம் உள்ள ஆண் மகனாகிவிட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் வசிப்போருக்கு

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான விளக்கத்துடன் கடிதத் தொடர்பு மூலம் அறிவித்தால் மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாதுபெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்) மட்டக்களப்பு விலாசத்துக்கு மட்டும் கடித தொடர்பு கொள்ளவும்.

மட்டக்களப்பு விலாசத்துக்கு மட்டும் கடித தொடர்பு கொள்ளவும்

மனநிலை பாதிப்புக்கள்; மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம் பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நேர்க்கும் குழந்தைப்பேறு இன்மைக்கும், தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.

கவனத்திற்கு! புதிய செல்டெல் No. 072-609388

கொழும்பில் மார்ச் 22 முதல் 29 வரை

DR.P.ARUMUGAM
AHAMED TOURIST INN
BANG BANG BUILDING No. 10, Reclamation Road, (entrance: Bankshall St, Opposits Ranjanas) Colombo-11.
T.P. 436383, 436390.

கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 072-609388
கொழும்பில் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

ஓட்டமாவடியில் ஏப்ரல் 2, 3ம் தினங்களில்

Dr. முகைதீன் டிஸ்பென்சரி, ஓட்டமாவடி. T.P.065-57345

கல்முனையில் ஏப்ரல் 4,5,6ம் தினங்களில்

T.M.M. பாமசியிலும் T.P.065-29329

வவுனியாவில் ஏப்ரல் 10,11,12ம் தினங்களில்

வவுனியாவில் (2ம் குறுக்குத்தெரு) ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, VANNI INN இல் சந்திக்கலாம். T.P.024-22074ல் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

மற்றைய நாட்களில் Dr.P.Arumugam No.33. Tissa Weerasingam Sq., Boundary Road, Batticaloa விலும் சந்திக்கலாம்.


## 31ம் நாள் நினைவஞ்சலி



அமரர் தம்பு சுந்தரலிங்கம்
(ஆவரங்கால் சிவன் வீதி)

மலர்வு–6.7.1945 உதிர்வு–30.1.1998

அன்பிலே மகிழ்ந்தோம்
பண்பிலே நிறைந்திருந்தோம்
ஆலமரம்போல் நிழல்தந்து–எம்மை
ஆளாக்கி விட்ட உங்களை
பார்ப்போம் மறுபடியும் என்றிருந்தோம்
பாதியிலே எம்மை விட்டு
பறந்தது ஏனப்பா
நீங்கள் எங்களை விட்டு
பிரிந்தாலும் நீங்காது என்றும்
உங்களின் நினைவுகள்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.
எமது துக்கத்தில் நேரிலும் தொலைபேசிமூலமும் கலந்துகொண்ட உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி பகிர்கின்றோம்.

தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளை
நோர்வே, டென்மார்க், இந்தியா.


பழுது பார்த்தல்

நவீன கொம்பியூட்டர் முறை, மிக விரைவான சேவை

ஸ்டில் கெமரா,
வீடியோ கெமரா,
பிளாஷ்கன்

டீவி, வீடியோ,
ஹய்-பை-ரேடியோ,
சீ.டீ. பிளேயர்,
வீடியோ
புரொஜெக்டர்

பெக்ஸ் மெஷின்,
கோட்லஸ் போன்

இலெக்ட்ரோனிக்
டைப்ரைட்டர், பிளண்டர்,
மைக்ரோ வேவ் அவன்,
புளோர் பொலிசர்,
வோஷிங் மெஷின்,
குளிர்ச்சாதனப் பெட்டி,
மற்றும் வீட்டு பாவனை
உபகரணங்கள்




டர்ஸ்ட் இலெக்ட்ரோனிக்ஸ்

364, காலி வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3. போன்: 575480
(P.G. மார்ட்டிலுக்கு எதிரிலும், ஹோட்டல் ரேணுகா அருகிலும்) (கடல் பக்கம்)



8 வது குழுவுக்கு புதிய மாணவர்கள் சேர்வதற்கான அரிய சந்தர்ப்பம்

D. S. INN DANCING ACADEMY

திருவனந்தால் 7 மாத மேலைத்தேய இந்தி, சினிமா நடன பாடநெறி

- Disco
- Raff
- Rock
- Ballet
- Jive
- Bharatha
- Jazz
- Indian Film Dancing
- Sinhala
- Western
- Hindi
- Tamil Songs

ஆகிய பாடல் தாளங்களுக்கு ஏற்ப பயிற்றப்படும்

நடன விரிவுரையாளர் திலும் சேனாதிர

- நடன பாடநெறியை கற்பதற்கு வயதெல்லை வரையறுக்கப்பட மாட்டாது. (6 தொடக்கம்)
- நடனக்கலையில் அனுபவம் உள்ளவர்கள், அனுபவம் இல்லாதவர்கள் இருபாலாரும் சேர்த்துக் கொள்ளப்படும்.
- பாடநெறியை திறமையாக முடிப்பவர்களுக்கு சிறப்புச் சான்றிதழ் வழங்கப்படும்.
- திறமையான மாணவர்களுக்கு D. S. DANCE INN SUPER ல் உட்பட சினிமா, ரூபவாஹினி, மேடை ஆகியவற்றில் பங்குபற்ற சந்தர்ப்பம் வழங்கப்படும்.
- நீங்கள் எதிர்பார்க்கும் சாஸ்திரிய நடனகலைஞர் ஆவதற்கோ, சினிமா, ரூபவாஹினி, மேடை ஆகியவற்றில் நடன கலைஞர் ஆவதற்கோ இவற்றுடன் திருமண, வைபவங்களில், வினோத நேரங்களில் உட்பட சகல நேரங்களிலும் நடனம் ஆட சங்கடமாக இருப்பின் நடனம் தொடர்பான அறிவை வளர்த்துக் கொள்ள அரிய சந்தர்ப்பம்.

இவற்றுடன் உடல் நலத்தை பேணவும், உடலைக் கட்டுப்பாட்டுடன் பேணவும், சரீரத்தின் அழகைபாதுகாப்பதற்கும் தேவையானசந்தர்ப்பங்களில் அறிவுரைகள் வழங்கப்படும்.

Colombo, Kadawatha, N.Eliya, Horana, Gampha, Matugama ஆகியஇடங்களில் வாரநாட்கள் உட்பட விடுமுறை நாட்களிலும் வகுப்புகள் நடத்தப்படும்.

மேலதிக விபரம் தொடர்பாக தங்களின் விலாசம் உட்பட 9x4 அளவுள்ள முத்திரையுடன், கடித உறை ஒன்று அனுப்பி தெரிந்துக் கொள்ளவும்.

D. S. INN DANCING ACADEMY
Nickado City, Kandy Road, Kadawatha.



மலையாள மாந்திரீகம்

உலக மாந்திரீக சக்கரவர்த்தி
பி.கே.சாமி J.D.G.R.N.& JP
ஸ்ரீதுர்க்கா தேவி மாந்திரீக உச்சாட பீடம்
இல.162, கொட்டாஞ்சேனைவீதி, மே.பீல்ட் றோட், கொழும்பு-13.
வெளி நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கங்கள்:
FAX-00941342464
TEL-00941431137
உள் நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:
342463, 344831



மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் நிறைவேறாத பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சியும், வெற்றியும் பெறுவதற்கு மட்டக்களப்பு மாந்திரீக சக்தி உதவி புரியும். பரம்பரை வைத்திய நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் விபரங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். இரகசியம் வெளியாகாது.

DR. A.P.S. KUTTY
50, THEATRE ROAD, NINTAVUR-21 SRI LANKA.



காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலனைகளை

ரிஷி. S. மணி

மூலம் அறிய வாருங்கள் வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

S. MANI
144 2/1, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 6.
T.P. 586218




படிப்பகம்

www.padippakam.com

# பத்துமாதச் சமர்?
## சாத்தியப்படாத காலவரையறை

ஜயசிக்குறுய் படை நடவடிக்கையை 13.05.97ல் ஆரம்பிக்க முன்னர், மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான தரைப்பாதை ஒன்றை அமைப்பது பற்றியும் ஆராயப்பட்டது.

ஆனால், அரசினது நோக்கம் வெறுமனே தரைப்பாதை ஒன்றைத் திறப்பதல்ல. யாழ்ப்பாணத்துக்கான தரைப்பாதை அமைக்கப்படுவதால் அரசுக்குக் கிடைக்கும் சாதகங்கள் இரண்டு.

**ஒன்று:** வடபகுதியை தமது நேரடி நிர்வாகப் பிடியில் வைத்திருக்கலாம்.

**இரண்டு:** வட பகுதியில் உள்ள படை முகாம்களுக்கான தரைவழி விநியோகத்தை மேற்கொள்ளலாம்.

மேற்கண்ட இரண்டு சாதகங்களும் நிரந்தரமாக இருக்க வேண்டுமானால், புலிகளை வீழ்த்தியாக வேண்டும்.

மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான தரைப்பாதையை அமைக்க முற்பட்டால் புலிகள் எதிர்ப்புக் காட்டாமல் இருந்து விடவும் கூடும்.

**எனவே, புலிகளையும் பலவீனப்படுத்திக் கொண்டு, தரைப்பாதை ஒன்றையும் திறப்பதற்கான நடவடிக்கையிலும் இறங்கவே அரசு திட்டமிட்டது. கல் ஒன்று, கனி இரண்டு.**

அதனால்தான் புலிகளின் பிரதான தளப்பகுதியை ஊடறுத்துச் செல்லும் வவுனியா-யாழ் சாலையில் படை நகர்வை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

**இச் சாலையைப் பிடித்துவைத்துக் கொண்டு புலிகளின் பிரதான தளத்தின் இதயப்பகுதியான முல்லைத்தீவை முற்றுகையிடலாம்: புலிகளின் அணிகளை சண்டைக்கிழுத்து பாரிய அழிவுகளை உண்டாக்கலாம், தங்கள் தளத்தைக் காப்பாற்ற வடக்கு-கிழக்கின் ஏனைய பகுதிகளில் உள்ள புலிகளை முல்லையில் ஒன்று குவிப்பர். அதனால் ஏனைய பகுதிகளில் புலிகள் கவனம் செலுத்த முடியாமல்போகும் என்றெல்லாம் பல்வேறு கணக்குகளுடன் 'ஜயசிக்குறுய்' ஆரம்பமானது.**

ஆக, 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையின் பிரதான இலக்கு தரைப்பாதை திறப்பல்ல. வன்னியில் புலிகளின் பலத்தை அழித்தொழிப்பதும், அதன் மூலம் அரசின் இராணுவ மேலாண்மையை நிறுவிக் கொள்ளுதலுமே பிரதான நோக்கமாகும்.

இந்த இராணுவ மேலாண்மையை வைத்து, தென்னிலங்கையில் தன் அரசியல் தளத்தை கெட்டிப்படுத்தி, அறுதிப் பெரும்பான்மையை பெறக்கூடியதாக தனது வாக்கு வங்கியை பெரிதாக்கும் கனவுடன் அரசு காத்திருந்தது.

**புலிகளை ஓரம் கட்டிவிட்டால் தந்ததை வாங்கி தலை குனிந்து நிற்கக்கூடிய தமிழ் பேசும் கட்சிகளிடம் தன் கையில் உள்ள அரை குறைத் தீர்வுப் பொதியைக் கொடுத்து பாராட்டி ஏற்கச் செய்யலாம் என்பதும் அரசுக்கு நன்கு தெரிந்திருந்தது.**

குறைந்தது மூன்று மாதகாலத்தில் பிரதான நோக்கத்தை நிறைவேற்றிவிடலாம் என்ற நம்பிக்கையோடுதான் 'ஜயசிக்குறுய்' தொடங்கப்பட்டது.

**தற்போது பத்துமாதங்களாகிவிட்டன. 'ஜயசிக்குறுய்' இடை நடுவே தொங்கிக் கொண்டிருக்கிறது. புலிகளை பலவீனமாக்கி, சிறு குழுவாக மாற்றி விடலாம் என்ற திட்டத்தோடு ஆரம்பமான 'ஜயசிக்குறுய்' புலிகளை மரபுப் போரில் கைதேர்ந்த படையணியாக மாற்றிக் கொண்டிருக்கிறது.**

முன்னர் திட்டமிட்டபடி வவுனியா-யாழ் சாலை வழியாக புளியங்குளம் சந்திக்கு அப்பால் படைகள் நகரவே முடியவில்லை. அதன் பின்னரே பிரதான சாலைக்கு கிழக்கேயும், மேற்கேயும் உள்ள உட்புற பாதைகள் வழியாகவும் பரந்தும் விரிந்தும் பல முனைகளில் இருந்தும் படை நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

**ஆக, பிரதான நெடுஞ்சாலையில் நடைபெற்ற சமர்களில் படைத்தரப்புக்கு ஏற்பட்ட தோல்வியானது கெரில்லாப் போரும், மரபுப் போரும் இரண்டறக் கலந்த புலிகளின் போர்முறைக்கு கிடைத்த வெற்றியாகும்.**

தற்போது வவுனியா-யாழ் பிரதான நெடுஞ்சாலைப் பாதையில் முன்னேறும் முயற்சியை கைவிட்டு, உட்பாதைகள் வழியாக மாங்குளம் நோக்கிய நகர்வுகளிலேயே படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

'ஜயசிக்குறுய்' படை நடவடிக்கை ஆரம்பமான பின்னர் படைத்தரப்பு வெளியிட்ட போர்க்களச் செய்திகள் புலிகளின் படையணிகளை இன்னொரு நாட்டு தேசிய இராணுவம் என்று அங்கீகரிப்பது போன்றே இருந்தன.

உளவு விமானம் மூலம் படம் பிடித்தல், புலிகளின் கேந்திர நகர்கள் என்று தம்மால் பிடிக்க முடியாத பகுதிகளை விபரித்தல், பலியான வர்களது உடல்களை பரிமாற்றம் செய்தல், தாக்குதல்களை வீடியோ படம் எடுத்து தொலைக்காட்சிகளில் காண்பித்தல் போன்றவை அனைத்தும் இன்னொரு நாட்டு படையுடன் சமர் நடப்பது போன்ற தோற்றப்பாட்டையே ஏற்படுத்தியுள்ளன.

புலிகளைப் பயங்கரவாதிகள் என்று கூறும் அதே வெகுஜனத் தொடர்பு சாதனங்கள்தான், புலிகளால் படையினரின் சடலங்கள் ஒப்படைக்கப்பட்டதையும், அதேபோல படையினரால் புலிகளின் சடலங்கள் ஒப்படைக்கப்பட்டன என்றும் கூறி வருகின்றன.

**இதுதான் வேடிக்கை: புலிகள் பயங்கரவாதிகள் என்றால், அவர்களது சடலங்களை படையினர் ஒப்படைக்க வேண்டிய காரணம் என்ன?**

புலிகளைப் பொறுத்தவரை அரச படையினரை இன்னொரு தேசப் படைகளாகக் கருதியே சண்டை போடுகின்றனர். எனவே, போரில் பலியாகும் படையினரின் உடல்களை பூரண மரியாதையோடு ஒப்படைக்கின்றனர்.

**போரில் பலியான வீரர்களது உடல்களை** பரிமாறுதல், போர்க்கைதிகளை பரிமாறுதல் போன்றவை இரண்டு தேசங்களின் இராணுவங்கள் போரிடும்போது கடைப்பிடிக்கப்படும் நடைமுறைகளாகும்.

வன்னிப் போர் முனையானது புலிகளின் இராணுவத்திறன் தொடர்பான பிரமிப்புக்களை படைத்தரப்பின் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.



ஆளில்லாத உளவு விமானம

இது UAV-SR ரக ஆளில்லாத உளவு விமானம். வீடியோக் கமராவை தன் உடம்பில் வைத்திருக்கும். ஐ.ஏ.ஐ. என்றழைக்கப்படும் இஸ்ரேலிய விமானத் தொழிற்சாலையில் உருவானது. இரவிலும், பகலிலும் வேவு பார்க்கக்கூடியது. இதன் பிரதான பலவீனங்கள், கண்ணுக்குத் தெரியும், விமான எதிர்ப்பு ஆயுதங்களால் வீழ்த்தப்படக்கூடியது.

**பல முனைகளில் முன்னேற முயன்றும் நகரமுடியாமல் புலிகளின் கவனம் சகல திசைகளிலும் கூர்மையாக பதிந்திருப்பது போர்க்கள ஆச்சரியம்.**

தம்மைவிட பத்துப் பதினைந்து மடங்கு ஆட்பல, ஆயுதபல வலிமையுள்ள துருப்புக்களை எதிர்த்து புலிகள் தாக்குப்பிடித்து நிற்பது ஏதோ மந்திர தந்திரம் போல இருப்பதாக இராணுவ விமர்சகர்கள் சிலர் வாயைப் பிளக்கிறார்கள்.

**அரசுக்கும், படைகளுக்கும் 'ஜயசிக்குறுய்' ஆரம்பமானபோது இருந்த உற்சாகத்திலும், நம்பிக்கையிலும் முக்கால் பங்கு இப்போது காணாமல் போய்விட்டது.**

அதனால் தமது முன்னைய பிரதான நோக்கத்தை கைவிட்டு, பிரசார இலாபத்துக்கு தோதாக படை நடவடிக்கைகளை மாற்றியுள்ளனர்.

**புலிகளை அழித்தொழிப்பது, அலைந்து திரியும் சிறு குழுவாக மாற்றுவது என்ற இலக்குகளை எட்ட முடியவில்லை. அந்த பிரதான நோக்கத்தை நிறைவேற்ற பல்லாயிரம் 'ஜயசிக்குறுய்' படைகளாலும் முடியவில்லை.**

மாறாக, பொல்லைக் கொடுத்து அடி வாங்கிய கதையாக, மரபுப் போருக்கான படைக்கலங்களையும், அனுபவத்தையும், உளவியல் ரீதியான உற்சாகத்தையும் கடந்த பத்துமாத கால சமரில் படையினர் புலிகளுக்கு வழங்கியிருக்கின்றனர்.

'தங்கள் தளப்பகுதியை ஊடறுத்து தரைப்பாதை திறக்கும் படை நகர்வைக் கண்டு புலிகள் நிதானமிழப்பர்; அதனால் மூர்க்கமான மோதல்களில் முட்டாள்தனமாகக் குதிப்பர் என்றே முதலில் படைத்தரப்பு எதிர்பார்த்திருக்கும்.

**ஆனால், புலிகள் மிக நிதானமாகவும், சாதுரியமாகவும் 'ஜயசிக்குறுய்' படையினருடனான சண்டைகளை திட்டமிட்டனர். களத்தின் தரையமைப்புக்கு ஏற்ப அரண்கள் அமைத்தும், தாக்குதல் முறைகளைத் தீர்மானித்தும் படை நகர்வை எதிர்கொண்டனர்.**

அதனால்தான் ஓமந்தைக்குப் பின்னர் ஒவ்வோர் அங்குலத்தையும் ஜயசிக்குறுய் படைகள் பாரிய இழப்புக்கள், பல நாள் மோதல்களின் பின்னரே கடக்க வேண்டியதாக இருந்தது.

புலிகளின் கள அனுபவம் சார்ந்த சண்டை உத்திகள், மூர்க்கமான தாக்குதல்கள் என்பவற்றால் தமக்கு பாரிய இழப்புக்கள் ஏற்பட்டபோது, **சண்டை நடக்கும் பகுதிகளை புலிகளின் கேந்திர நகர்களாக படைத்தரப்பு சித்தரித்தது.**

**முதலில் ஓமந்தையை புலிகளின் பிரதான கேந்திர நகர் என்று கூறினர். பின்னர் புளியங்குளத்தை கூறினர். அதன்பின்னர் கனகராயன் குளத்தைச் சித்தரித்தனர். தற்போது மாங்குளத்தைப் பற்றி பிரமாண்டமாக சித்தரிக்கத் தொடங்கியுள்ளனர்.**

தரைப்பாதை திறக்கப்படுகிறதோ இல்லையோ, சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் மாங்குளத்தைப் பிடித்துவிட்டாலேபோதும் என்று துடியாய்த் துடிக்கிறது படைத்தரப்பு.

மாங்குளம் பிடிபட்டால் அதனை பெரிய வெற்றியாக சித்தரித்து, பிரமாதப்படுத்தத் தோதாக, மாங்குளத்தைப் பற்றிய பிரமிப்பான சித்தரிப்புக்கள் கூறப்பட்டு வருகின்றன.

**உண்மையில், மாங்குளத்தைப் பிடிப்பதாலோ, அல்லது தரைப்பாதையைத் திறப்பதன் மூலமோ வன்னிச் சமர் முடிவடையப் போவதில்லை.**

தரைப்பாதை திறக்கப்பட்டால்கூட அதனை எதிர்கொண்டு அதற்கேற்ற நகர்வுகளை மேற்கொள்ளும் திட்டங்களை மூன்று மாதத்தின் முன்னரே புலிகள் வகுத்துவிட்டனர்.

ஆனால் படைத்தரப்பு நினைப்பதுபோல சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் தரைப்பாதை திறப்பு சாத்தியப்படப்போவதில்லை.

மாங்குளத்தில் இருந்து கிளிநொச்சி நகர் 30 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. கிளிநொச்சி நகரின் மத்திய பகுதிவரை இப்போது புலிகளின் கையில் இருக்கிறது.

**ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம், கைவிடப்பட முடியாத படை நடவடிக்கையாக ஜயசிக்குறுய் மாறியுள்ளது. எப்பாடுபட்டாவது கிளிநொச்சிவரை சென்று அதனை தொலைக்காட்சியில் காண்பித்தால் போதும், என்ற அரசியல் நிர்ப்பந்தத்தில் 'ஜயசிக்குறுய்' படைகள் சிக்கியுள்ளன.**

படை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதும், பின்னர் சில கைவிடப்படுவதும் வழக்கமானதுதான். ஆனால், 'ஜயசிக்குறுய்' இடை நடுவே கைவிடப்பட்டால் ஆளும் தரப்புக்கு அரசியல் நஷ்டம் ஏற்படும். எனவே என்ன விலை கொடுத்தாவது கிளிநொச்சியை போய்த் தொட்டுவிட வேண்டிய இக்கட்டுக்குள் படைத்தரப்பை நிறுத்தியுள்ளது ஆளும்தரப்பு.

முச்சிமுத்தாவது போய் முட்டியாக வேண்டும்.

இதனை புலிகளும் கணிப்பிட்டு அதற்கேற்ப தமது உத்திகளை வகுத்துள்ளனர். அரசின் அரசியல் நோக்கத்துக்காக வலுக்கட்டாயமான நகர்வில் ஈடுபடும் படையணிகள் என்றாவது ஒருநாள் கிளிநொச்சியைத் தொட முடிந்தால் மிகப் பலவீனமான, களைத்துப் போன படையணிகளாகச் சென்று சேரத்தான் புலிகள் அனுமதிப்பார்கள்.

**அவ்வாறான மெலிந்துபோன படையணியால் தரைவழிப்பாதையை தக்கவைக்க முடியாது என்பதுடன், புலிகளின் தொடரும் ஊடறுப்புத் தாக்குதல்கள், முற்றுகைத் தாக்குதல்கள் என்பவற்றை தாக்குப்பிடிக்க முடியாமலும் இருக்கும்.**

தற்போது வன்னியில் 'ஜயசிக்குறுய்' படைகளுடன் புலிகள் நடத்தும் சமர் இரு கட்டங்களைக் கொண்டது.

**கட்டம் ஒன்று:** படையணிகளுக்கு பாரிய உயிர்ச் சேதங்கள், படைக்கல இழப்புக்கள் என்பவற்றை ஏற்படுத்துவது.

படிப்படியான சண்டைகள், ஊடறுப்புக்கள், நிலப்பகுதிகளை கைப்பற்றும் முயற்சிகளை தடுத்து தாக்குதல் போன்றவை கட்டம் ஒன்றுக்குள் அடங்கும். தற்காப்பு, தாக்குதல் என்ற இரண்டு குணாம்சங்களையும் கொண்டதாக புலிகளது நடவடிக்கைகள் அமையும்.

**கட்டம் இரண்டு:** பாரிய இழப்புக்களால் களைத்து மெலிந்து போன படையணிகளைக் அழித்தொழித்தல். பாரிய படைக்கலங்களை கைப்பற்றுதல்.

கட்டம் ஒன்றுதான் தற்போது நடந்து கொண்டிருக்கிறது. ஒவ்வோர் அங்குல நிலத்தையும் தமது தரப்பில் பாரிய சேதங்களுடன்தான் படைத்தரப்பு கடந்தாக வேண்டி இருக்கிறது.

**படைச் சிப்பாய்கள் மட்டுமல்ல, அதிகாரிகள் மட்டத்தில் உள்ள பலரும் பலியாகியும், காயமடைந்தும் வெற்றிடங்கள் ஏற்பட்டு வருகின்றன.**

கடந்த ஒரு மாதகாலமாக மாங்குளம் நகரை நோக்கிய நகர்வுகளில் ஜயசிக்குறுய் படையணியினர் ஈடுபட்டுள்ளனர்.

மாங்குளம்- ஒட்டிசுட்டான் வீதியில் உள்ள கரிப்பட்டமுறிப்பு பகுதியில் இருந்துதான் பிரதான நகர்வு முயற்சிகள் நடக்கின்றன.

கரிப்பட்டமுறிப்பில் இருந்து மாங்குளம் நகர் பத்துக் கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. எனினும் படையினர் ஏற்கனவே நிலைகொண்டுள்ள பகுதியில் இருந்து கிட்டத்தட்ட ஏழு கிலோ மீட்டர் தூரத்தைக் கடந்தால் மாங்குளம் நகர் வரும்.

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

அந்த ஏழு கிலோ மீட்டர் தூரத்தைக் கடக்க, ஆட்டிலெறிப் பீரங்கி படையணிகள், கனரக வாகனங்கள், விமானக் குண்டுவீச்சுக்கள் சகிதம் கடந்த ஒரு மாதகாலமாக முயன்று வருகின்றனர்.

மாங்குளத்தில் உள்ள புலிகளின் காப்பரண்களும், பதுங்கு நிலைகளும் மிகக் கச்சிதமானவை. அவற்றை அழிக்கும் முயற்சியில் விமானப்படையினர் மூர்க்கமான முயற்சிகளில் இறங்கினர்.

மாங்குளத்தில் புலிகளின் முகாம் ஒன்று தாக்கப்பட்டதாகவும், நூறு புலிகள்வரை கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் செய்திகள் சொல்லப்பட்டன. புலிகள் யாரும் பலியானதாக தகவல் இல்லை. குடியிருப்புப் பகுதிகளே தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

உளவு விமானம் சென்று தகவல் திரட்டிய பின்னர் குண்டு வீச்சு விமானங்கள் சென்று தாக்கியதாக படைத்தரப்பு கூறியது.

ஆளில்லாத உளவு விமானம் பற்றிய தொழில் நுட்பம் யாருக்குத் தெரியப்போகிறது என்ற நினைப்பில் கூறப்படும் தகவல்களே இவை.

**உளவு விமானம் கண்ணுக்குத் தெரியக் கூடியது:** ஒரு பகுதியில் அது நடமாடுகிறது என்றால் அங்குள்ள புலிகள் உஷாராகிவிடுவர். **'உளவு விமானம் வரும் முன்னே, குண்டு வீச்சு விமானம் வரும் பின்னே,' என்று தெரிந்துவிடும்.**

உளவு விமானத்திற்கும் ஏனைய விமானங் களுக்கும் உள்ள முக்கிய வித்தியாசங்கள் இரண்டு.

**ஒன்று: ஆளில்லாத உளவு விமானம் தாக்கப்பட்டால் உயிர்சேதம் இருக்காது.**

**இரண்டு: ஆளில்லாத உளவு விமானம் படம் பிடிக்கும் கமரா இருப்பதால் இலக்குகளை இனம் காண முடியும்.**

ஆனால் உருமறைப்பு செய்யப்பட்ட முகாம்கள் உளவு விமானத்தை ஏமாற்றி விடும். அடர்ந்த காடுகள் ஊடாக ஊடுருவிப் பார்க்கவும் இயலாது.

எனவே, ஆளில்லாத உளவு விமானம் யார் கண்ணிலும் படாமல் செல்லும் விமானமல்ல. கண்ணிலும், ராடார்களிலும் தெரியாத நவீன விமானங்கள் உள்ளன. அவற்றை வாங்குவது என்றால் இன்னும் இரண்டு இலங்கையை அடகு வைத்தாலும் முடியாது. அந்தளவு விலை.

கரிப்பட்டமுறிப்பில் இருந்து மாங்குளம் நோக்கி நகரும் படையினர் இன்னமும்



ஒலுமடு வைக்கூட பூரண கட்டுப்பாட்டில் கொண்டுவர வில்லை. ஆனால் மாங்குளத்தை அண்மித்த பகுதிகளில் மோதல் என்று செய்திகளில் கூறப்படுகின்றன.

கரிப்பட்டமுறிப்பு ஒலுமடுப் பகுதியில் இருந்து மாங்குளம் நோக்கி கடந்த ஒரு மாதகாலமாக மேற்கொள்ளப்பட்ட தரைநகர்வில் புலிகள் தரப்பில் பத்துப் பேர்வரையே பலியாகினர். படையினர் தரப்பில் 70ற்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். இவர்களில் ஆட்டிலெறிப் படைப்பிரிவைச் சேர்ந்த மேஜர் ஒருவரும் பலியாகியுள்ளார்.

ஒருமாத சமரில் மூன்று பிரிகேடியர்கள் உட்பட 150ற்கு மேற்பட்ட படையினர் காயமடைந்துள்ளனர். ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

**இத்தனை இழப்புகள் மத்தியில் கடந்த ஒரு மாத காலமாக ஐந்து கிலோ மீட்டர் தூரம்வரைகூட படையினரால் கடக்க முடியவில்லை.**

இதேவேளை, " வவுனியா-யாழ் நெடுஞ்சாலையில் உள்ள புலிகளையும், மாங்குளம் பகுதியில் உள்ள புலிகளின் அணிகளையும் மேற்குப் புறமாக இழுக்கும் முயற்சியாக மூன்று முறிப்பு, மன்னகுளம் உட் பகுதிகள் ஊடாக படை நகர்வு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**ஆனால், படையினரின் பல முனைகளில் இழுக்கும் தந்திரத்தை ஊகித்து, அந்த முனைகளில் மோட்டார் தாக்குதல்களையே பிரதானமாக நடத்துகின்றனர் புலிகள்.**

புலிகளை பல திசைகளில் இழுத்து பலவீனப்படுத்த முனையும்போது, படையினரும் தவிர்க்க முடியாமல் தமது பலத்தை பல திசைகளில் பிரித்து நிறுத்த வேண்டியதாகிறது. அதனை தமக்கு சாதகமாக்குவதற்காகவே சில முக்கியவத்துவமற்ற பகுதிகளில் படையினர் பரந்து நிலைகொள்ள புலிகள் அனுமதிக்கின்றனர். தமக்கு வசதியான முனைகளில் பாய்ச்சல் நடத்துகின்றனர்.

எதனை புலிகளைப் பலவீனமாக்கும் உத்தியாக படையினர் கருதுகின்றனரோ அதனையே படையினருக்கு எதிரான உத்தியாக புலிகள் மாற்றிவிடுகின்றனர்.

எனவே, சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் தரைப்பாதை திறப்பு என்னும் பிரசார இலாபம் சார்ந்த நோக்கம்கூட நிறைவேறும் என்று தெரியவில்லை. ■

—நாரதர்—



**பாதையை மூடச் சொன்ன** உத்தரவு மட்டும் கடுகதி வேகத்தில் கிடைச்சிருக்குது. திறக்கச் சொன்ன உத்தரவை மட்டும் மாட்டு வண்டியிலோ அனுப்பிவைத்தவை? ஒன்றரை நாள் அல்லோ அந்தா இந்தா என்று இழுத்தடிச்சப் போட்டினம். பேசவிட்டால் தேனொழுகும். பிரச்சனைகளைத் தீர்க்கிறதை மட்டும் சவ்வு மாதிரியல்லோ இழுக்கினம்!

**பன்னிரண்டு பெண் புலிகளைக்** கொண்ட அணி ஒன்று கிளிநொச்சி-பரந்தன் சமரில் படையினரின் வியூகத்திற்குள் சிக்கியது. அதில் ஒரு பெண்புலி உயிருடன் பிடிபட்டதாக தெரிகிறது என்று நமது நாரதர் கூறியிருந்தாரல்லோ? படைத்தரப்பே வெளியே சொல்லாத சேதி அது. தற்போது உறுதியாகிவிட்டது பார்த்தியளோ? அந்தப் பெண் புலியைத்தான் தொலைக்காட்சியில் பேட்டி எடுத்து செம அறுவை நடத்திப் போட்டினம். கேள்வியையும் கேட்டு அதுக்குக் கூற வேண்டிய பதிலையும் சொல்லிக் கொடுத்த சத்தமும் நம் காதில் விழுந்தது. அதுசரி- தமிழில் கேள்வி தொடுக்க ஆளே கிடைக்க வில்லையோ? பின்னால் நின்று பதில் சொல்லிக் கொடுத்த 'டமிலரும்' தன் குரலைக் காட்ட விரும்பவில்லையாக்கும்!

**அரச பத்திரிகைகளில்தான்** இப்போது கூட்டான கட்சிக்காரர்கள் கொள்கை விளக்கம் செய்கினம். சமீபத்தில் தங்களை நியாயப்படுத்த முரசை உதவிக்கு இழுத்துவிட்டு, முரசுக்கு சாயம் பூசப்பார்த்தார் கூட்டான கட்சித் தலைவர். எத்தச் சாயம் பூசினாலும், தங்கள் சாயம் வெளுப்பதை தடுக்க முடியுமோ? தன் தந்தையைக் காப்பாற்ற அமுதரின் மகன் படை கட்டினாராம். கூட்டான கட்சித் தலைவர் கூறியிருக்கிறார்.

## அதிரடி அய்யாத்துரை

அவர் கூற்றில் உண்மை இல்லாவிட்டாலும், தன் அப்பாவைக் காப்பாற்ற மகன் ஆட்களைத் திரட்டி ஆயுதம் ஏந்தலாம் என்றால், இனத்தை காப்பாற்ற பொடியள் ஆயுதம் ஏந்தியதில் என்ன பிழை? மகாத்மா காந்திக்கும் பிள்ளைகள் இருந்தவை. அப்பாவைக் காப்பாற்ற ஆயுதம் ஏந்தினவையோ? தன் கொள்கையோடு ஒத்துவராத பிள்ளையை விட்டை விட்டே துரத்தினவரல்லோ காந்தி? காந்தியவாதிகளுக்கு காந்தியைப் பற்றி இந்த அய்யாத்துரை சொல்ல வேண்டிக் கிடக்குப் பார்த்தியளோ!

**யாழ் மாநகர சபையில்** பொறுப்பேற்ற கூட்டான கட்சி உறுப்பினர் ஒருவர் சத்தியப்பிரமாணம் செய்யும்போது வாய்தவறி 'சஞ்சலப்படுகிறேன்' என்று கூறிவிட்டாராம். உண்மையைத்தானே கூறியிருக்கிறார். சஞ்சலம் இருக்கத்தானே செய்யும்!

**போக்குவரத்துக்கு** பொறுப்பானவருடன் மல்லுக்கு நிற்கிறார் கிழக்கின் தனித்துவத் தலைவர். வாகனத் தடை விடயத்தில் போக்குவரத்துக்கு பொறுப்பானவரும் பாதுகாப்பு உயர் பீடத்துடன் பேசினவராம். அவர் பேசிய செய்தி வரமுன்னர் செய்தி கொடுக்கும் அவசரத்தில் 'எல்லாம் ஒகே' என்று செய்தி கொடுத்தும் போட்டாராம் கிழக்கின் தனித்துவத் தலைவர். அதனை நம்பி ஏமாந்தவை தலைவரை கண்டபடி திட்டிப் போட்டினம். பூனைக்கு விளையாட்டு, சுண்டெலிகளுக்கு சீவன் போகுது எண்டமாதிரிக் கிடக்கு அரசியல் போட்டா போட்டி.

**அரச வானொலியும், தொலைக்காட்சியும்** வாகனத்தடை விலகியது என்று படு கிளியராக செய்தியில் சொல்லியும்கூட தடையை விலக்க மறுத்துப்போட்டினம் பாதுகாப்பு தரப்பார். தாங்கள் கொடுக்கிற 'ஸ்கோர்' செய்திகள் மாதிரித்தான் உதவும் என்று நினைச்சப் போட்டினமாக்கும். பாம்பின் கால் பாம்பறியும் தானே! உந்த இலட்சணத்திலே சனத்தை நம்பச் சொன்னா எப்படியாம் நம்புறது?!

**காணாமல் போனோருக்காக** கமிஷன் போடுவதாக கூட்டான கட்சிக்கும் சொல்லப்பட்டிருக்கிறதாம். ஏதோ கமிஷன் போட்டா நீதி கிடைத்துவிடும் என்றல்லோ காட்டப்பார்க்கினம்! கமிஷன் போட்டா ஒரு பத்து நாளைக்கு பத்திரிகைகளில் விசாரணை செய்திகள் வரும். பின்னர் கமிஷன் அறிக்கையும் காணாமல் போகும். கமிஷன் போடப்படும் என்று சொல்லும்போது, "முன்னர் கிழக்குக்காக போட்ட கமிஷன் அறிக்கை எங்கே பாருங்கோ?" என்று கேட்டிருக்கலாம் அல்லோ! கேட்கமாட்டினம் இவையும் சேர்த்து நின்றல்லோ நாடகம் போடுகினம். அது சரி, கிடைக்க வேண்டிய 'கமிஷன்' கிடைத்துக் கொண்டு இருக்குதல்லோ.

**யாழில் காவலரண்களில்** காதலுக்கு மரியாதைதானாம். 'சிருடைத் தரப்பின் இருபாலாரும் செல்லம் கொஞ்சவதால், சைக்கிளில் இருந்து இறங்காமல் நாங்கள் போகக்கூடியதாக இருக்குது. அவைக்கு கவனிக்க நேரமில்லை' என்றார் நண்பர் ஒருவர். அதுமட்டுமல்லை. மாணவிகள் மற்றும் வடிவான பெண் பிள்ளைகள் என்றால் விசாரிப்புப் போர்வையில் முழுச் சாதகமும் பெற்றுவிடுகிறார்களாம். பின்னர் அப்படியே பழக்கம் தொடருமாம். இதுக்காகவே செந்தமிழ் பயில்வதில் சிறப்புக் கவனம் செலுத்தப்படுவதாகக் கேள்வி. எப்படியோ இப்படியாவது காவலரண் எங்கும் தமிழ் முழக்கம் கேட்டல் நன்று!

இவ்வாரப் பொன்மொழி. உபயம் பிரையண்ட்.

"நீதி ஒரு நாட்டின்
உணவைப் போன்றது;
அதற்காக பசியோடு
இருப்பவர்கள் ஏராளம் பேர்!" ■



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# 173



# பிரேமா புலிகள் பேச்சை முறிக்க நெருக்கடி

இந்தியாவில் 'போர்பஸ்' ஊழல் ராஜீவ் காந்தியை மிரட்டிக் கொண்டிருந்தது. 'இந்து' பத்திரிகை 'போர்பஸ்' ஊழல்களை புலனாய்வு செய்து அக்கு வேறு ஆணி வேறாக அம்பலப்படுத்தியது.

பொதுத் தேர்தல் வந்தால் இந்திரா காங்கிரஸ் ஆட்சி தோற்பது நிச்சயம் என்றாகியது.

'மிஸ்டர் கிளீன்' என்று போற்றப்பட்ட ராஜீவ் காந்தியை 'ஊழல் மன்னராக' பத்திரிகைகள் கூறத்தொடங்கிவிட்டன.

நிதானம் இழந்த ராஜீவ்காந்தி மேற்கொண்ட சில நடவடிக்கைகளும் அவரது பெயரை மேலும் கெடுக்கவே உதவின.

ராஜீவின் இளம் பிரதமர் என்ற கவர்ச்சியும், ஆளுமையும் காணாமல் போயின.

ராஜீவ் காந்தியின் முக்கிய சகாக்களில் ஒருவராக இருந்து, அவரை விட்டும், அமைச்சர் பதவியைவிட்டும் வெளியேறிய வி.பி.சிங்குக்கு எதிர்பாராத திருப்பம் காத்தி ருந்தது.

கறைபடாத கரத்திற்கு சொந்தக்காரர், நேர்மைக்காகப் போராடுபவர், அடுத்த பிரதமர் என்றெல்லாம் பத்திரிகைகள் புகழத் தொடங்கின. இந்தியாவின் முக்கிய கட்சிகள் காங்கிரசுக்கு எதிராக ஒன்று பட்டன.

இந்தியாவில் எதிர்க்கட்சிகள் ஒன்று பட்ட சந்தர்ப்பங்களில் எல்லாம் காங்கிரஸ் தோற்பது வழக்கம்தான்.

ஆனால், போர் பஸ் ஊழல், இலங்கையில் இந்தியப் படையை இறக்கி மூக்குடைபட்டது ஆகியவை உட்பட ஏராளமான கெட்ட பெயர்களை மூட்டை மூட்டையாக சுமந்தார் ராஜீவ் காந்தி.

ராஜீவ் காந்தி தோற்கப்போகும் செய்தியைக் கேட்க இலங்கை மக்களும் ஆவலோடு காத்திருந்தனர்.

தமிழ் பேசும் மக்களால் மட்டுமன்றி சிங்கள மக்களாலும் இந்தியப் படை வெளியேற்றம் விரும்பப்பட்டது.

ராஜீவ் தோல்வி கண்டால் இந்தியப் படை வெளியேறும் என்பது சந்தேகத்திற்கு இடமில்லாத ஒன்று.

இலங்கையில் நின்ற இந்தியப் படையினருக்கும் தாங்கள் ஒட்டுமொத்தமாக வெளியேற வேண்டி இருக்கும் என்பது தெரிந்துவிட்டது. பல சிப்பாய்கள் கிடைக்கக் கூடிய வெளிநாட்டு பொருட்களையெல்லாம் வாங்கி மூட்டை கட்டி வைத்துவிட்டனர்.

எதிர்பார்த்திருந்த அந்தநாளும் வந்தது. தங்கள் இளம் பிரதமர் ராஜீவ் காந்தியை பதவியில் இருந்து இறங்குமாறு தீர்ப்பளித்தனர் இந்திய மக்கள்.

விமானப் படிக்கட்டில் இருந்து கையசைத்தவாறு ராஜீவ் காந்தி துள்ளித் துள்ளி இறங்கும் படம் ஒன்றை, ராஜீவின் தோல்விக்கு அடையாளமாக காண்பித்தது இந்திய தொலைக்காட்சி.

வி.பி.சிங்கின் ஜனதா தளத்துடன் தமிழ்நாட்டில் தி.மு.க. கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டது.

தி.மு.க.தலைவரும் தமிழக முதல்வருமான கலைஞர் கருணாநிதி தன்னைச் சந்தித்த புலிகள் இயக்கப் பிரமுகர்களிடம் "இந்தியப்படை திரும்பிவரும், புதிய ஆட்சி வந்த உடன் அந்தப் பணி நடக்கும்" என்று உத்தரவாதம் கொடுத்திருந்தார்.

## கலைஞர் கோபம்

வடக்கு-கிழக்கு மாகாண முதல்வராக இருந்த வரதராஜப் பெருமாள் கலைஞர் கருணாநிதியை சந்தித்தாலும்கூட, கருணாநிதியைப் பற்றிய எதிர் விமர்சனங்களும் செய்திருந்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினருடன் ஆரம்பகாலத்தில் இருந்தே கருணாநிதிக்கு எட்டாப் பொருத்தம்.

ரெலோவுடனும் எம்.ஜி.ஆர் மறைவின் பின்னர் புலிகளுடனும்தான் கருணாநிதிக்கு நெருக்கம்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் தமிழ் நாட்டில் இருந்த புரட்சிகர இயக்கங்களான 'மக்கள் யுத்தக் குழு' போன்றவற்றுடனேயே தொடர்புகளை வைத்திருந்தனர்.

இந்திய அரசோ, அல்லது தமிழ்நாட்டில் தி.மு.க.போன்ற கட்சிகளோ பிற்போக்கானவை. இவற்றைப் பயன்படுத்தலாமே தவிர, நம்பக்கூடாது என்பதே ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தின் ஆரம்பகால கொள்கையாக இருந்தது.

அதனால் கருணாநிதி, எம்.ஜி.ஆர். போன்றோருடன் ஈ.பி.ஆர்.எல்.எஃப்.பிற்கு அதிக ஒட்டுதல் இருக்கவில்லை.

பிரேமதாசாவுடன் மாத்தையா ①, யோகி ②, அன்ரன் பாலசிங்கம் ③, அடேல் ④, அமைச்சர் ஏ.சி.எம். ஹமீட். முறியும் கட்டம்.



ஈ.பி.ஆர்.எல்.எஃப். கம்யூனிஸ்ட் இயக்கமா? என்று தன் உதவியாளரான செம்பியன் என்பவரிடம் கருணாநிதி விசாரித்தும் இருந்தார்.

அவ்வாறு ஆரம்பகாலம் முதல் இருந்த கசப்புணர்வு 1989ல் வெளிப்பட்டது. வரதராஜப் பெருமாள் கொடுத்த பேட்டிகள் அதனை மேலும் தூண்டிவிட்டன.

வடக்கு-கிழக்கு மாகாண சபை ஆட்சியை புலிகளிடம் கையளித்தால், ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர்களின் உயிர்களுக்கு ஊறு நேராமல் தாம் பார்த்துக்கொள்வதாக கலைஞர் சிலரிடம் தெரிவித்தார் என்று கூறப்பட்டது.

## புதிய ஆட்சி

இந்திய மத்திய அரசில் வி.பி.சிங் தலைமையிலான புதிய ஆட்சி பொறுப்பேற்றது. பிரதமராக வி.பி.சிங் பதவியேற்றார்.

தி.மு.க.வின் முக்கிய தலைவரும், கருணாநிதியின் மருமகனுமான முரசொலி மாறனுக்கும் மத்திய அமைச்சர் பதவி கிடைத்தது. வெளியுறவுத் துறை அமைச்சராக ஐ.கே.குஜ்ரால் பதவி ஏற்றார். இவர்தான் சமீபகாலம்வரை இந்தியப் பிரதமராக பதவிவகித்தவர்.

இந்தியப் படைகளை விரைவாக திருப்பி அழைக்கும் பணிகள் ஆரம்பமாகின.

## எதிர்ப்பும் காரணமும்

தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாட்டில் புலிகளுக்கு அதிக இடம் தரப்படுகிறது என்று 'துக்ளக்' சோ போன்றோரும் காங்கிரஸ் கட்சியினரும் குற்றம் சாட்டி வந்தனர்.

துக்ளக் 'சோ' சிறந்த அரசியல் விமர்சகர் என்பதில் எவருக்கும் ஐயமிருக்க முடியாது.

ஆனால், 'தமிழ்', 'தமிழ் உணர்வு', 'தமிழ் உரிமை' போன்ற வார்த்தைகளைக் கேட்டாலே அவருக்குப் பிடிப்பதில்லை.

பிறப்பாலே 'சோ பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்தவர். திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என்பவை பிராமணர்களை பார்ப்பானியர்கள், ஆரியர்கள் என்றே கூறிவந்தன.

பாம்பையும், பாப்பானியனையும் கண்டால் முதலில் பார்பானியனை அடி, பின்னர் பாம்பை அடி என்று திராவிடர் கழகத்தினர் பிரசாரம் செய்த காலமும் இருக்கிறது.

தமிழ்நாட்டில் முக்கிய அரச உத்தியோகங்கள் முதற்கொண்டு சகலதுறைகளிலும் ஆதிக்கம் வகிப்பவர்களாகவும், பணம் படைத்தவர்களாகவும் பார்பானியர்களே இருந்தனர். பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியவற்றின் முதலாளிகளாகவும் அவர்களே இருந்தனர்.

திராவிடர் கழகத்தின் எழுச்சியும், தி.மு.க. ஆட்சியும் பார்பானிய ஆதிக்கத்தை கணிசமான அளவு குறைத்தது.

இவற்றின் காரணமாக திராவிடக் கட்சிகள்மீதும், தமிழ் உணர்வு பற்றிப் பேசுகிறவர்கள் மீதும் தமிழகப் பார்ப்பானியர்களுக்கு இயல்பாகவே ஒரு வெறுப்பு இருந்தது.

இலங்கைத் தமிழர் பிரச்சனையில் புலிகளை எதிர்ப்பதாகவும், தமிழ் பிரச்சனைக்கு தீர்வு காண்பதை எதிர்க்கவில்லை என்றும் இன்று 'சோ' கூறுகிறார்.

ஆனால், தமிழர் விடுதலைக் கூட்டணி அமைதி வழியில் உரிமை கேட்டுப் போராடிய காலம் முதல் இலங்கைத் தமிழர்களது அபிலாசைகளுக்கு எதிரான கருத்துக்களையே துக்ளக் போன்ற ஏடுகள் வெளியிட்டு வந்தன.

குமுதம், ஆனந்த விகடன், ஜூனியர் விகடன் போன்ற பத்திரிகைகள் இலங்கையில் ஆயுதப் போராட்டம் தீவிரம் பெற்று, அதற்கான ஆதரவு தமிழக மக்களிடம் பெருகிய பின்னரே ஈழப் போராளிகள் பற்றிய செய்திகளை வெளியிட ஆரம்பித்தன.

'தினமலர்' போன்ற பத்திரிகைகள் தொடர்ந்து ஈழக் கோரிக்கைக்கு எதிரான நிலைப்பாட்டையே எடுத்து வந்தன.

எனவே, ராஜீவ் கொலை விவகாரத்தின் பின்னர்தான் 'துக்ளக் சோ' போன்றோர் தங்கள் நிலைப்பாடுகளை மாற்றிக் கொண்டனர் என்பது சரியல்ல.

இந்தியப் படையினரின் பாலியல் வல்லுறவுக் கொடுமைகளை இந்தியாவின் பல பத்திரிகைகள் அம்பலப்படுத்தியபோது, அப்படி நடத்திருக்கவே மாட்டாது என்று 'சோ' கூறியிருந்தார்.

"தமிழகத்தில் புலிகளின் முகாம்கள் எதுவும் கிடையாது. காங்கிரஸ் ஆட்சியிலே தான் தமிழ்நாட்டில் புலிகள் உட்பட போராளிக் குழுக்களுக்கு பயிற்சி முகாம்கள் இருந்தன" என்று புத்திசாலித்தனமாக பதில் கொடுத்தார் கலைஞர்.

புலிகளே இல்லை என்று கூறவில்லை, புலிகளின் பயிற்சி முகாம்கள் இல்லை என்றுதான் கலைஞர் கூறியிருந்தார்.

## வை.கோ

கலைஞர் கருணாநிதியை புலிகள் அடிக்கடி சந்தித்தனர். வை.கோபால்சாமி புலிகளின் பாசத்துக்குரியவராக இருந்தார்.

கருணாநிதி புலிகளை ஆதரித்ததுக்கு பல அரசியற் காரணங்கள் இருந்தன. உள்நாட்டில் தனது செல்வாக்கை உயர்த்திக் கொள்வதுதான் கலைஞரின் முக்கிய நோக்கம்.

ஆனால், வை.கோபால்சாமியும் தி.மு.க.வின் தன்னலமற்ற பல்லாயிரம் தொண்டர்களும் எவ்வித சுயநலமும் இல்லாமல் ஈழத் தமிழர்களுக்கு உதவும் துடிப்போடு இருந்தனர்.

வை.கோ. புலிகள் மட்டும்தான் உண்மையாகப் போராடுகிறார்கள் என்று உறுதியாக நம்பினார். வேறு சில தமிழ் இயக்கங்கள் அவரைச் சந்திக்க முற்பட்ட போது, சந்திக்க மறுத்தவர் வை.கோ.

புலிகளுக்கும் வை.கோவுக்கும் இடையிலான தொடர்பை வைத்து அவரது அரசியல் வாழ்க்கையையே முடித்துவிட திட்டமிட்டனர் அவரது அரசியல் எதிரிகள்.

அப்படியிருந்தும் சிறிதும் கலங்காமல் நின்று, 'இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு தமிழீழமே ஒரே தீர்வு' என்று சமீபத்திய தேர்தலில்கூட வை.கோபால்சாமி கூறியது குறிப்பிடத்தக்கது.

வை.கோ.ஜெயலலிதாவோடு சேர்ந்ததையும், அவருடன் நிற்பதையும் வைத்து சந்தர்ப்பவாதி என்று கூறுகிறவர்களும் இருக்கலாம்.

ஜெயலலிதாவோடு சேர்ந்து நின்றிருக்காவிட்டால் வை.கோ.வை தமது பண பலம், அதிகார பலம் என்பவற்றால் அவ ரது எதிரிகள் முகவரி இல்லாமல் செய்திருப்பர்.

யாரோடு நிற்கிறார் என்பதைவிட, அப்படி நின்று என்ன செய்கிறார், எவ்வாறு செயற்படுகிறார்? என்று கவனித்தே சில சமயங்களில் விமர்சனம் செய்ய வேண்டும். வை.கோ.வுக்கு அது பொருந்தும்.

## சர்வகட்சி மாநாடு

இந்தியப் படைகளின் வெளியேற்றம் நடந்து கொண்டிருக்கையில் பிரேமதாசாவின் மூளையில் தோன்றியது ஒரு புதிய யோசனை.

அதுதான் 'சர்வகட்சி மாநாடு' நடத்தும் யோசனை.

'பாராளுமன்ற தெரிவுக்குழு', சர்வகட்சி மாநாடு' என்று பல்வேறு இழுத்தடிப்பு தந்திரங்களின் பிதாமகர் பிரேமதாசாதான்.

"வடக்கு-கிழக்கை பிரித்தே தீர வேண்டும், இலங்கை, இந்திய ஒப்பந்தத்தில் கூறியுள்ளபடி கிழக்கில் சர்வசன வாக் கெடுப்பை உடன் நடத்த வேண்டும்" என்று சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் கோரினார்கள்.

இந்தியப் படையை வெளியேறச் செய்வதால் பிரேமதாசாவுக்கு கிடைக்கக் கூடிய நல்ல பெயரை கெடுப்பதற்காகவே சுதந்திரக் கட்சி அப்படி அவசரப் படுத்தியது.

பிரிப்புக்கும், சர்வசன வாக்கெடுப்புக்கும் புலிகள் இணங்கமாட்டார்கள். எனவே, தாம் ஒரு நெருக்கடியை கொடுத்தால் அரசு, புலிகள் பேச்சு முறியும் என்று ஆவலோடு எதிர்பார்த்தனர் சுதந்திரக் கட்சியினர்.

அது மட்டுமல்ல, பிரேமதாசா புலிகளுடன் உடன்பாடு ஒன்றைக் கண்டு, நிரந்தர தீர்வைக் கண்டுவிட்டால் குறைந்தது 20 வருடத்திற்கு அவரை ஆட்சியில் இருந்து அசைக்க முடியாது என்பதையும் அவர்கள் அறிவர்.

(தொடர்ந்து வரும்)

படம்①- புலிகளின் மூத்த தளபதிகள் பொட்டம்மான்①, கருணா② ஆகியோர் கிளிநொச்சி தாக்குதல் தொடர்பான தாக்குதல் திட்டத்தை பார்வையிடுகின்றனர். பொட்டம்மான் அருகில் கரும்புலிகள் இருவர்.

படம் ②- கிளிநொச்சி நகரின் மத்தியில் உள்ள கருணாநிலையத்தில் ரோந்து செல்லும் புலிகளின் அணி. தற்போது கிளிநொச்சி நகரின் மத்திய பகுதிவரை புலிகளின் அணிகள் நிலைகொண்டுள்ளன.

படம்③- புலிக் கொடியுடன் கிளிநொச்சி நகரில் வலம்.



படம் ①




படம் 2



படம் ③



படிப்பகம்

www.padippakam.com

## அலசுவது- இராஜதந்திரி

# அம்மையார்களின் ஆட்சிக் காலங்கள்

## தந்திரமான இறுக்கங்கள்

இனப்பிரச்சனைக்கான தீர்வு தமிழ் பேசும் மக்கள் தம் அரசியல் கோரிக்கைகளுக்காக போராடும் வல்லமையை பலவீனமாக்குவதிலேயே தங்கியுள்ளது என்பதுதான் தென்னிலங்கை ஆட்சியாளர்களின் சிந்தனையாகும்.

மேற்கண்ட சிந்தனைதான் கடந்த ஐம்பது ஆண்டுகாலமாக பதவிக்கு வந்த சகல அரசாங்கங்களினதும் சிந்தனையாக இருந்து வந்திருக்கிறது.

இன ஒடுக்குமுறை, இனப்படுகொலை மற்றும் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களை விழுங்கி ஏப்பமிடுதல் போன்ற செயற்பாடுகளை ஐ.தே.கட்சி அரசாங்கங்களும் சிரமேற்கொண்டு நிறைவேற்றி வந்திருந்தன.

**ஆனாலும், சிறீலங்கா சுதந்திரக் கட்சி பதவிக்கு வந்த காலகட்டங்களில்தான் இன ஒடுக்குமுறையானது உக்கிரமான தன்மை கொண்டதாக காணப்பட்டது.**

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் இன ஒடுக்குமுறை வெளிப்படையாக தெரியக்கூடியளவில் இடம் பெற்றுவந்தது.

ஆனால், சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக் காலத்தில் இன ஒடுக்குமுறைகளுக்கு வார்த்தை ஜாலங்களாலும், கிறங்கடிக்கும் கோஷங்களாலும் முடுதிரைகள் போடப்பட்டு வந்தன.

1970ல் சோசலிசம் பேசிக் கொண்டும், உலகில் உள்ள முற்போக்கு சக்திகளுடன் இன்முகம் காட்டிக் கொண்டும் சிறிமாவோ பண்டாரநாயக்கா அம்மையார் ஆட்சிபீடத்தில் ஏறியிருந்தார்.

இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி, சீனத் தலைவர்கள் மற்றும் சோசலிச நாடுகளது தலைவர்கள் ஆகியோர் சிறிமாவோ பண்டாரநாயக்காவை மாபெரும் முற்போக்குவாதியென்றே கருதி நட்புப் பாராட்டினார்கள்.

**ஆனால், உள்நாட்டில் சிறிமாவோ அம்மையாரின் ஆட்சி தனக்கு முன்பிருந்த ஆட்சிகள் தொடங்கிவைத்த இன ஒடுக்குமுறையை உக்கிரமாகத் தொடரும் ஆட்சியாக மாறி நின்றது.**

தமிழ் பேசும் மக்களின் உரிமை வேட்கையை பொலிஸ் அராஜகம், வகை தொகையற்ற கைதுகள் போன்றவற்றால் மூர்க்கத்தனமாக ஒடுக்கும் அணுகுமுறை 1970ல் பதவிக்கு வந்த சிறிமாவோ அம்மையார் ஆட்சியிலேயே அறிமுகமாகின.

பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் விசாரணைகள் இன்றி நீண்ட காலமாக சிறையில் வாடினர். தமிழாராய்ச்சி மாநாட்டில் பொலிசார் நடத்திய அராஜகத்தில் தமிழர்கள் படுகொலையாகினர்.

தமிழ் பேசும் மக்களை இரண்டாம்தர பிரஜைகளாக்கும் புதிய அரசியலமைப்பும் கொண்டுவரப்பட்டது.

**சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக் காலத்திலேயே ஆயுதப் போராட்டத்திற்கான பாதையில் தமிழ் இளைஞர்கள் நாட்டம் கொள்ளத் தொடங்கினார்கள்.**

**பிரபல கேடியான மறுசிரா என்பவன் சிறையில் மரணமானது பற்றி சிரத்தையுடன் விசாரித்த அம்மையாரின் மனிதாபிமானம், தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலைகள் விடயத்தில் பாராமுகமாய் இருந்ததும் மறந்துவிடக்கூடியதல்ல.**

தமிழ் இளைஞர்களை சுட்டுக் கொன்று அவர்கள் அருகே துப்பாக்கியை வைத்துவிட்டு பயங்கரவாதியாக சித்தரிக்கும் நடைமுறையும் சிறிமாவோ அம்மையாரின் ஆட்சிக் காலத்திலேயே அறிமுகமானது.

யாழ்ப்பாணம் நல்லூரில் செம்மணியில் வைத்து பரராஜசிங்கம் என்னும் இளைஞர் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அப்பாவியான அந்த இளைஞர் அருகே கைத்துப்பாக்கி ஒன்று போடப்பட்டிருந்தது.

மூர்க்கத்தனமான நடவடிக்கைகள் இளைஞர்கள் மத்தியிலும், மக்களிடையேயும் அச்சத்தை ஏற்படுத்தி, உரிமை வேட்கையை அணையச் செய்யும் என்றே சிறிமாவோ அம்மையார் நினைத்திருந்தார்.

ஆனால், அவரது நினைப்புக்கு நேர் மாறாகவே நிகழ்ச்சிப் போக்குகள் வளர்ந்து சென்றன.

மாபெரும் அரசியல், இராணுவ இயக்கமொன்றிற்கான அத்திவாரத்தை போடும் வகையிலேயே சிறிமாவோ அம்மையாரின் ஆட்சிக்காலம் அமைந்திருந்தது.

இன்று உலகம் வியக்கும் அரசியல், இராணுவ அமைப்பாகியுள்ள விடுதலைப் புலிகள் இயக்கம் சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக் காலத்திலேயே தோற்றம் பெறத் தொடங்கியிருந்தது.

**எனினும், சிறிமாவோ அம்மையாரது முற்போக்கு கோஷங்களும், அவரது ஆட்சியில் பங்கு வகித்த இடதுசாரிகளது வார்த்தை ஜாலங்களும் உள்நாட்டு இன ஒடுக்குமுறை அவலங்களை உலகத்தின் கண்களில் இருந்து மறைத்தது.**

இந்திய அரசும், இந்திரா காந்தியும்கூட சிறிமாவோ அம்மையார் பதவியில் இருந்த காலத்தில் இனப்பிரச்சனை விவகாரத்தில் குரல் கொடுக்க முனையவில்லை.

**அதுமட்டுமல்லாமல், தமிழ் பேசும் பொம்மைத் தலைவர்கள் பலரை தன் பக்கத்தில் வைத்திருந்தது மூலம் தமிழர்களின் பிரதிநிதிகள் தன் பக்கம் இருப்பதாக காட்டிக் கொள்ளும் தந்திரத்தையும் சிறிமாவோ அம்மையார்தான் முதன் முதலில் சிறப்பாக செய்திருந்தார்.**



துரையப்பா, குமாரசூரியர், அருளம்பலம், மார்ட்டின், தியாகராசா, ராஜன் செல்வநாயகம் போன்றோரே தமிழ் தலைவர்களாக உலகுக்கு காண்பிக்கப்பட்டனர்.

உள்நாட்டில் தமிழர்களுக்கு ஆசை வலை வீசவும், வெளியுலக சமூகத்தை ஏமாற்றவும் பொம்மைத் தலைவர்கள் நன்கு பயன்பட்டனர்.

1970 முதல் 1977வரை சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக்காலம் இனப்பிரச்சனையை கூர்மைப்படுத்தும் விதமாகவும், ஆயுதப் போராட்டத்தை தூண்டும் விதமாகவும் விளங்கியிருந்தது.

**அந்த ஏழு ஆண்டு காலத்தில் அதற்கு முன்னர் இல்லாதளவுக்கு பாரிய ஒடுக்குமுறைகளை சந்தித்தும்கூட தமிழ் பேசும் தரப்பால் உலக அனுதாபத்தை பெறமுடியவில்லை.**

1977 முதல் பதவிக்கு வந்த ஐ.தே.கட்சி ஆட்சியினர், கொளுந்துவிட்டெரிந்த தீக்கு எண்ணெய் வார்ப்பதுபோல செயற்பட்டனர். அதனால் சிறிமாவோ அம்மையார் காலத்தில் விதை போடப்பட்ட ஆயுதப் போராட்டம் ஜே.ஆர்.ஆட்சியில் செழித்து வளரத் தொடங்கியிருந்தது.

**எனினும், ஜே.ஆர்.ஆட்சிக் காலம் முதற்கொண்டு ஐ.தே.கட்சியின் பதினேழு வருட ஆட்சிக் காலத்தில் இன ஒடுக்குமுறைகள் கூர்மையடைந்த அதேயளவுக்கு, உலக அனுதாபமும் தமிழ் பேசும் தரப்பை நோக்கி திரண்டு வந்தது.**

தமது இன ஒடுக்குமுறைகளையும், போர் வெறியையும் உலகின் கண்களில் இருந்து மறைப்பதில் ஐ.தே.கட்சி ஆட்சியாளர்கள் தொடர்ந்து தோல்விகளையே சந்தித்து வந்தனர்.

'போர் என்றால் போர்' என்றமை, உங்கள் வேலையை நீங்கள் பாருங்கள் என்று வெளியுலக இராஜதந்திரிகளை பகிரங்கமாக பகைத்துக் கொண்டமை, இந்திய விரோத நிலைப்பாட்டை பகிரங்கமாக மேற்கொண்டமை போன்ற செயற்பாடுகள் ஐ.தே.கட்சி ஆட்சியால் நாசுக்கான இன ஒடுக்குமுறையை மேற்கொள்ள முடியாமல் செய்திருந்தன.

ஐ.தே.கட்சி ஆட்சியாளர்கள் தங்கள் பேச்சுக்கள் ஊடாக தம்மைத் தாமே அம்பலப்படுத்திக் கொண்டிருந்தமையால், அந்த ஆட்சியை சர்வதேச அரங்கில் அம்பலப்படுத்தும் அரசியல் சாணக்கிய நகர்வுகளை மேற்கொள்ளவேண்டிய தேவை அன்று தமிழ் பேசும் தரப்புக்கு எழுந்திருக்கவில்லை.

**எனவே, கடந்த 50 வருட காலத்தில், தமிழ் பேசும் தரப்பின் பலத்தை சிதைப்பதில் மிக்க தந்திரமாகவும், புத்திசாலித்தனமாகவும் செயற்படுவதில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஆட்சிகள்தான் முன்னணி வகித்துள்ளன.**

அந்த வரலாறு தற்போது மீண்டும் ஒருமுறை மிகவும் திட்டவட்டமாக நிரூபணமாகியுள்ளது. தற்போதும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஆட்சியாளர்கள், அற்புதமான 'வார்த்தை ஜாலங்களுடன் அகோரமான போர் ஒன்றை நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

**'இது தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தமல்ல' என்ற கோஷத்துடன் முன்னெடுக்கப்படும் இன்றைய யுத்தமானது, மிகத் தெளிவாக 'இனங்களுக்கிடையான போர்' என்ற வடிவத்தையும், குணத்தையும்** வெளிப்படுத்த தொடங்கியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் ரஞ்சன் விஜயரத்ன பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக இருந்தபோது, வன்னியில் மடுப் பகுதியில் மேற்கொள்ளவிருந்த படை நடவடிக்கை தொடர்பான அறிவிப்பு ஒன்றை வெளியிட்டிருந்தார்.

**"மடுப் பகுதியில் புலிகள் நடமாடுகிறார்கள். எனவே மடுவில் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. அதனால் அங்குள்ள மக்கள் அனைவரும் தற்காலிகமாக வேறு பகுதிகளில் தங்கியிருக்க வேண்டும்" என்று கூறியிருந்தார்.**

இந்த அறிவித்தலை சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் உட்பட பல்வேறு அமைப்புக்கள் கண்டித்தன. தமிழ்க் கட்சிகளும் எதிர்த்திருந்தன. அதனையடுத்து அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

**ஆனால், இன்றைய ஆட்சியாளர்களின் இராணுவத் தீர்வு முனைப்புக்கு முன்னால் யாழ் குடாநாடே மக்கள் இல்லாத சூனியப் பிரதேசமானது. மக்களை வெளியேறுமாறு கூறாமலேயே பாரிய கனரக வாகனங்கள், ஆட்டிலெறி ஷெல் மழைகளுடன் குடிமனைகள் ஊடான படை நகர்வு நடத்தப்பட்டது.**

**மக்கள் மட்டும் அன்று வெளியேற்றப்படாது இருந்திருந்தால் ஏராளமான உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்கும். அச் செய்திகள் வெளியே தெரியாமல் செய்தித் தணிக்கை மூடிமறைத்திருக்கும்.**

தற்போது வன்னியில் மேற்கொள்ளப்பட்டு வரும் 'ஜயசிக்குறுய்' படை நடவடிக்கையால் பல கிராமங்கள் அழிந்துள்ளன. பல்லாயிரம் மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர்.

'சத்ஜய' நடவடிக்கையால் கிளிநொச்சி நகரே தரைமட்டமாகியது. பரந்தனில் இருந்து கிளிநொச்சி நகர்வரையான குடிமனைகள் நாசமாகின. அங்கிருந்த மக்கள் வெளியேறினார்கள்.

கிழக்கில் குடிமனைகளை நோக்கி ஷெல்கள் ஏவப்பட்டு வருகின்றன. மர்மக் குண்டுகள் வெடிக்கின்றன. பொது மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றன.

**யாழ் குடாநாட்டில் அறுநூறுக்கு மேற்பட்டோர் காணாமல் போயினர். அந்த நடவடிக்கை காலத்தில் பொறுப்பதிகாரியாக இருந்த படை உயரதிகாரி மட்டக்களப்புக்கு மேலும் பாரிய பொறுப்புடன் நியமிக்கப்பட்டிருக்கிறார்.**

ஆக, முன்னெப்போதும் இல்லாதளவுக்கு தற்போது இராணுவத்தீர்வு முயற்சிகள் உக்கிரம் பெற்றுள்ளன.

தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்கள்மீதான குண்டு வீச்சுக்கள், எறிகணை வீச்சுக்கள் மத்தியில், இராணுவ மேலாதிக்கம் ஒன்றை ஏற்படுத்திவிட்டு தாம் விரும்பும் தீர்வை திணிப்பதே இன்றைய ஆட்சியாளரின் நோக்கமாகும். இந்த நோக்கம் எவ்வித ஒளிவு மறைவும் இன்றி உள்ளங்கை நெல்லிக்கனியாக தெரிகிறது.

**அவ்வாறு இருந்தும், மிதவாத தமிழ்க் கட்சிகள் தங்கள் அரசியல் இலாபங்களுக்காக இன்றைய அரசுக்கு முண்டுகொடுப்பதுமல்லாமல், ஏதோ ஜனாதிபதிக்கு தெரியாமல்தான் சம்பவங்கள் நடப்பது போல 'ஜனாதிபதிக்கு பக்ஸ் அனுப்பியுள்ளோம், தந்தி அடித்துள்ளோம்' என்று மக்களை ஏமாற்றி வருகின்றன.**

இன்று பாராளுமன்றத்தில் அரசாங்கத்தை ஆதரிக்கும் தமிழ்க் கட்சிகள், அதற்கான நியாயத்தை கூறியாகவேண்டும். இன்றைய ஆட்சியாளர்களுக்கு ஆதரவாக இக் கட்சிகளால் கையுயர்த்த முடிகிறது எனில், இவர்கள் ஏன் கடந்த காலத்தில் போராடத் தலைப்பட்டனர் என்ற கேள்விக்கும் பதில் கூற வேண்டியவர்களாகின்றனர்.

**இன்று, ஆட்சியாளர்களைவிட, படைத்தரப்பைவிட, அவர்களது பங்காளிகளாக உள்ள தமிழ்க் கட்சிகள்தான் தமிழ் பேசும் தரப்பின் நலனை சிதைத்து சின்னாபின்னமாக்கும் நடவடிக்கைகளுக்கு முக்கிய காரணகர்த்தாக்களாக உள்ளன.**

ஆறு தமிழ்க் கட்சிகள் பகிரங்க அரசியல் அரங்கில் உள்ளன. உண்மையில் இவை அனைத்தினதும் கொள்கைகள் ஒன்றாகவே இருந்தாலும், ஒரே கட்சியானால் எல்லோரும் தலைவர்களாக இருப்பது முடியாத காரணம் என்பதாலேயே ஆறு கட்சிகளாக உள்ளன.

ஆறு கட்சிகளாக இவை இருப்பதால் தமிழ் பேசும் தரப்புக்கு எவ்வித இலாபமும் ஏற்படப் போவதில்லை. ஆனால், ஆட்சியாளருக்கு இலாபம் இருக்கவே செய்கிறது.

ஆறு தமிழ்க் கட்சிகள் தம் பக்கம் இருப்பதாக வெளியுலகுக்கு கணக்குக் காட்டும்போது, இன ஒடுக்குமுறை நடவடிக்கைகளை பூசி மெழுகும் சாதகமும் அதிகமிருக்கிறது.

அவசரகால சட்டம் போன்ற பாதுகாப்பு கெடுபிடிகளுக்கு அங்கீகாரம் தரும் சட்டங்களை ஒரே குரலில் எதிர்த்து நிற்கக்கூட தமிழ்க் கட்சிகளால் முடியாதிருக்கிறது.

**அரசுக்கு முண்டு கொடுத்தபடி கைதுகளையும், காணாமல் போதல்களையும், பாதுகாப்புக் கெடுபிடிகளையும் தமிழ்க் கட்சிகள் கண்டிப்பதானது பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுவிப்பது போன்றதேயாகும்.**

இன்று, அரசின் நடவடிக்கைகளே வடக்கு-கிழக்கை தனியான பிரதேசமாக பிரித்து வருகிறது. வாகனத் தடைகள், போக்குவரத்துத் தடைகள், போன்றவை வடக்கு-கிழக்கை தனிவேறான பகுதியாக மாற்றியுள்ளன.

**வடக்கு-கிழக்கில் உள்ள பிரச்சனையை விசேஷ பிரச்சனையாக கருதி, அரசியல் தீர்வு முயற்சிகள் அமைய வேண்டும் என்று தமிழ்க் கட்சிகள் சில கோரியபோது, அதற்கு மறுத்திருந்தது அரசாங்கம்.**

வடக்கு-கிழக்குக்கு சமஷ்டி ஆட்சி முறை கொடுத்தால், நாட்டின் ஏனைய சிங்கள பிராந்தியங்களுக்கும் வழங்க வேண்டியிருக்கும் என்று குதர்க்கம் பேசி வருகின்றனர் ஆட்சியாளர்கள்.

**ஆனால், பாதுகாப்பு கெடுபிடிகள், விதிமுறைகள் வகுப்பதில் மட்டும் வடக்கு-கிழக்கை நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து தனியாகக் கருதியே விசேஷ முடிவுகள் எடுக்கப்பட்டு வருகின்றன.**

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்தும் அம்பாறையில் இருந்தும் வாகனங்கள் வெளியே வந்து செல்ல தடை விதிக்கப்பட்டமையைக்கூட அரசிற்கு முண்டு கொடுக்கும் தமிழ்க்கட்சிகளால் எதிர்த்துப் போராட இயலவில்லை.

**அரசியல் தீர்வில் மட்டுமல்லாமல், மக்களின் மிக பிரதானமான அன்றாடப் பிரச்சனைகளில்கூட தமிழ்க் கட்சிகளின் கருத்துக்களை ஆட்சியாளர்கள் முற்றாகப் புறக்கணித்தே வருகின்றனர்.**

ஹர்த்தால்கள் நடத்தவும், எதிர்ப்புக் காட்டவும் தயாராக முன்வந்த மட்டு-அம்பாறை தமிழ்-முஸ்லிம் மக்களுக்கு தலைமை கொடுப்பதை விடுத்து, 'ஜனாதிபதிக்கு பக்ஸ்' அனுப்பவும், பத்திரிகைகளுக்கு கண்டன அறிக்கை கொடுக்கவும் மட்டுமே தமிழ்க் கட்சிகளால் முடிந்திருந்தது.

**ஆனால், அரசாங்கம் புத்திசாலித்தனமாக காய் நகர்த்தியுள்ளதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. ஹஜ் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் இரண்டு வாரங்களுக்கு தடையைத் தளர்த்திவிட்டு, பின்னர் மறுபடி தடையை தொடர அரசு முடிவு செய்தது.**

அவ்வாறு செய்யாதுவிட்டால், கிழக்கில் தமிழர்களும், முஸ்லிம்களும் ஒன்றுபட்டு வீதியில் இறங்கி எதிர்ப்புத் தெரிவிக்கும் நிலை உருவாகும் என்று கருதியே அரசாங்கம் தடையைத் தளர்த்த முன்வந்தது.

தமிழ் பேசும் தரப்பு ஒன்றுபடக்கூடாது என்பதில் ஆட்சியாளர்களுக்கு இருக்கும் அக்கறையும் வெளிப்பட்டுள்ளது.

தமிழ்க் கட்சிகள் அரசிடம் கேட்கத் தவறியுள்ள கேள்வியை மட்டு-அம்பாறை மக்கள் தாமாகவே கேட்கின்றனர்: "இங்கிருந்து குண்டு லொறி செல்வதைத் தடுக்க முடியாது என்றால் சோதனை அரண்கள் இங்கு ஏன்? இங்கு படையினரும் பொலிசாரும் நிலைகொண்டிருப்பது ஏன்? "உங்கள் பாட்டை நீங்கள் பாருங்கள், வாழு, வாழவிடு, என்று கூறிவிட்டு எல்லையில் போய் நிலை கொள்ளலாமே?" என்று கேட்கின்றனர்.

வாகனத்தடை தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட ஐ.தே.கட்சி எம்.பி அலிசாகிர் மௌலானா காட்டிய துணிச்சல்கூட தமிழ்க் கட்சித் தலைவர்களிடம் காணப்படவில்லை.

**'அரசு போரை தீவிரப்படுத்துவதன் விளைவாக குண்டுகள் வெடிக்கின்றன. தனது கையாலாகத்தனத்தை மக்கள்மீது போடும் அரசின் முயற்சிதான் வாகனத் தடையாகும்' என்று அவர் தெளிவாக கூறியிருந்தார்.**

தமிழ்க் கட்சிகள் மௌனமாக இருந்தும்கூட மட்டு-அம்பாறை மாவட்டங்களில் வர்த்தகர்களும் பொதுமக்களும் காட்டிய எதிர்ப்புத்தான் உடனடியாக இரண்டு வாரங்களுக்குத் தடையைத் தளர்த்தும் முடிவுக்கு தள்ளியிருந்தன.

**ஆக, மக்கள் இப்போது தாமாக போராட வேண்டியவர்களாக உள்ளனர். அந்தப் போராட்டங்களை காட்டி அரசுக்கும் மக்களுக்கும் இடையே தரகு வேலை செய்பவர்களாகவே தமிழ்க் கட்சிகள் மாறியுள்ளன.**

தமிழ்க் கட்சிகள் மட்டும் அரசியல் துணிச்சலுடன் ஒன்றுபட்டு நின்றிருந்தால், வாகனத்தடையை நிரந்தரமாக நீக்கும் விதமாக கிழக்கில் மக்கள் போராட்டத்தை நடத்திக் காட்டியிருக்க முடியும்.

மக்கள் போராடத் தயாராக இல்லை என்று கூறுகின்ற தமிழ்க் கட்சிகள், மக்கள் போராடத் தயாராகும்போது அப் போராட்டங்களை மழுங்கடிக்கும் விதமாகவே நடந்து கொள்கின்றன என்பது தெளிவாகியுள்ளது. ■

## சந்திக்கு வராத சங்கதிகள் — நக்கீரன்

பகிரங்க அரசியல் களத்தில் வெற்றிடம் நிலவுவதாக சிலவாரங்களுக்கு முன்னர் குறிப்பிட்டிருந்தேன். அதன் அர்த்தம் சரியாக விளங்கிக் கொள்ளாமல் சில வாசகர்கள் கடிதங்கள் போட்டிருந்தனர்.

சட்டபூர்வ வழிமுறைகளை பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் அரசியல் வழிமுறைகளையே பகிரங்க அரசியல் என்று குறிப்பிட்டிருந்தேன்.

ஆர்ப்பாட்டங்கள் நடத்துதல், ஹர்த்தால்கள் செய்தல், ஊர்வலங்கள் நடத்துதல் என்று பல்வேறு போராட்டங்களை சட்டபூர்வ அரசியல் கட்சிகள் மேற்கொள்ள முடியும்.

இப்போராட்டங்கள் அரசின் மக்கள் நல விரோத நடவடிக்கைகளை அம்பலப்படுத்தி போராட்டத்தை வளர்ச்சியடையச் செய்வதாக அமையும்.

இதனால்தான் சில ஆயுதப் போராட்ட அமைப்புக்கள்கூட வேறு பெயர்களில் மக்கள் அமைப்புக்களை உருவாக்கி சட்டபூர்வ வழிமுறையில் இயங்க விடுவதுண்டு.

உதாரணமாக, தற்போது மட்டக்களப்பு, அம்பாறையில் வாகனத்தடை விதிக்கப்பட்டது. இத்தடையை எதிர்த்து புலிகள் பகிரங்கமாக நின்று ஒரு ஆர்ப்பாட்டம் நடத்த இயலாது. புளொட், ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எஃப், போன்ற கட்சிகள் ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு சட்ட பூர்வமான கட்சிகளாக மாறியிருப்பதால், இவற்றால் ஒரு ஆர்ப்பாட்டத்தையோ மக்கள் போராட்டத்தையோ முன்னின்று நடத்தியிருக்க முடியும். கூட்டணியும் செய்திருக்கலாம்.

ஆனால், தமிழ்க் கட்சிகள் அதற்கு தயாராக இல்லை. 'ஜனாதிபதிக்கு ஃபக்ஸ்' அல்லது மிஞ்சிப் போனால் தமிழ்ப் பத்திரிகைகளில் மட்டும் காரசாரமான அறிக்கை என்பவற்றுக்கு அப்பால் செல்ல முடியாத சரணடையும் நிலையில்தான் தமிழ்க் கட்சிகள் உள்ளன.

மக்கள் போராட்டங்கள் மற்றும் வெளியுலகை ஏமாற்றும் அரசின் நோக்கம் ஆகியவை காரண மாக கிடைக்கும் பரிகாரங்களையும்கூட தாங்கள் ஜனாதிபதியிடம் பேசியதால் கிடைத்த பயன்கள் என்று இக்கட்சிகள் அறிக்கை விடுக்கின்றன. இவற்றின் மூலம் அரசின் சுயரூபத்தைக்கூட இவை மறைக்க துணைபோகின்றன.

### சின்னச் சின்ன வட்டங்களுக்குள் சிறைப்பட்டுவிட்ட கட்சிகள்

அதிகம் வேண்டாம், தீர்வுப் பொதி நாடகத்தில் இருந்து இந்த தமிழ்க்கட்சிகள் விலகிக் கொண்டாலே போதும். பொதியைக் காட்டி உலகை மயக்கும் அரசின் தந்திரம் பொத்தென்று வீழ்ந்துவிடும்.

ஆனால், இக் கட்சிகளால் அது முடியாது. தீர்வுப் பொதி பற்றிய பேச்சுக்களில் நீதியமைச்சர் பீரிஸ் தங்கள் கட்சிகளை அழைப்பதும், தங்கள் பெயர்களைக் குறிப்பிடுவதும் மட்டுமே இவர்களுக்கு போதுமானது.

அரசோடு பேசுதல், அரசால் பேச்சுக்கு அழைக்கப்படுதல் என்பவைதான் தமிழ்க் கட்சிகள் எதிர்பார்க்கும் கௌரவங்களாகும். தங்கள் இருத்தலை மக்களுக்கு காட்டும் விளம்பரங்களாகவும் அதனையே பயன்படுத்துகின்றன.

அதனையே பகிரங்க அரசியலில் உள்ள வெற்றிடம் என்று குறிப்பிட்டிருந்தேன். தமிழ்ப் பத்திரிகைகள் இந்த வெற்றிடத்தை குறிப்பிட்டளவு நிரப்பி வருகின்றன. இது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இன்றைய காலகட்டத்தில் தமிழ்ப் பத்திரிகைகள் செய்து வரும் பங்களிப்பு காத்திரமான ஒன்றாகும். இல்லையெனில் தமிழ்க் கட்சிகள் விடும் சரணடைவு அறிக்கைகள்தான் அரசியல் என்றாகியிருக்கும்.

நிவாரணமும், பள்ளிக்கூடம் கட்ட நிதியும், பாலம் கட்ட அனுமதி பெறுதலும் மட்டும்தான் தமிழ்பேசும் மக்களின் தாகம் என்று முன்னாள் போராளிகள் இந்நாளில் கூறுவதே உண்மை என்றாகியிருக்கும்.

ஏதோ இவர்கள் போராட புறப்பட்ட காலத்தில் தமிழ்ப் பிரதேசங்களில் பாடசாலைகளுக்கு எல்லாம் அரசு போதிய நிதி ஒதுக்கியது போலவும், அக்காலத்தில் தமிழ் மக்களுக்கு வேலை வாய்ப்புக்கள் தாராளமாக கிடைத்தன போலவும், அன்றாடப் பிரச்சனைகளே அன்று இல்லாத காரணத்தால்தான் ஆயுதம் ஏந்தியது போன்றும் இன்று பேசத் தலைப்படுகிறார்கள்.

இன்றுள்ள வசதிகள், பந்தாக்கள், அரச தரப்பு பிரமுகர்களுடன் கிடைக்கும் அறிமுகங்கள் மூலம் பெறும் போலியான கௌரவங்கள் என்பவற்றை தக்க வைத்துக் கொள்ளும் வகையிலேயே தமிழ்க் கட்சிகள் சிந்திக்கின்றன.

இந்த சின்ன சின்ன வட்டங்களுக்குள் இருந்து வெளியே வரமுடியாத நிலையில், போராட்டங்களையே கொச்சைப்படுத்தவும், இன உரிமைக்கான தியாகங்களை வீண் விரயம் என்று சித்தரிக்கவும்கூட இக்கட்சிகள் தயங்கப் போவதில்லை.

இந்நிலையில் இக்கட்சிகளால் பகிரங்க அரசியல் களத்தில்கூட தீர்கமான பாத்திரம் வகிக்க முடியாது.



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி



## பூலான் தேவி

87

தருவது ரசிகன்

பூலானின் முகத்தில் கோபம் கொந்தளித்தது. "அசையக் கூடாது" என்று பொலிஸ் அதிகாரி சதுர்வேதிக்கு கட்டளையிட்ட தொனியில் கோபம் தெறித்தது.

சதுர்வேதிக்கு ஒன்றும் புரியவில்லை. அப்படியே இருக்கையில் அசையாமல் இருந்தார்.

அதேநேரம் ஹெலிகொப்டர் மைதானத்தில் தரையிறங்கிக் கொண்டிருந்தது.

"முதலமைச்சர் வருவார் என்றீர். யாரோ சி.எம். வருகிறானாமே, யார் அவன்?" என்று உறுமினாள் பூலான்.

அப்போதுதான் சதுர்வேதிக்கு பூலானின் கோபத்துக்கான காரணம் புரிந்தது.

பூலானின் அறியாமையால் ஏற்பட்ட குழப்பம் அது. அவளுக்கு பக்குவமாக கூறினார்:

"முதலமைச்சரை ஆங்கிலத்தில் 'சி.எம்' என்றுதான் சுருக்கமாக அழைப்பார்கள். 'சீஃப் மினிஸ்டர்' என்பதன் சுருக்கம்தான் சி.எம்!"

சதுர்வேதி சொன்னதும் பூலானின் முகம் சுண்டிப்போனது. தன் அறியாமைக்காக வருந்துவதுபோல் தெரிந்தாள்.

அவளது சங்கடத்தைப் போக்கும் விதமாக, "சரி, இனி கீழே இறங்கலாமா மகளே?" என்றார் சதுர்வேதி.

பஸ் சென்று மைதானத்தின் அருகே நின்றதும், மக்கள் கூட்டம் மொய்த்துக் கொண்டது.

'பூலானுக்கு ஜே!' என்று கூட்டம் ஆரவாரித்தது. பொலிசார் கூட்டத்தினரை விலக்கி பூலானுக்கு வழிவிட ஏற்பாடு செய்ய பெரும்பாடுபட்டனர்.

ஹெலிகொப்டரில் இருந்து இறங்கிய மத்திய அமைச்சர் அர்ஜுன் சிங் அந்தப் பள்ளிக்கூட மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் ஏறி அமர்ந்து கொண்டார்.

23 அடி உயரத்தில் மேடை அமைக்கப்பட்டிருந்தது.

பூலானின் விருப்பப்படி மேடையில் துர்க்கையம்மன் படம் ஒன்றும், மகாத்மா காந்தியின் படம் ஒன்றும் வைக்கப்பட்டிருந்தன.

காக்கி உடையுடன், அதன்மேலாக போர்த்தப்பட்டிருந்த சிவப்புக் கம்பளத்துடன் பூலான் தேவி, மேடைக்குச் செல்லும் படிக்கட்டில் ஏறத் தொடங்கியபோது நேரம் காலை 9மணி.

பூலான் மேடையில் ஏறத் தொடங்க மக்கள் கூட்டம் உணர்ச்சிவசப்பட்டு "பூலான் வாழ்க!" "துர்க்கையின் அவதாரம் வாழ்க!" என்று எழுப்பிய கோஷம் மைதானமெங்கும் ஓங்கி ஒலித்தது.

பூலானின் வலது தோளில் அவளது றைபிள் தொங்கிக்கொண்டிருந்தது. தலைக்கும் சிவப்புப் பட்டி கட்டி இருந்தாள்.

மேடையில் ஏறிய பூலான் கூட்டத்தைப் பார்த்ததும் ஒரு நொடி திகைத்துப் போய்விட்டாள்.

பின்னர் சுதாகரித்துக்கொண்டு கூட்டத்தினரை நோக்கி தன் கைகளை அசைத்தாள்; வணங்கினாள்.

கூட்டம் ஆரவாரித்தது.

பூலானுக்கு நெஞ்செல்லாம் குளிர்ந்தது. தன் வாழ்க்கை சீரழிந்து திசைமாறி விட்டதே; சாதாரண பெண்ணாக வாழ முடியவில்லையே, என்று பூலான் சில சமயங்களில் வருந்தியது உண்டு.

ஆனால், அங்கு திரண்டிருந்த மக்கள் வெள்ளத்தைப் பார்த்ததும் பூலான் தன்னை எண்ணி தானே பெருமிதம் கொண்டாள்.

அவள் நெஞ்சம் பெருமிதத்தால் விம்மியது. அவள் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தோடியது. வாய்விட்டே அழுது தீர்த்திருப்பாள், ஆனாலும் அடக்கிக் கொண்டாள்.

ஆண்களைவிட பெண்களும், குழந்தைகளும்தான் ஏராளமாக அங்கு காணப்பட்டனர். எல்லோர் முகங்களிலும்- அவள்மீது கொண்ட வாஞ்சை தெரிந்தது.

மேடையில் இருந்த மேசையில் மூன்று மாலைகள் இருந்தன. அதுவும் பூலான் கேட்டுக் கொண்டபடி சதுர்வேதி ஏற்பாடு செய்ததுதான்.

மேடையில் அமர்ந்திருந்த முதலமைச்சரும், அவருடன்கூட வந்திருந்த அதிகாரிகளும் பூலானை வரவேற்று கரகோஷம் செய்தனர்.

மேடையில் உள்ளவர்களைவிட தான் சற்றும் குறைந்தவள் அல்ல என்று பெருமித உணர்ச்சியுடனும் தன்னம்பிக்கையுடனும் அவர்களை நோக்கினாள் பூலான்.

பின்னர் மேசையில் இருந்த மாலைகளை ஒவ்வொன்றாக எடுத்து துர்க்கா தேவி, காந்தி ஆகியோரின் படங்களுக்கு அணிவித்தாள்.

மூன்றாவது மாலையை பூலான் என்ன செய்யப்போகிறாள் என்று அனைவரும் ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தனர்.

மூன்றாவது மாலையை முதலமைச்சர் அர்ஜுன் சிங்குக்கு அணிவித்தாள் பூலான்.

கரகோஷம் ஓயாமல் ஒலித்துக் கொண்டிருக்க, மேடையின் முன்புறம் வந்தாள்.

மீண்டும் ஒருமுறை தன் இரு கைகளையும் தலைக்கு மேல் உயர்த்தி கூட்டத்தினரை நோக்கி அசைத்தாள்.

தன் தோளில் இருந்த றைபிளை எடுத்து தன் இரு கைகளாலும் தலைக்குமேல் உயர்த்திக் காண்பித்தாள்.

"பூலான் தேவிக்கு ஜே!"

"பூலான் தேவிக்கு ஜே!"

கூட்டம் கூவியது. சிறுவர் சிறுமிகள் துள்ளித் துள்ளி ஆரவாரம் செய்தனர்.

அதன் பின்னர் மேசையில் இருந்த மகாத்மா காந்தியின் படத்தை சில நொடிகள் கூர்ந்து பார்த்தாள்.

காந்தி பொக்குவாயால் சிரித்துக் கொண்டிருந்தார். தன்னைப் பார்த்துத்தான் அவர் சிரிப்பது



போலிருந்தது பூலானுக்கு.

மகாத்மா காந்தியின் படத்தின் முன்னால் தன் றைபிளை வைத்தாள் பூலான் தேவி.

"எந்தத் தனி மனிதரிடமும் எனது ஆயுதத்தை ஒப்படைக்க மாட்டேன். காந்தி படத்தின் முன்னால்தான் ஆயுதத்தை வைப்பேன்!" என்பது பூலான் கூறிய முக்கிய நிபந்தனை.

அந்த நிபந்தனை ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

"பூலான் தேவிக்கு ஜே!"

மக்கள் கூட்டம் உணர்ச்சிப் பெருக்கில் கோஷமிட்டது. பல பெண்கள் கண்ணீர் விட்டு அழுதனர். சிறுவர் சிறுமிகள் கூட தேம்பினார்கள்.

மேடையைவிட்டு இறங்கிய பூலானை பொலிசார் பாதுகாப்பாக கவசமாகச் சூழ்ந்து கொண்டனர்.

பூலானை நெருங்கிவர மக்கள் முண்டியடித்தனர். பொலிசார் தடுத்து அவர்களைப் பின்னால் தள்ளிக் கொண்டிருந்தனர்.

மேடைக்கு அருகே பொலிஸ் ஜீப் நின்று கொண்டிருந்தது.

பொலிஸ் ஜீப் அருகே பத்திரிகை நிருபர்கள் குழுமியிருந்தனர்.

"சில கேள்விகள்தான்," என்று சதுர்வேதியிடம் அனுமதி பெற்றுக்கொண்டனர்.

நிருபர்களின் கேள்விகள் பூலானை ஒரு கட்டத்தின் மேல் கோபப்படுத்தின. அந்தக் கோபத்தில் பூலான் சொன்ன பதில்களைக் கேட்டு சதுர்வேதிகூட ஆச்சரியப்பட்டுப் போனார்.

**கே:** உங்களுடைய குழுவுக்கு நீங்கள்தான் உண்மையான தலைவியா? ஒரு பெண்ணால் எப்படி இது சாத்தியம்?

**பூ:** ஏன், இந்த நாட்டை ஒரு பெண்ணே ஆட்சி செய்யவில்லையா? அவர்களிடமும் இக்கேள்வியைக் கேளுங்களேன்.

**கே:** உங்கள் முன்னாள் கணவன் புத்திலால் எங்கே?

**பூ:** அந்த இழிமகனை நான் கொல்லாமல் விட்டுவிட்டேனே என்றுதான் கவலைப்படுகிறேன்.

**கே:** ஒரு கொள்ளைக்காரியாக இருந்து எவ்வளவு பணம் சம்பாதித்தீர்கள்?

இக் கேள்வியைக் கேட்ட நிருபரை முறைத்துக் கொண்டே, "அதைப்பற்றி நீர் ஏன் கவலைப்படுகிறீர்? பணக்கஷ்டமா?" என்றாள். நிருபர் வாயை மூடிக்கொண்டார்.

**கே:** உமது பாதுகாப்புக்கு இருந்த ஆண் யார்? என்று விஷமமாக கேள்வி ஒன்றை தொடுத்தார் நிருபர் ஒருவர்.

"ஏன், உன் அப்பன்தான்!" என்று பூலான் கொடுத்த பதிலால் அந்த நிருபர் அரண்டு போனார்.

பொலிஸ் வண்டியில் மிக இலாவகமாக துள்ளி ஏறினாள் பூலான் தேவி.

பொலிஸ் வண்டியை வளைத்து இரும்புக் கம்பிவலை அடிக்கப்பட்டிருந்தது.

நிருபர்களின் கேள்வியால் உஷ்ணமான பூலான் தன் உதடுகளை இறுக்கி ஆத்திரத்தை தணிக்க முயன்று கொண்டிருந்தாள்.

அதேநேரம் கமராக்கள் பல ஒரே நேரத்தில் அவள்மீது வெளிச்சங்களைப் பாய்ச்சின.

சலிப்படைந்த பூலான், "எடுங்கடா, எத்தனை படங்களை வேண்டுமானாலும் எடுங்கடா. என் படங்களை விற்று பணம் சம்பாதியுங்கடா!" என்று கத்தினாள்.

இனிமேலும் தாமதித்தால் பூலான் நிருபர்களை நோக்கிப் பாய்ந்தே விடுவாள். அவள் பாயாவிட்டாலும், கூடியிருக்கும் கூட்டத்திடம் கட்டளையிட்டால் போதும், நிருபர்களை நார் நாராகக் கிழித்து தொங்கவைப்பார்கள் என்பதை உணர்ந்த சதுர்வேதி, வண்டியை விரைவாகக் கிளப்ப உத்தரவிட்டார்.

வாகனம் புறப்படத் தொடங்கியதும், பூலானைப் பிரியும் சோகத்தில் பலரும் புலம்பிய காட்சியும், வாகனத்தின் பின்னால் அழுதழுது ஓடிவந்த காட்சியும் பூலானை மெய்சிலிர்க்க வைத்தன.

அவர்களை நோக்கி கையசைத்துக் கொண்டே இருந்தாள்.

அவள் கண்களில் இருந்து கண்ணீர் கொட்டிக் கொண்டிருந்தது.

ஆனால், முதன் முதலில் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்ட போது, 'ஐயோ எனக்கு யாருமில்லையே...!' என்று நிராதரவாக, அப்பாவியாக சிந்திய கண்ணீருக்கும், இப்போது சிந்தும் கண்ணீருக்கும் இடையே வேறுபாடு இருந்தது.

இது, ஆனந்தக் கண்ணீர்!

தன்னை சின்னாபின்னமாக்கியவர்களை எதிர்த்துப் போராடி, பல்லாயிரம் மக்களால் வாழ்த்தப்படுமளவுக்கு மாறிவிட்டபின்னர், அந்த அன்பில் நெகிழ்ந்து சிந்தும் கண்ணீர்.

'பூலான் தேவிக்கு ஜே!'

அவள் காதில் அந்தக்குரல்கள் ஒலித்துக் கொண்டே இருந்தன. (நிறைவு)

## முன்னாள் அழகிகளின் மோதல்

"ஐஸ்வர்யா ராய் உலக அழகியானது எப்படி என்று எனக்குத் தெரியாதா என்ன, யார் யாருக்கு எதை எதைக் கொடுத்தார் என்று சொன்னால் அவர் தலைமறைவாக வேண்டியதுதான்!" இப்படியொரு குண்டைத் தூக்கிப் போட்டுள்ளார் சுஷ்மிதா சென்.



முன்னாள் உலக அழகிகளுக்குள் ஏன் இந்த மோதல்? விசாரித்தால்- அல்லது நோண்டினால் பல திடுக்கிடும் தகவல்கள் கிடைக்கின்றன.

ஐஸ்வர்யா ராயின் காதலர் அக்ஷய் கன்னாவுடனும் சுஷ்மிதாவுக்கு நட்பு இருந்ததாம். இடையிலே புகுந்து அக்ஷய் கன்னாவின் இதயத்தை கொத்திக் கொண்டு போய்விட்டார் ஐஸ்வர்யா ராய்.

"அக்ஷய் குமார் போன்ற இந்திப்பட இளம் நாயகர்களுடன் சுஷ்மிதா கொஞ்சிக் குலாவுகிறார். அக்ஷய் கன்னாவை அவருக்கு ஏன்?" என்று மும்பாய் பத்திரிகைகள் கிண்டலடிக்கின்றன.

ஐஸ்வர்யாவும், சுஷ்மிதாவும் அழகிப் பட்டங்களின் புண்ணியத்தில் சில கோடிகளை சம்பாதித்து வைத்திருக்கிறார்கள். தொடர்ந்து சம்பாதிக்கிறார்கள்.

வெளிநாடுகளில் பெரும் பண முதலைகளிடம் இருந்து அழைப்பு வந்தால், தங்கள் காதலர்களிடமிருந்து தற்காலிகமாகக் கழன்று கொண்டு பறந்து போகிறார்கள். நன்றாகக் கறந்து கொண்டு திரும்புகிறார்கள், என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இன்னொரு அதிர்ச்சியான சமாச்சாரம் என்ன தெரியுமா?

இந்திப் படவுலகின் வாட்டசாட்டமான வளப்பமான இளம் ஹீரோக்களுக்கும் வெளிநாடுகளில் உள்ள பணக்காரப் பெண்மணிகளிடம் இருந்து அழைப்புக்கள் வருகிறன. பறந்துபோய், சேவை செய்து பணம் கறந்து வருகிறார்கள்.

சில பிரபல நிறுவனங்கள் 'நண்பர்கள் சங்கம்' என்ற பெயரில் இவ்வாறான தொடர்புகளை ஏற்படுத்தி, குறிப்பிட்ட வீத கமிஷன் பெறுவதாகவும் தகவல்.

## டோடி நினைவாக



இளவரசி டயானாவின் காதலர் டோடி ஃபயட்டுக்கு எகிப்தில் பிரமாண்டமான நினைவு மண்டபம் கட்டப்போகிறார்கள்.

செலவு மட்டும் இரண்டுகோடி ரூபாய்கள். டோடியின் தந்தை முகமத் அல் ஃபயட்தான் இந்த நினைவிடத்தை கட்டப் போகிறார்.

சிகப்பு சலவைக் கல்லால் உருவாகப் போகும் நினைவிடத்திற்கான மாதிரி வடிவமும் தயாராகிவிட்டது. எகிப்திய பாரம்பரியப் பாணியில் கட்டிமுடிக்கப்போகின்றனர்.

இதற்கிடையே 'டயானா தற்செயலான விபத்தில் இறக்கவில்லை, திட்டமிட்ட விபத்தில் இறந்தார்!' என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

டயானா பயணம் செய்த காரில் இருந்து தப்பிய மெய்க்காவலரின் பேட்டியும், திட்டமிட்ட சதிதான் நடந்தது என்ற சந்தேகத்தை வலுப்படுத்தியுள்ளது.

ஆனாலும் பிரிட்டிஷ் மக்கள் அதனை பெரிதாக நம்பவில்லை. 'பிரிட்டனுக்கும் ஃபிரான்சுக்கும் இடையே ஆகாது என்பதால், 'ஃபிரான்ஸ்காரர்கள் கிளப்பிவிட்ட புரளி' என்று நினைக்கிறார்கள் பிரிட்டிஷ் மக்கள்.

எனினும் குறிப்பிட்டசாரார் "பிரிட்டிஷ் அரச குடும்பம் தம் கௌரவத்தைக் காக்க எந்த எல்லைக்கும் செல்லக்கூடியது!" என்றும் ஒப்புக்கொள்கிறார்கள்.

## ஆசாமி ஆஜரானார்



எத்தனை போலிச் சாமியார்கள் வசமாக மாட்டிக்கொண்டாலும், ஏமாறுகிறவர்களின் கண்கள் திறக்கப்போவதில்லை.

யாழ்ப்பாணத்திலேகூட போலி ஆசாமியும் சமூக விரோதியுமான பிரேமானந்தாவுக்கு ஆசிரமம் அமைத்து வைத்திருக்கிறார்கள்.

சமீபத்தில் சென்னையில் இன்னொரு போலிச் சாமியார் ஆஜரானார். கல்கி சாமியார் என்று பெயர். இதுவரைகாலமும் திருடன் மாதிரி தலைமறைவாக இருந்த இந்த ஆசாமி சமீபத்தில் பகிரங்கத்தில் தோன்றி பக்தர்களுக்கு (?!) தரிசனம் கொடுத்தார்.

கூடியிருந்த இளம் பெண்களும், இளைஞர்களும் பக்தி முற்றி களியாட்டம் போட்டதுதான் கண்றாவிக்காட்சி.

நல்ல அழகான இளம் பெண்கள் மற்றும் கல்லூரி மாணவிகளுக்கு வலைவீசி சந்நியாசினிகள் ஆக்குவதுதான் கல்கி சாமியாரின் பொழுதுபோக்கு.

தான் மட்டும் குடும்பம் குழந்தை என்று படு ஜோராக இருந்துகொண்டு, இளம் பெண்களை முற்றும் துறந்தவர்கள் ஆக்கிக் கொண்டிருக்கிறார். முற்றும் துறக்கத்தான் செய்கிறார் போலிருக்கிறது.

மஞ்சள் உடையுடன் இருந்த கல்கி சாமியும் அவரது கூட்டமும் இப்போது வெள்ளை உடைக்கு தாவியிருக்கிறது.

தம்மை அவதாரம் என்றும், உலகை மாற்றும் சக்தி படைத்தோர் என்றும் கூறுமளவுக்கு மக்களை எத்தனை முட்டாள்களாக நினைக்கிறார்கள் இந்த ஆசாமிகள்!

## தமிழில் பேசும் ஜேம்ஸ்பொண்ட் 007

'ஜூராசிக் பார்க்' திரைப்படத்தை தமிழில் 'டப்' செய்து வெளியிட்டபோது செமர்த்தியான வரவேற்பு கிடைத்தது.

அந்த வரவேற்பு கொடுத்த தைரியத்தில் இன்னொரு அபாரமான ஹொலிவூட் படத்தை தமிழில் டப் செய்யப்போகிறார்கள்.

புதிதாக வந்து கலக்கிக் கொண்டிருக்கும் ஜேம்ஸ்பொண்ட் 007 துப்பறியும் திரைப்படம் 'டுமாரோ நெவர் டைஸ்'. இது பத்தொன்பதாவது ஜேம்ஸ் பொண்ட் படம்.



இப்படத்தை வாங்கி தமிழிலும் தெலுங்கிலும் மொழிமாற்றம் செய்யப்போவது 'ஹன்சா பிக்சர்ஸ்' என்னும் பட நிறுவனம். இவர்கள்தான் ஜூராசிக் பார்க் படத்தையும் மொழிமாற்றம் செய்தனர்.

ஜேம்ஸ் பொண்டாக நடிக்கும் பியர்ஸ் ஃப்ராஸ்னனுக்காக 'கோபி' என்னும் நடிகர் தமிழில் பின்னணிக் குரல் கொடுக்கிறார்.

'டுமாரோ நெவர் டைஸ்' பற்றி சில மேலதிகத் தகவல்கள்.

படத்தின் தயாரிப்புச் செலவு 400 கோடி டொலர்கள். நம்மூர் மதிப்பில் 24 ஆயிரத்தி 500 கோடி ரூபாய்கள்.

கதாநாயகன் பியர்ஸ் ஃப்ராஸ்னனுக்கு இது இரண்டாவது ஜேம்ஸ் பொண்ட் படம்.

கதாநாயகி மிஷெல் இயோ முன்னாள் மலேசிய அழகுராணி. ஜாக்கிசானுடன் பொலிஸ் ஸ்டோரி II படத்தில் நடித்தவர். கராத்தே, குங்பூ எல்லாம் தண்ணீர்பட்டபாடு.

தற்போது ஆசியாவிலேயே அதிக சம்பளம் பெறும் நடிகையும் இவர்தான்.

உலகெங்கும் படம் வெளியான சூட்டோடு சூடாக 350 மில்லியன் அமெரிக்க டொலர்களை வசூலாக அறுவடை செய்துள்ளது.

சாகசங்கள், லவ்வுதல், உதட்டோடு உதடு கவ்வுதல் என்று சகல பொழுதுபோக்கு அம்சங்களுடனும் தூள் நடை போடுகிறது.

உங்களுக்கு இவரைத் தெரியும்! ஆனால், முழுமையாகத் தெரிந்திருக்காது! அதிகார வெறி- பெண்பித்து- அசுரத்தனமான செயற்பாடுகள் என்பவற்றின் மொத்த வடிவம்! இவர் பெயர்

இடி அமீன்

அடுத்த வாரம் முதல் இந்தப் பயங்கர மனிதரை சந்திக்கப் போகிறீர்கள்! வாரா வாரம் நெஞ்சை உலுக்கும் உண்மைத் தொடர்.

எழுதுவது ரசிகன்





படிப்பகம்

www.padippakam.com

## எடை



↑ உலகப் புகழ்பெற்ற சுமோ மல்யுத்தம் என்றாலே கூடவே மாமிச மலைகளின் ஞாபகம் வராமல் போகாது.

உண்டு உண்டு குண்டாகி, உருண்டு உருண்டு சண்டைபோடும் மாமிச மலைகள் அனைவருமே பிரமாண்ட எடை கொண்டவர்கள்தான். ஆனாலும் 1993ம் ஆண்டு முதல் இன்றுவரை அதிக எடை மற்றும் ஆகக்கூடிய உயரமும் கொண்ட உலக சாதனையாளராக இருப்பவர் சாட்றோவன்.

இந்த சுமோ மல்யுத்த மலை பிறந்தது ஹவாய் நாட்டில்.இவரது உயரம் 2.4மீட்டர், (6 அடி 8 அங்குலம்). எடை என்ன தெரியுமா? 227 கிலோ (501 இறாத்தல்). நம்மேல் புரண்டால் அப்பளமாகிவிடுவோம். சாதாரண மனிதர்களை விட மூன்றரை மடங்கு அதிக எடை.

அடுத்த அதிர்ச்சித் தகவல்: இவரது மாத வருமானம் சுமார் நாலு இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய்கள். சும்மா வாயைப் பிளக்காதீர்கள், மனுசனுக்கு சாப்பாட்டுக்கே அதில் பாதி செலவாகி விடுகிறதாம். உலகில் அதிகம் சம்பாதிக்கும் சுமோ வீரரும் இவர்தான்.



## வளையாத உறுதி

↑ அடிமைகளாக, அல்லது சொரணையற்ற எருமைகளாக வாழ்வது சுலபம். குட்டக் குட்ட குனிந்து கொண்டிருந்தால் சண்டைகளும் இருக்காது!

அப்படியில்லை; நாங்களும் மனிதர்களே, கௌரவமான தன்மானமுள்ள பிரஜைகளே என்று வாழ நினைத்தால், அதற்கு தடையாக உள்ள சக்திகளை எதிர்த்து போராடுவது தவிர்க்க முடியாதது. அப்படிப் போராடும்போது அழிவுகள் வரும். நெருக்கடி வரும். அடக்க நினைப்பவர்கள் எத்தனையோ விதமான கொடூர முறைகளால் போராடும் மக்களை அழிக்க நினைப்பர். அத்தனையையும் கண்டும் உறுதி வளையாத மக்கள்தான் தங்கள் எதிர்கால சந்ததிக்கு கௌரவமான வாழ்க்கையைத் தம் சொத்தாக விட்டுச் செல்கிறார்கள்.

ஈராக் மக்கள் அதனைத்தான் செய்கிறார்கள். அமெரிக்காவுக்கு அடிபணிய சதாம் மட்டும் சம்மதித்தால்போதும், அவரை தலையில் தூக்கி வைத்துக் கொள்ளவும் அமெரிக்கா தயாராய் இருக்கும்.

சதாமும், ஈராக்கும் பணிய மறுப்பதால்தான் பொருளாதாரத் தடைகள். வான்போக்குவரத்துத் தடைகள் என்று பல்வேறு நெருக்கடிகள் கொடுத்து, ஈராக் மக்களின் உறுதியை உரசிப் பார்க்கிறது அமெரிக்கா.

ஆனால், ஈராக் மக்கள் உறுதியுடன் உள்ளனர். பர்த்தா போடும் பெண்கள் அமெரிக்கா வாலாட்டினால் களமிறங்கத் தயார். படத்தில் பாருங்கள், கைக் குண்டை பயன்படுத்த பயிற்சி பெறுகிறார்கள். தடைகளும், நெருக்கடியும் அமெரிக்கா எதிர்பார்ப்பதற்கு மாறாக பயத்தையோ, விரக்தியையோ அல்ல, எதையும் தாங்கும் மன உறுதியையே வளர்த்து வருகின்றன. ■



## வானமென்னும் வீதியிலே

← ஓரம்போ, ஓரம்போ என்று கூவத் தேவையில்லை. ஏனெனில் இந்த கட்டை வண்டி பயணிப்பது தரையில் அல்ல, வானத்தில்!

என்ன, நம்ப முடியவில்லையா, பாரசூட்டின் உதவியுடன்தான் இந்த அதிசய பறப்பை செய்து காட்டியுள்ளார்.

ஃபிரான்சில் வருடா வருடம் நடைபெறும் பாராசூட் விழாவில் இப்படிப்பட்ட பலவிதமான சாகசங்கள் நடப்பதுண்டு.

பாரசூட்டில் தொங்கிக்கொண்டு கட்டை வண்டியில் ஒரு ரவுண்ட் அடித்து தரையில் இறங்கிவிட்டார். ஆனாலும் அபாயமான சாகசம்தான். சிறிது பிசகினால் பொறுக்க எலும்பு துண்டுகளும் மிஞ்சாது. ■

## அன்றும் — இன்றும்

↓ 1996ல் கிளிநொச்சி நகரை 'சத்ஜய' துருப்புக்கள் கைப்பற்றின. அந்த நடவடிக்கையால் நகரம் தரை மட்டமானது. நகரில் இருந்த கடைத்தொகுதிகள் எலும்புக்கூடாக காட்சி தருகின்றன. கடந்த மாதம் 04ம் திகதி புலிகளின் அணிகளுக்கும், படைகளுக்கும் இடையிலான சமரின் பின்னர் அப்பகுதியில் ரோந்து செல்லும் புலிகள்தான் படத்தில் காணப்படுகின்றனர்.



கீழே உள்ள படம் இரண்டாம் உலகப் போரில் 'கிளிக்' செய்யப்பட்டது. போரினால் உடைந்தன கட்டடங்கள். போலந்தில் ஜெர்மன் துருப்புக்களின் பீரங்கித் தாக்குதலின் பின்னர் எடுக்கப்பட்ட படம் இது. காலங்கள் மாறினாலும் யுத்தத்தின் கோலங்கள் மாறுவதில்லை என்பதற்கு கச்சிதமான உதாரணங்கள் இந்த இரு படங்கள். ■



## தகவல் பெட்டி

### சின்ன மனிதன்



← வயது 24, ஆனால் வளர்ச்சி ஆக, 65 சென்டி மீட்டர் மட்டும்தான்!

இவர் ஜோர்டான் நாட்டைச் சேர்ந்தவர். பெயர்: யூனூஸ்.

குனிந்து நின்று அவரை அளந்து காட்டுபவர் அவரது சகோதரர். உலக சாதனைப் புத்தகத்தில் பதிய விண்ணப்பிக்கப்போகிறார்களாம்.

யூனூசுக்கு இன்னமும் திருமணம் ஆகவில்லை. இவருக்கென்று ஒரு ராஜகுமாரி பிறக்காமலா இருக்கப்போகிறாள்?!

உயரத்தில் சின்னதாக இருந்தாலும் உள்ளம் பெரிது. கைவேலைகள் மூலம் பணம் சம்பாதிக்கிறார். "நான் யாருக்கும் பாரமாக இருக்க விரும்பவில்லை" என்கிறார். இவர் எப்படி பாரமாக இருக்க முடியும்? ■

### உளதலாமா?

→ ப்பூ.. என்று ஊதினால் பொசுக்கென்று பறந்து விடும், அத்தனை பலவீனமானது பூச்சி என்றுதானே நினைக்கிறோம். அது தப்பு. பூச்சியிலும் பாரமான பூச்சிகள் உண்டு. உலகிலேயே மிகப் பாரமான பூச்சி படத்தில் இருப்பதுதான். (அதன் முழுமையான அளவுடன் அப்படியே படத்தில் உள்ளது). இதனை 'இராட்சத வண்டு' என்று அழைக்கிறார்கள். இதன் விஞ்ஞானப் பெயர்: ஸ்கராபயோடியா. ஆபிரிக்கா கண்டத்தின் பூமத்திய ரேகைப் பகுதிகளில்தான் இதனைக் காணமுடிகிறது. இதன் எடை: 70 முதல் 100 கிராம். (2 1/2 முதல் 3 1/2 அவுன்ஸ்) இந்த இராட்சத வண்டின் கொம்பு நுனியில் இருந்து வயிற்றின் முடிவு வரையான நீளம்: 11 சென்ரி மீட்டர் (அதாவது 4 1/3 அங்குலம்). அளந்து பார்த்துக் கொள்ளுங்கள். எடை கூடிய பூச்சியினமாக உலக சாதனை படைத்துள்ளது. பூச்சியும் சாதனை படைக்கும். ■






படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 47

# நடிகர்மீது சுமத்தப்பட்ட குற்றம்
## நம்பினார் காதலி நடிகை

மண்வாசனை இயக்குநர் அறிமுகம் செய்துவைத்த நடிகை அவர். அவரது பெயரில் உள்ள ஒரு எழுத்தை எடுத்து விட்டால், தேவலோக அழகி ஒருவரது பெயராகி விடும்.

அந்த நடிகையை இயக்குநர்தான் நேரடித் தேடலில் கண்டுபிடித்துக் கொண்டு வந்தார்.

நடிகைக்கு புது அனுபவம். இயக்குநர் புது நடிகைகளை மெருகேற்றுவதில் வல்லவர். நடிகையை நட்சத்திர விடுதி ஒன்றிலேயே நிரந்தரமாக தங்கவைத்துக் கொண்டார்.

நடிகையும் இயக்குநரின் சொற்படி கேட்டு பக்குவமாக நடந்து கொண்டார்.

படப்பிடிப்பு ஆரம்பமானது கதாநாயகன் இளமையானவர். அவரும் திரையுலகுக்கு சற்றுப் புதியவர். அதனால்கூட நடிக்கும் நடிகைகளுடன் பேசவே வெட்கப்படுவார். ஆனால், காதல் காட்சிகளில் மட்டும் அவரது கைகள் இயக்குநருக்கே தெரியாமல் விஷமம் பண்ணும்.

நடிகைக்கும் அது பிடித்திருந்தது. நடிகருடன் அன்பாக பழகத் தொடங்கினார். என்றாலும் இயக்குநரின் பூரண கட்டுப்பாட்டில் இருந்ததால், நடிகையால் தன் காதலரை தனியாகச் சந்திக்க முடியவில்லை.

படப்பிடிப்பு நேரங்களில் இயக்குநருக்குத் தெரியாமல் சின்ன சின்ன சந்தோசங்களுடன் நிறுத்திக் கொள்ள வேண்டியிருந்தது.

படம் வெளியாகி நடிகையும் பிரபலமானார். கவர்ச்சியாக நடித்து ரசிகர்களின் உள்ளங்களையும் கிள்ளியிருந்தார்.

பிரபலமாகிவிட்டதால் புதிய பட வாய்ப்புக்கள் தேடி வந்தன.

அதுதான் சாக்கு என்று இயக்குநரைவிட்டு தனியாகக் கழன்றுகொண்டார் நடிகை.

### வலையில் சிக்கினார்

அதன் பின்னர் அந்த மூன்றெழுத்து இளம் ஹீரோவுடன் ஐக்கியமானார். அந்த ஹீரோ தெலுங்குப் படங்கள் சிலவற்றிலும் நடித்து வந்தார்.

கராட்டியில் கறுப்புப் பட்டி பெற்றவர் அவர். நல்ல உயரமானவர். அழகானவர். கல்லூரி மாணவிகள் சிலரும் அவரது வலையில் விழ்ந்திருந்தனர்.

நடிகையும் அவரது வலையில் விழ்ந்து, அவரது இழுப்புக்கெல்லாம் இசைந்து போனார்.

அந்த நடிகரின் 'போக்குச் சரியில்லை. உன்னை ஏமாற்றி விடுவார் என்று இயக்குநர் எவ்வளவோ சொல்லிப்பார்த்தார். நடிகை கேட்ட பாடில்லை. 'எக்கேடாவது கெட்டுப்போ' என்று இயக்குநர் விட்டுவிட்டார்.

### கைது

அப்போதுதான் அந்த அதிர்ச்சியான விடயம் நடிகையின் காதில் எட்டியது.

அந்த நடிகர் பொலிஸ் அதிகாரி ஒருவரது மகளைக் காதலித்திருக்கிறார். இருவரும் இணைந்து கடற்கரை விடுதி ஒன்றில் தனிமையில் இனிமை கண்டனர்.

இதனை அறிந்த பொலிஸ் அதிகாரி தன் அதிகாரத்தை காட்டினார். "நீலப்படம் தயாரிக்கிறார், கல்லூரி மாணவிகளை அதில் மயக்கி நடிக்க வைக்கிறார்" என்று குற்றம் சாட்டி, நடிகரை சிறைக்கு அனுப்பிவைத்தார்.

இதனை அறிந்த நடிகை, வெலவெலத்துப்போனார். தன்னுடன் நடந்தவற்றையும் இரகசியமாக படம் எடுத்திருப்பாரோ, என்று பயந்து போனார் நடிகை.

அதனால் சில காலம் தலைமறைவாக இருந்தார். நடிகர் சிறையில் இருந்து பலர் மூலம் தொடர்புகொள்ள முற்பட்டும் நடிகை அவரைச் சந்திக்க மறுத்துவிட்டார்.

அத்தோடு அவர்களது காதல் கதைக்கு 'முற்றும்' விழுந்தது. தற்போதும் அந்த நடிகர் நடித்து வருகிறார். நடிகையைக் காணவில்லை.

சினிமா வாய்ப்பு கைவிட்டுப் போனதால், தப்பான தொழிலில் நடிகை இறங்கியதாக பல தகவல்கள் வெளியாகின.




கரிஷ்மா கபூர்
படம்: கோடீஸ்வரன்



சிவாஜி-முரளி-ரோஜா
படம்: என் ஆச ராசாவே

### நான் ஒரு குஷ்பு

'நான் ஒரு குஷ்பு' என்று கூறுகிறார் ரோஜா. அதாகப்பட்டது, தனது கவர்ச்சி அம்சங்கள் திகட்டிய பின்னரும் குணசித்திர வேடங்களில் கொடிகட்டிப் பறக்கிறார் குஷ்பு. அதேபோலவே தன்னாலும் தாக்குப்பிடிக்க முடியும் என்கிறார் ரோஜா.

இதற்கிடையே அடுத்த வருடம்வரை மறுபடியும் தமது திருமணத்தைத் தள்ளிப்போட்டுள்ளார்களாம் செல்வமணியும் ரோஜாவும்.

### மொட்டை நளினி

நடிகர் ராமராஜன் தேர்தலில் வென்று எம்.பியாகிவிட்டார். ஏற்கனவே ஒருதடவை கணவருக்காக மொட்டை அடித்தார் நளினி.

தனது கணவர் எம்.பியானால் மறுபடி மொட்டை போடுவதாக வேண்டிக் கொண்டாராம். எம்.பியாகிவிட்டதால் மீண்டும் மொட்டை போட்டுள்ளார்.

### காத்திருக்கிறார்

ரஜினி தன் அடுத்த படத்தைத் தள்ளிக்கொண்டே போவதால் ரம்பாவும், சிம்ரானும் படு டென்ஷனில் இருக்கிறார்கள்.

சமீபத்திய கோவை குண்டுவெடிப்பு, தேர்தல் முடிவுகள் காரணமாக ரஜினி கவலையடைந்துள்ளார். இந்நிலையில் அறிவிப்பதாக இருந்த புதுப்படம் பற்றிய செய்தியை ஒத்திப் போட்டுள்ளார்.

எப்படியாவது ரஜினியின் அடுத்த படத்தில் நடித்துவிட ரம்பாவும், சிம்ரானும் பலத்த ஆர்வத்துடன் உள்ளனர்.

### பொன்விழா

'உரிமை கீதம்', 'நம்ம அண்ணாச்சி' ஆகிய படங்களைத் தயாரித்த சிவஸ்ரீ பிக்சர்ஸ் அடுத்து தயாரிக்கும் படம் 'பொன்விழா'.

இப்படத்தில் நெப்போலியன் கதாநாயகனாக நடிக்கிறார். கதாநாயகி தேர்வு நடக்கிறது.

'தமிழச்சி' படத்தை இயக்கிய எஸ்.அசோகன் இயக்கவுள்ளார். இசை: தேவா. மணிவண்ணன், ரஞ்சித் ஆகியோரும் நடிக்கின்றனர்.

நெப்போலியன் நடித்து வெளியான 'கிழக்கும் மேற்கும்' வசூலுக்கு பாதகமில்லாமல் ஓடுகிறது. அதனால் நெப்போலியன் உற்சாகமாகி இருக்கிறார்.

விஜயகாந்த்
படம்: தர்மா

### முதலிடமா?

தமிழில் நம்பர்வன் இடத் பிடித்துள்ளார் தேவயாணி எ தமிழக சினிமா இதழ்கள் கூறுகின் தைப்பொங்கலுக்கு தேவயாணி நான்கு படங்கள் வந்ததும் உடனே ருக்கு நம்பவர் வன் இடத்தை வழங்கிவிட்

இதனால் ரோஜா, மீனா போ நடிகைகள் கவலையடைந்துள்ளனர். அதி மீனாவுக்கு குடும்பப்பாங்கான நடிகை எ பெயர் இருந்தது. 'நாம் இருவர் நமக்கு இரு படத்தின் பின்னர் அந்த இமேஜ் போயே போயா

"சம்பளம் கூட்டித் தரலாம். தாராளமாக ந முடியுமா?" என்றுதான் புதிதாக ஒப்பந்தம் வருகிறவர்கள் கேட்கிறார்களாம். "மாட்டவே மாட் தமிழில் என்னை பண்பான பாத்திரங்களில் கா இரசிகர்கள் விரும்புகிறார்கள்" என்று கூறிவிட்டா மீனா. தன்னை உரித்த கோழியாக காட்டிய இயக் சி. சுந்தர்மீது காட்டமான கோபத்தில் இருக்கிறார்.

### ஊசலாடாத கமல்

படைப்பாளிகள் சங்கம், சினிமா தொழிலாளர்கள் சங்கம் (பெப்சி) ஆகியவற்றுக்கு இடையேயான பிரச்சனையில் கமல் தொழிலாளர் பக்கம் நின்றார்.

அதனால் அவரது குருவான பாலச்சந்தர் உட்பட பல முக்கிய இயக்குநர்களின் விரோதத்தை சம்பாதித்தார் கமல்.

கமலுக்கு மலர்வளையம்கூட படைப்பாளிகளால் அனுப்பிவைக்கப்பட்டது. ஆனால் கமல் அசரவில்லை.

இப்போது படைப்பாளிகள் சங்கம் யோசிக்க ஆரம்பித்திருக்கிறது. தொழிலாளர்களை பகைத்துக் கொண்டு சுமுகமாக தொழில் நடத்த முடியுமா, இதனைவிட முன்னர் போன்றே ஒரு தாய் பிள்ளைகளாக சேர்ந்து தொழில் செய்யலாம். டென்ஷனும் இருக்காது என்று நினைக்கிறார்கள்.

'தேர்தல் முடிந்ததும் இரு தரப்பையும் இணைத்து வைக்கிறேன்' என்று கலைஞர் கூறியிருந்தார். ஆனால் தேர்தல் முடிவுகளால் கலைஞர் 'முட் அவுட்' ஆகியதால் சமரச முயற்சி தள்ளித் தள்ளிப் போனது.

படைப்பாளிகள் சங்கமும், தொழிலாளர் கூட்டமைப்பான பெப்சியும் இணைந்தால், வெற்றி தொழிலாளருக்கே. கமலுக்கும் வெற்றிதான். எத்தனையோ எதிர்ப்புக்கள் மத்தியிலும், குருநாதர் எதிர்த்தும் கமல் ஊசலாடாமல் இருந்தது தொழிலாளர்களிடையே நல்ல பெயரை தேடிக் கொடுத்திருக்கிறது.

### பிரபா பிரபு

'பொன் மனம்' படத்தை இயக்கிய எஸ்.பி.ராஜ்குமார் அடுத்து இயக்கப்போகும் படம் 'அன்புள்ள மன்னவனே! பிரபுதான் கதாநாயகன். ஜோடி தேவயாணி.

'இனியவளே' படத்தில் பிரபு நடித்துக் கொண்டிருக்கிறார். இப்படத்தில் பிரபுவின் பாத்திரப் பெயர் என்ன தெரியுமோ? பிரபாகரன்.



மனிஷா

### ராசி இல்லையா?

'இந்தியன்', 'பம்பாய்' படங்கள் போல அருமையான வேடங்கள் கிடைத்தால் தமிழிலேயே தொடர்ந்து நடிக்கவும் தயார் என்கிறார் மனிஷா கொய்ராலா.

இந்தியில் பட வாய்ப்புக்கள் மனிஷாவுக்கு முன்னர்போல் இல்லை. கஜோல், கரிஷ்மா கபூர், தபு என்று பலர் போட்டிக்கு நிற்கிறார்கள்.

நானா பட்டேகருடன் நட்பாக இருந்த காலத்தில் மனிஷாவுக்கு நல்ல ராசி. மளமளவென்று புகழ் உச்சிக்கு தூக்கிச் செல்லப்பட்டார்.

நானா பட்டேகருடன் காதல் பட்டென்று முறிந்த பின்னர் மனிஷாவின் ராசியும் மங்கிவிட்டது. ஆனால் மனிஷா அதனை ஏற்கத் தயாரில்லை. "ராசியாவது ரோசியாவது எல்லாம் என் திறமையைப் பொறுத்தது" என்று பேசுகிறார்.

www.padippakam.com

## கொஞ்சித் தப்பினார்

தெலுங்குப் படம் ஒன்றில் நடிக்க பணம் வாங்கிவிட்டு நடிக்கப்போகாமல் இருந்திருக்கிறார் சிம்ரான். படத தயாரிப்பாளர் முரட்டுப் பேர்வழி. தன் அடியாட்களை அனுப்பிவைத்தார்.

தகராறு பண்ண வந்தவர்களிடம் கொஞ்சிப் பேசினார் சிம்ரான். கொஞ்சு மொழியில் மயங்கிப் போனார்கள் அடியாட்கள். சிம்ரானை விட்டுவிட்டு, அவரது மனேஜரை மட்டும் போட்டுப் பின்னிவிட்டுப் பறந்து விட்டார்களாம்.

## ஞானியின் படம்

இசைஞானி இளையராஜா படங்களை தயாரிப்பதுண்டு. ஒரே சமயத்தில் இரண்டு படங்களைத் தயாரிக்கத் தற்போது திட்டமிட்டுள்ளாராம். ஒரு படத்தை களஞ்சியம் இயக்கப் போகிறார். இரண்டாவது படத்தை இயக்கப் போவது பாலுமகேந்திரா. அதில் கமலஹாசனை நடிக்க வைக்கும் எண்ணம் உண்டாம்.

## விஜயகாந்திற்கு இரட்டை வேடம்

தன் சொந்தப் படமான 'தர்மா' வை அடுத்து விஜயகாந்த் நடிக்கப்போகும் படம் 'வீரம் வௌஞ்ச மண்ணு', 'தர்மா' படப்பிடிப்புக்கள் முடிவடையும் கட்டத்தில் உள்ளன. அதனையடுத்து புதிய பட வேலைகள் ஆரம்பமாகும்

'வீரம் வௌஞ்ச மண்ணு' படத்தில் விஜயகாந்த் இரட்டை வேடத்தில் நடிக்கிறார். அவரது ஜோடி குஷ்பு. இன்னொரு ஜோடிக்கு தேர்வு நடக்கிறது.

கதை, திரைக்கதை, இயக்கம் கஸ்தூரிராஜா. இவர் 'நாட்டுப்புறப்பாட்டு', 'எட்டுப்பட்டிராசா' போன்ற படங்களை இயக்கியவர். தற்போது சிவாஜி, முரளி நடிக்கும் 'என் ஆச ராசாவே' படத்தையும் இயக்குகிறார். இசை: தேவா.

தந்தைக்கும் மகனுக்கும் இடையே நடக்கும் பாசப்போராட்டத்துடன் காதல், வீரம், நகைச்சுவை கலந்து படைக்கப்போகிறார்கள்.

மணிவண்ணன், ராதாரவி, செந்தில், மனோரமா ஆகியோரும் நடிக்கவுள்ளனர்.

## குளு குளு வேண்டும்

'தேவதை' படம் மூலம் அறிமுகமான கீர்த்திரெட்டி பணக்கார வீட்டுப் பெண். அதனால் படப்பிடிப்புக்களில் ஏராளமான பந்தா காட்டுகிறார்.

'நிலவு' என்னும் படத்தில் அவர் நடித்துள்ளார். நாகர் கோவில் என்ற இடத்தில் படப்பிடிப்பு நடந்தது.

இயக்குநரும் கதாநாயகனும் சாதாரண ஹொட்டலில் தங்கியிருந்தனர்.

நடிகையோ எனக்கு குளு குளு அறை வேண்டும். குளு குளு கார் வேண்டும் என்று அடம்பிடித்தாராம். இயக்குநருக்கு வந்ததே கோபம். கும்பிடுபோட்டுவிட்டார்.

இப்போது கீர்த்தி ரெட்டிக்கு பதிலாக சங்கவி நடிக்கிறார். நன்கு ஒத்துழைக்கிறார்.

## மினி சினி

* 'ராஜா' படத்தில் நடிகர் திலகத்துடனும், 'மாவீரன்' படத்தில் ரஜினியுடனும் நடித்த இந்தி நடிகர் தாராசிங், தற்போது நாகார்ஜுன் கதாநாயகனாக நடிக்கும் 'ஆட்டோ ட்ரைவர்' படத்தில் நடித்து வருகிறார்.
* சூப்பர் குட் ஃபிலிம்ஸ் தயாரிக்கும் 'சொல்லாமலே' படத்தில் முதலில் கதாநாயகியாக நடிக்க ஒப்பந்தமானவர் சுவலட்சுமி. என்ன காரணமோ தெரியவில்லை தற்போது சுவலட்சுமிக்குப் பதில் கௌசல்யா நடிக்கிறார்.
* நெப்போலியன்-அருண்பாண்டியன் இணைந்து நடித்து வந்த 'புலி பொறந்த மண்ணு' படம் இடையில் நிறுத்தப்பட்டிருந்தது. விரைவில் இப்படத்தின் படப்பிடிப்புக்கள் மறுபடி ஆரம்பிக்கப்படவுள்ளது.
* கே.பாலச்சந்தரின் 'தில்லானா தில்லானா' படத்தில் கார்த்திக்கும் பிரசாந்தும் கதாநாயகர்களாக நடிக்கவுள்ளனர். இவர்களுக்கு ஜோடிகளாக மீனாவும் சிம்ரானும் நடிக்கவுள்ளனர்.
* 'வாய் ஜாலம்' படத்தில் கதாநாயகனாக நடித்து வரும் சின்னி ஜெயந்த் அடுத்து அப்பாஸ் கதாநாயகனாக நடிக்கும் 'உனக்காக மட்டும்' என்ற படத்தை இயக்கித் தயாரிக்கவிருக்கிறார்.
* 'கடவுள்' படத்தை இயக்கி நடித்த வேலு பிரபாகரன் அடுத்து இயக்கி நடிக்கும்' புரட்சிக்காரன்' படத்திற்கு பணம் எதுவும் வாங்காமல் பாடல்களை எழுதுகிறார் கவிஞர் வைரமுத்து.
* மலையாள நடிகர் மனோஜ் கே.ஜெயன் நடித்த மலையாளப்படமொன்று தமிழில் 'அசுரவம்சம்' என்ற பெயரில் மொழி மாற்றப்பட்டு வருகிறது. விரைவில் இவர் விஜய் ஹீரோவாக நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கவுள்ளார்.
* சுரேஷ் கிருஷ்ணாவின் 'ஆஹா' படத்தில் கதாநாயகியாக அறிமுகமானவர் சுலேகா. இவர் இப்போது 'மின்னத்தாலிக்கத்தூ' என்ற மலையாளப்படத்தில் கதாநாயகியாக நடித்து வருகிறார்.
* விஜய் நடிக்கும் 'நிலாவே வா' படத்தில் வில்லனாக நடிக்க ஒப்பந்தமான மன்சூர் அலிகான் தற்போது அப்படத்தில் நடிக்கவில்லை. அவருக்குப் பதிலாக அந்த வேடத்தில் ஆனந்தராஜ் நடித்து வருகிறார்.
* 'காதலே நிம்மதி' படத்தை இயக்கிய இந்திரனுக்கு பல படவாய்ப்புக்கள் வந்துள்ளன. அவற்றில் இந்திரன் முதலில் இயக்கும் படத்தை 'அன்பாலயா' பிரபாகரன் தயாரிக்கவுள்ளார்.



மன்சூர் அலிகான்-ஆனந்தராஜ் படம் உரிமைப்போர்



## தேன் நிலவு தாமதம்

தேன் நிலவுக்குக் கூடப் போக முடியவில்லை என்று வருத்தப்படுகிறார் அப்பாஸ். படப்பிடிப்புக்கள் இருப்பதால் தேன் நிலவைப் பிடிக்க முடியாமல் தவிக்கிறார் அப்பாஸ்.

தன் காதல் மனைவியின் படத்தைப் பத்திரிகைகளுக்குக் கொடுக்க மறுக்கிறார் அப்பாஸ்.

"என் வீட்டில் பெரியவர்கள் ரொம்பப் பழைமையானவர்கள். எங்கள் இருவரது படமும் பத்திரிகையில் வந்தால் திருஷ்டிபட்டுவிடும் என்று நினைக்கிறார்கள். எனக்கு நம்பிக்கை இல்லாவிட்டாலும் வீட்டாரின் சந்தோசத்திற்காக கட்டுப்படுகிறேன்" என்கிறார்.



## காதோடு சொல்லுகிறோம்

மேக் அப் பையனுடன் 'சிம்ம' நடிகை தகராறு பண்ணிய செய்தி தமிழ்ப்பட உலகைக் கலக்கிவிட்டது. பையனுக்கு ஒங்கி அறைந்து பரபரப்பைக் கிளப்பிவிட்டார் நடிகை. அப்படி அடிக்கும் அளவுக்கு என்ன நடந்தது? நடிகையை அந்தரங்கமாக கேலி செய்து திட்டினானாம். அதுதான் விளாசினார், அது தப்பா? என்று கேட்கிறது நடிகைக்கு சார்பான வட்டாரம். அந்தப் பையனுடன் நடிகை கோபித்ததுக்கு வேற காரணம் இருக்கிறது. சில சொல்லக்கூடாத சமாச்சாரங்களை பையன் வெளியே உளறிவிட்டானாம் என்கிறார்கள் படப்பிடிப்புக் குழுவினர்.

கஸ்தூர நடிகை தற்போது படிக்கும் புத்தகங்கள் விவகாரமானவையாம். ஆண்களின் உடற்கூறுகள் சம்பந்தப்பட்ட புத்தகங்களை வாங்கிப் படித்து வருகிறாராம். படப்பிடிப்பு ஒன்றில் அவர் படிக்கும் புத்தகங்களை தற்செயலாக எடுத்துப் பார்த்த துணை நடிகை ஒருவர் திடுக்கிட்டுப் போனார். விஷயம் தெரிந்துவிட்டதே என்ற கோபத்தில், அந்த துணை நடிகைக்கு 'டோஸ்' விட்டாராம் கஸ்தூர நடிகை.

பெண் நிருபர் ஒருவர் மார்க்கண்டேய நடிகரின் வாரிசு நடிகரைப் பேட்டிகாண நேரம் கேட்டார். தந்தையாருக்கு தகவல் தெரிந்ததும் அந்த நடுத்தர வயதுப் பெண் நிருபரைப் பற்றி அலசி ஆராய்ந்தாராம். அதன்பின்னர் பேட்டி கொடுக்க வேண்டாம், சந்திக்கவே வேண்டாம்" என்று மைந்தனுக்கு கூறிவிட்டாராம்.

இந்தியில் கவர்ச்சி காட்டும் 'ஊ' நடிகையை ஒப்பந்தம் செய்ய விரும்பியது தமிழ்ப்பட நிறுவனம் ஒன்று. அவர் கேட்ட ஊதியத்தைக் கேட்டு தலைதெறிக்க ஓடிவந்தனராம். ஆனால் நடிகை என்ன சொல்கிறார் தெரியுமோ? அந்தப்பட நிறுவன சகோதரர்கள் நடிக்க மட்டுமா அழைப்பார்கள்? அதனால்தான் இரட்டிப்பாக ஊதியம் கேட்டேன்" என்கிறார். சேவைக்கேற்ற கூலி.

## முறிந்த காதல்

தலைப்பைப் பார்த்ததும் புதிய படப் பெயர் என்று நினைக்கவேண்டாம். நடிகை சௌந்தர்யா தெலுங்குப் பட நடிகர் ஜெகபதிபாபுவை தீவிரமாக லவ் அடித்தார். இருவரும் நகமும் சதையுமாக இருந்தனர். திடீரென்று சௌந்தர்யாவின் மார்க்கெட் பொத்தென்று சரிந்தது. மார்க்கெட்டை நிமிர்த்த வேண்டுமானால் பலரது தயவும் தேவைப்படும் அதனால் ஜெகபதிபாபுவின் காதலுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார் சௌந்தர்யா. தற்போது பிரபல இயக்குநர்களை நேரடியாக அணுகி வாய்ப்புத் தேடும் படலத்தில் இறங்கியுள்ளாராம்.



கமல் சங்கீதா முகப்பில்

சினி விசிட்

ஊர்மிளா

## சங்கவி கலக்கம்

'உளவுத்துறை' படத்தில் பிரதானமாக ஒரு பாடல் காட்சியிலும், பின்னர் உப்புச் சப்பற்ற சில காட்சிகளிலும் சங்கவியை பயன்படுத்தியுள்ளனர்.

படத்தைப் பார்த்துவிட்டு, 'சிங்கிள் டான்ஸ்' சங்கவி என்று பலரும் கேலி செய்கிறார்களாம்.

"இப்படித்தான் 'ஜென்டில்மேன்' படத்தில் ஒரே ஒரு பாடல் காட்சியில் உடம்பைக் காட்டினார் கவுதமி. இன்று ஆளையே காணவில்லை. உங்களுக்கும் அந்தக் கதிதான்" என்று சிலர் மிரட்டியதால் கலங்கிப்போயிருக்கிறார்.

## உண்மையான ஹீரோ

அந்தக்கால காதல் மன்னன் ஜெமினிகணேசன் சினிமா உலகுக்கு வந்து 50 வருடம் பூர்த்தியாகிவிட்டது. அதனைப் பாராட்டி விழா எடுத்துள்ளனர்.

அந்த விழாவில் எம்.ஆர்.ராதாவின் மகனான நடிகர் ராதாரவி சொன்ன செய்தி இது. "முப்பது வருடத்துக்கு முன்பாக எம்.ஜி.ஆரைச் சுட்ட வழக்கில் சிறையில் இருந்தார் என் தந்தை.

என் சகோதரிக்கு திருமணம் நடந்தது. சினிமாக்காரர்கள் பலர் அந்த நிகழ்ச்சிக்கு வருவதற்கே பயந்தனர். ஆனால் ஜெமினி தன் மனைவியான சாவித்திரியுடன் வந்து திருமணத்தை நடத்தி வைத்தார். என்னைப் பொறுத்தவரை உண்மையான ஹீரோ ஜெமினிதான்"

## ஆட்டோ டிரைவர்

நாகார்ஜுன் நடித்து தமிழிலும், தெலுங்கிலும் தயாராகும் படத்திற்கு 'ஆட்டோ டிரைவர்' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

நாகார்ஜுனுக்கு ஜிலுஜிலு ஜோடிகள் இரண்டுபேர். ஒருவர் சிம்ரான். இன்னொருவர் தீப்தி பட்நாகர். படம் முழுக்க ஒரே கும்மாளம்தான்.

விஜயகுமார், சுஜாதா, அஜய் ரத்னம், இந்தி நடிகர் தாராசிங் ஆகியோரும் நடிக்கின்றனர். இயக்கம்: சுரேஷ் கிருஷ்ணா. இசை: தேவா.

## செலவு மிச்சம்

இயக்குநர்கள் நடிக்க வருவது புதிதல்ல. கமராவுக்கு பின்னால் நின்று நடிப்பு சொல்லிக் கொடுப்பவர்களுக்கு, கமராவுக்கு முன்னால் நின்று நடிப்பது கஷ்டமா? இல்லையே. நடிகராகும் மற்றொரு இயக்குநர் கே.எஸ்.அதியமான். நடிகராகும் ஆசை ஏன் வந்தது?

கமல், ரஜினி, விஜய் ஆகியோரின் படங்களைத் தவிர வேறு யாருடைய படங்களும் வேகமாக விற்பனையாவதில்லை.

இப்படி இருக்கையில் ஒரு நடிகருக்கு 45 இலட்சம் கொடுப்பானேன்? அதனால் தான் தலை முறை படத்தில் முக்கியமான வேடத்தில் நானே நடிக்கிறேன்" என்கிறார்.


படிப்பகம்

www.padippakam.com

தேன் கிண்ணம்

# கல்லாக...!

கல்லாகப் படைக்கப்படாததற்காகக்
கவலைப் படுகிறேன் நான்!
-o-
கல்லாகவே இருந்திருந்தால்,
மனதில் விழுந்த
முதல் இடியோடு-நான்
முடிந்து போயிருப்பேன்;
மறுபடியும் மறுபடியும்
வதை தாங்கும் மனதோடு
வாழாமல் போயிருப்பேன்!
-o-
என் சோகங்களோடு
எனக்குள்ளே நான்
குமுறித் தணியாமல்
எரிமலையாய்
உள்ளத்தின் தீயை
திக்கெங்கும் எறிந்திருப்பேன்;
கால மாற்றத்தில்
கோது உடலில்
குளிர்ந்ததோர் ஏரியாய்
தண்ணீர் சுமந்திருப்பேன்!
-o-
நான் மாத்திரம்
கல்லாகவே இருந்திருந்தால்,
காதலால் சிந்திய
அமுதத்தையோ
விஷத்தையோ
அருந்தாமல் இருந்திருப்பேன்;
முகில்களின் நீரைத் திருடி
என் சிகரங்களில் இருந்தே
எல்லா நீர் ஊற்றுக்களையும்
மண்ணுக்குக் கொடுத்திருப்பேன்!
-o-
நான்...
கல்லாக இருந்திருந்தால்,
காதல் எதிர்ப்புகளின் முன்
கல்வெட்டாகச் செதுக்கப்பட்டிருப்பேன்;
எந்த உளி கொண்டும்
இன்னொரு நாமத்தைப் பதிக்க
இடம் கொடாமல் வாழ்ந்திருப்பேன்!
-o-
கல்லாக இருந்திருந்தால்,
வேடம் தரிக்காமல்
நிறம் மாறாமல்
எதனோடும் கலக்காமல்
சுயமாக இருந்திருப்பேன்!
-o-
வரலாற்று ஆய்வுகளில்
காலத்தால் அழியாத
குறியீடாக
வழிகாட்டிக் கொடுத்திருப்பேன்.
கோபுரங்களை உயர்த்தவும்
ஆலயங்களைப்
புனிதப்படுத்தவும்
பங்கேற்றிருப்பேன்!
-o-
எனினும்,
உயிர்ப் பலியிட்டு,
குருதியால் நனைத்துப்
புதையலைத் தேடி-எனைப்
பிளக்கும் மனிதன் முன்
கல்லாகக் கூடாதென
தெய்வத்தை வேண்டுகிறேன்!
-o-

பஹீமா ஜஹான்-அட்டாளைச்சேனை.

# என் இனிய பொன் நிலாவே!

நீ தொடர்ந்தும்
எனை
நினைக்கலாம்!
**
நான்
இல்லாவிடினும்கூட...
**
வெளியே வரத்
தடையிருந்தாலும்
கவலையில்லை.
உன் நினைவுகள்
நான் போகும்
சாலையோரந்தானே
தினம் தோறும்
நிற்கின்றன!
**
வாழ்வதைவிட
வாழ்வதாக
நினைத்துக்
கொள்வதில்
சந்தோஷம் அதிகம்!
**
காதலி...!
சந்திப்பதைவிட
சிந்திப்பது
சுகமானது!
**
அணைப்பதைவிட
நினைப்பது
இனிமையானது!
**
சில வேளைகளில்
மூன்று மாதங்களில்
கட்டில்
கசந்து போகலாம்!
**
இருப்பினும்
சந்திக்காத பட்சத்தில்
முப்பது ஆண்டுகள்
கழிந்தாலும்
காதல் கசப்பதில்லை!
**
எனக்கு உன்னை
நினைப்பதில்
அதிகபட்ச திருப்தி!
**
அன்பே!
உண்மையைச்
சொன்னால்
கோபிக்காதே...!
**
நினைவுகளுக்கு
நிர்வாணமாய்க்கூட
சிந்திக்கத் தெரியும்!
**

எம்.எஸ்

# இழப்பதற்கு எதுவுமில்லை அடிமைச் சங்கிலிகளைத் தவிர!



சீனாவை ஆக்கிரமித்த ஜப்பானை எதிர்த்து சீனமக்கள் ஆயுதம் ஏந்திப் போராடினார்கள். மக்கள் விடுதலைப் படை என்றும் செஞ்சேனை என்றும் அழைக்கப்பட்ட புரட்சிகரப் படையில் பல்லாயிரம் இளைஞர்களும், யுவதிகளும் இணைந்து கொண்டனர்.

சீன மக்களின் எழுச்சியை அடக்க சீனாவின் பிரதான நகர்கள் மீது ஜப்பான் விமானங்கள் குண்டு மழை பொழிந்தன.

தலையில் குண்டுவிழும் என்ற பயத்தில் தலை குனிந்து வாழச் சம்மதிப்பர். இழப்புக்களையும், அழிவுகளையும் கண்டு நடுங்கி அடங்கிவாழத் தீர்மானிப்பர் என்று ஜப்பான் ஆக்கிரமிப்பாளர்கள் நினைத்தனர்.

சீனாவே அழிந்தாலும்சரி அடிமைகளாய் வாழமாட்டோம் என்று சீனா எழுந்து நின்றது. இறுதியில் ஜப்பானியர்கள் துணியைக் காணோம், துண்டைக் காணோம் என்று தோற்றோடினார்கள்.

1937ம் ஆண்டில் ஜப்பான் குண்டுவீச்சால் அழிந்த நகர் ஒன்றையும், பெற்றோரையும், உற்றோரையும் இழந்து, உயிர் பிழைத்துக் கிடக்கும் பிஞ்சு ஒன்று வெடித்தழுவதையும் இப்படத்தில் காண்கிறீர்கள்.

ஏழை அழுத கண்ணீர் மட்டுமல்ல, ஒடுக்கப்படும் மக்கள் அழுத கண்ணீரும் கூரிய வாளாகும். ஜப்பானியர்களுக்கு ஒருநாள் அந்த உண்மை உறைத்தது.

# படப்பிடிப்பு



சிறுவயதில்
அழுதேனாம்...
எனக்கு
நினைவில்லை.
**
'நல்ல தம்பி'
மாமாவிடம்
ஒன்று இருந்தது;
ஆனால்-அவர்
அடிக்கடி
வருவதில்லை;
வந்தாலும்
மறுத்துவிடுவேன்.
**
பருவநீராட்டு
விழாவன்று
பிடித்தார்கள்;
வியர்வையுடன்
சிரித்தேன்.
**
இரண்டாவது
கடிதத்தில்-அவன்
சேர்ந்து
எடுத்துக்கொள்ள
அழைத்தபோது
ஆத்திரப்பட்டேன்.
**
இங்குவந்த பிறகு
அது-
எதிர்பாராமல்
நடந்தது;
நடக்கும்!
**
நான்-
மறுக்கவில்லை!
வெட்கப்படவில்லை!
அழவில்லை!
ஆத்திரப்படவுமில்லை!
என்பதால் அல்ல.
**
'அவர்கள் இஷ்டம்'
என்பதால்...
**
நடு இரவு வேளையில்
குழம்பிய கூந்தலுடனும்
தூங்கி வழிந்த
விழிகளுடனும் -வைத்து
விசாரித்துவிட்டு...
இலக்கமொன்று தந்து
இரவு உடையில்
என்னை-
படையினர்-
படம்பிடித்துக்கொண்டு
போனார்கள்!
**

எஸ்.பிரபா-பதுளை.

# தேசம் விட்டு

போர் மேகம் சூழ்ந்து
இருட்டான தேச மிதில்
காரோடும் தெருவோரம்
ஊரோடு நாமிருந்து
போராடும் வாழ்க்கையிதில்
மார்போடு மகவணைத்து
சோறூட்டும் வேளையிலே
எங்களை "செல்" அழைத்து
சென்றதுவே தேசம் விட்டு!

வே.தனா.

# பேனா நண்பர்கள்



பெயர்: ஏ. ஜெயந்தன்,
வயது: 17
முகவரி:
சின்னப்புதுக்குளம்,
வவுனியா.
பொழுது போக்கு:
பத்திரிகை,வானொலி,
ரி.வி.



பெயர்:
எச். இஷாக்,
வயது: 19
முகவரி: 8, KADURUGAS
JUNCTION COLOMBO
ROAD, KURUNAGALA.
பொழுது போக்கு:
பத்திரிகை, கிரிக்கெட்.



பெயர்:
டி. சுபாஷினி,
வயது: 16
முகவரி: 26/15, 1ம்
குறுக்கு கூழாவடி,
மட்டக்களப்பு.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்: எஃப். ரோசா
வயது: 21
முகவரி:
20 ஏ, புளுகொந்தன்னை,
அக்குறணை, கண்டி.
பொழுது போக்கு:
அரட்டை அடித்தல்,
ரீ.வி.

# என் கோடு சக புள்ளி!

என் வாழ்க்கையில்
ஒரு துண்டம்
உன்னோடு
கிழிக்கப்பட்டுவிட்டது!
**
இப்போது
என் வாழ்க்கை
கோடுகளாகவும்
கோடுகளிலிருந்து-
பூச்சியங்களாகவும்
இறுக்கப்பட்டுள்ளது!
**
பூச்சியங்களிலிருந்தும்
ஆரம்பிக்கலாம்!
பூச்சியத்திற்குள்ளும்
தொடங்கலாம்!
முடிவு என்பது
பற்றிபேசும் போது
கோடுகளோ பூச்சியங்களோ இன்றி
வெறும் புள்ளிகளாக
இடம் பெயர்கிறது அது!
**
எப்படியோ....
சிறுபிள்ளைச் சித்திரமாகவோ
இழுத்துவிட்ட பம்பரமாகவோ
விசைக்கோடுகளாக
நகர்ந்து செல்கின்றது
என்பதுதான் உறுதி!
**



யெம்.யே.தஸ்ரிப்,
அக்கரைப்பற்று.

# இந்த வாரம் உங்கள் பலன்

(22.03.1998 தொடக்கம் 28.03.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

மீனம் - சூரியன், புதன், செவ்வாய், சனி.
சிம்மம் - இராகு.
மகரம் - வெள்ளி.
கும்பம் - வியாழன், கேது.

சந்திரன்- தனு, மகரம், கும்பம், ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- மனக் கவலை, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 2 மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, கடன் தொல்லை. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, முயற்சி பலிதம். | பி.ப. | 2 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் | 12 மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, பணக் கஷ்டம். | பகல் | 11 மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், பெரியோர் பகை. | பி.ப. | 2 மணி |
| சனி- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. | 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், பெரியோர் உதவி. | பி.ப. | 1 மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பகல் | 12 மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், அந்நியர் உதவி. | பகல் | 11 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, மனக்குறை அதிகம். | பகல் | 12 மணி |
| வியாழன்- வீண் செலவு, கடன் படல். | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, பயனற்ற செயல். | பகல் | 11 மணி |
| சனி- கடன் தொல்லை, மனக் கவலை. | பி.ப. | 2 மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- முயற்சியில் தடை, மனக் கலக்கம். | பி.ப. | 2 மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, அந்நியர் உதவி. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- பெரியோர் சகாயம், கௌரவ மிகுதி. | பி.ப. | 1 மணி |
| புதன்- தொழில் விருத்தி, பெரியோர் உதவி. | பகல் | 12 மணி |
| வியாழன்- முயற்சிகளில் வெற்றி, பணக் கஷ்டம். | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், பிரயாண மிகுதி. | பி.ப. | 1 மணி |
| சனி- பெரியோர் சகாயம், உயர்ந்த நிலை. | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 1 மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பகல் | 12 மணி |
| செவ்வாய்- வெளியிடப பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 2 மணி |
| புதன்- தொழில் விருத்தி, அந்நியர் உதவி. | பி.ப. | 2 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பகல் | 12 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, காரியானுகூலம். | பகல் | 11 மணி |
| சனி- தொழில் விருத்தி, பணக் கஷ்டம். | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பகல் | 11 மணி |
| திங்கள்- வீண்குறை கேட்டல், மனக் கவலை. | பி.ப. | 2 மணி |
| செவ்வாய்- பெரியோர் சகவாசம், உயர்ந்த நிலை. | பி.ப. | 3 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், அந்நியர் உதவி. | பகல் | 11 மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், மனக் குறை. | பகல் | 12 மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, பொருள் வரவு. | பகல் | 11 மணி |
| சனி- பெரியோர் உதவி, பலவித பேறு. | பி.ப. | 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- மறைமுக எதிர்ப்பு, மனக் கலக்கம். | பி.ப. | 2 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பகல் | 11 மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், அந்நியர் உதவி. | மு.ப. | 10 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, பணக் கஷ்டம். | பி.ப. | 2 மணி |
| வியாழன்- இனசன நன்மை, காரியானுகூலம். | பகல் | 11 மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, செலவதிகம். | பி.ப. | 2 மணி |
| சனி- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. | 1 மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, பணச் செலவு. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- உறவினர் பகை, காரியக் கேடு. | பி.ப. | 2 மணி |
| புதன்- இனசன நன்மை, பெரியோர் உதவி. | பி.ப. | 1 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, பலவித பேறு. | பகல் | 11 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், காரியானுகூலம். | மு.ப. | 10 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. | 2 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, முயற்சி பலிதம். | பி.ப. | 2 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. | 3 மணி |
| புதன்- மனக் கலக்கம், பெரியோர் பகை. | பகல் | 11 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு. | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், தொழில் விருத்தி. | பி.ப. | 3 மணி |
| சனி- பெரியோர் உதவி, கௌரவ மிகுதி. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- உறவினர் பகை, காரியக் கேடு. | பி.ப. | 2 மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், பண முடங்கல். | மு.ப. | 10 மணி |
| செவ்வாய்- அந்நியர் சகவாசம், இனசன நன்மை. | பி.ப. | 3 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, உயர்ந்த நட்பு. | பகல் | 12 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. | 1 மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், பெரியோர் உதவி. | பகல் | 12 மணி |
| சனி- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, தொழில் சிறப்பு. | பகல் | 12 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், உயர்ந்த நிலை. | பகல் | 11 மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, காரியானுகூலம். | பகல் | 12 மணி |
| புதன்- தொழில் கஷ்டம், அந்நியர் சகவாசம். | பி.ப. | 2 மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், பிரயாண மிகுதி. | பி.ப. | 1 மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், பணவரவு. | பி.ப. | 2 மணி |
| சனி- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தேகசுகம் பாதிப்பு,மனக் கவலை. | பி.ப. | 1 மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, அந்நியர் நட்பு. | பகல் | 11 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, காரியானுகூலம். | மு.ப. | 10 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பி.ப. | 2 மணி |
| வியாழன்- வீண் முயற்சி, பணக் கஷ்டம். | பி.ப. | 1 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, அந்நியர் நட்பு. | மு.ப. | 10 மணி |
| சனி- பிரயாண மிகுதி, செலவதிகம். | பி.ப. | 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பிரயாணக் கஷ்டம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 1 மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பி.ப. | 2 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, பலவித பேறு. | பகல் | 12 மணி |
| புதன்- கடன் சுமை, கௌரவக் குறைவு. | பி.ப. | 3 மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நட்பு. | பகல் | 12 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பி.ப. | 1 மணி |
| சனி- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5



படிப்பகம்

www.padippakam.com

# அழகும் ஆரோக்கியமும்

அழகும் ஆரோக்கியமும் தேவைப்படும் பெண்கள் இதைக் கவனியுங்கள்.

★ உடலில் உள்ள எண்ணெய்த் தன்மையைப் போக்க இரசாயனக் கலவையான சவர்க்காரங்களை உபயோகிக்காமல் இருப்பது நல்ல. அதற்குப் பதிலாக கடலை மாவு, உளுந்து மாவு போன்றவைகளில் ஏதாவது ஒன்றைத் தேய்த்துக் குளியுங்கள். முகத்தில் எலுமிச்சம் பழச்சாறும் தேனும் கலந்த புரட்டலாம்.



தலையில் இருக்கும் எண்ணெய்த் தன்மையைப்போக்க செம்பருத்தியைப் பயன்படுத்துங்கள். செம்பருத்திப் பூ, இலை போன்றவைகளைப் பிழிந்து சாறு எடுத்துத் தலையில் தேய்த்துக் கழுவுங்கள். கீழா நெல்லியை அரைத்தும் தலையில் தேய்க்கலாம். இவைகளைத் தேய்த்துக் குளித்தால் கூந்தலில் சிக்கு ஏற்படாது. முறியாது. பொடுகு ஏற்படாது. அகால நரையும் தோன்றாது.

பொடுகைப்போக்க ஆயுர்வேதத்தில் சிறந்த மருந்து இருக்கிறது. அதாவது ஊமைத்தன்காயைப் பிழிந்து சாறு எடுத்து தலையில் தேய்தால் போதும். நெல்லிக்காயை ஒருநாள் முழுவதும் பாலில் போட்டு வையுங்கள். பின்பு அதே பாலில் அரைத்து தலையில் தேய்த்து சிறிது நேரம் கழித்துக் கழுவி விட்டால் பொடுகு நீங்கும். கூந்தலும் செழித்து வளரும். உளுந்து, கடுகு இரண்டையும் சம அளவில் சேர்த்து தலையில் சேர்த்துக் கழுவி விட்டாலும் பொடுகு குறையும்.

கண்களில் மை தீட்டுவதற்கு முன்பு கண்ணுக்குள் இரண்டு துளி இளநீரோ, பன்னீரோ விட வேண்டும். அப்போது கண்ணுக்குள் இலேசான எரிச்சல் ஏற்படும். அப்படியே ஒரு நிமிடம் கண் அடைத்துத் திறந்தால் கண்ணுக்குக் குளிர்ச்சியும் பிரகாசமும் ஏற்படும். வீட்டில் தயாரிக்கும் கண்மையே சிறந்தது.

மருதோன்றி மருத்துவக் குணம் நிறைந்தது. கை, கால்களில் மருதோன்றி இடலாம். கையில் மருதோன்றி இடுவதால் அதன் தன்மை உணவில் கலந்து உடலுக்குள் சென்றாலும் ஆபத்து எதுவுமில்லை.

அழகை விரும்பும் பெண்கள் தினமும் அதிகாலையிலே எழுந்து குளித்துவிட வேண்டும். அது ஆரோக்கியத்திற்கும் ஏற்றது. அதிகாலையில் இயற்கைக் காற்று மாசு கலக்காமல் இருக்கும். அது உடலுக்கு நலம் தரும்.

★ குளத்திலோ, ஆற்றிலோ தோழிகளோடு விளையாடி நீச்சல் அடித்துக் குளிப்பதும் உடலுக்கு நல்லது.

★ அதிக நேரம் தூங்குவதைத் தவிர்க்கலாம். ஏழு மணிக்கு மேல் தூங்குவது அழகுக்கும் ஆரோக்கியத்திற்கும் கெடுதல் ஏற்படுத்தும்.

★ முகப்பரு ஏற்பட்டவர்கள் வேப்பம் பட்டையை வெண்ணெயில் அரைத்துப் பூசலாம்.

★ உடலுக்கும் தலைக்கும் தேங்காய் எண்ணெய் தேய்த்துக் குளிப்பது உடலுக்கு நல்லது. கால் பாதங்களில் எண்ணெய் தேய்த்தால் கண்ணுக்குக் குளிர்ச்சி கிடைக்கும்.

# இது கோடை யோசனை

கோடை காலம் வந்து விட்டது. கோடை காலம் சருமப் பிரச்சனைகள் நிறைந்த காலம். சூரிய ஒளி உடலில் அதிகமாக விழுவது தோலுக்கு நல்லதல்ல.

உடலில் அதிகமாக வெயில்படும் இடங்களில் சொறியும், சிவப்பும், தொடர்ந்து கீறலும் உருவாகிறது.

சூரிய ஒளி உடலில் அதிகம் படாமல் இருப்பதே இந்தத் தொல்லையில் இருந்து தப்பிக்க சிறந்த வழி. முகத்திலும் கைகளிலும் சூரிய ஒளியில் இருந்து பாதுகாக்கும் ஏதாவது வகை கிறீம் பூசுவது நல்லது.

★ இறுக்கமான உடைகளை கோடை காலத்தில் அணியாமல் இருக்க வேண்டும்.

★ உள்ளாடைகள் பருத்தியாலானதாக இருப்பது நல்லது.

★ சுத்தமான காற்று இருக்கும் இடத்தில் அதிக நேரம் செலவிடுங்கள்.

★ குறைந்தது ஆறுமணி நேரமாவது நன்றாகத் தூங்குங்கள்.

★ உடலையும் கூந்தலையும் எப்போதும் சுத்தமாக வைத்திருங்கள்.

★ போதைப் பொருட்களையும், கெடுதல் தரும் பானங்களையும் பருக வேண்டாம்.

★ தேவையில்லாத மருந்துப் பொருட்களைப் பயன்படுத்தக்கூடாது.

# தாய்மார்கள் கவனிக்க



சில பெண்கள் 'எனக்குத் தாய்ப்பால் இல்லை' என்பார்கள். அதற்குப் பெருமளவு காரணமாக இருப்பது அதே பெண்தான்.

என்னென்ன காரணங்கள்?

★ தாய்ப்பால் புகட்டுவதற்கு விருப்பமின்மை.

★ தாய்ப்பால் கொடுத்தால் அழகு குலைந்து போகும் என்ற எண்ணம்.

★ மார்புகளின் வடிவம் கெட்டுப்போகும் என்ற கவலை.

★ அசிங்கமான விஷயம் என்ற வெட்கம்.

★ சரியாகப் பால் புகட்டத் தெரியாமை.

தாய்க்கு நோய் இருந்தாலும் (எய்ட்ஸ் இருந்தால் கூட) பால் புகட்டலாம். தைரோய்ட் நோய்களுக்கு மருந்து சாப்பிடுகிறவர்கள் மட்டும் பால் புகட்டுவதைத் தவிர்க்க வேண்டும். கர்ப்பிணியானால்கூட பால் புகட்டலாம்.

தாய்ப்பாலால் எவ்வளவோ பலன்கள் இருக்கின்றன. தேவைப்படும் போதெல்லாம் கிடைக்கும். அது தயாராகும் வரை பொறுத்திருக்கத் தேவையில்லை. சூடாக்க தேவையில்லை. பீடிங் போத்தலில் விடத் தேவையில்லை.

தாய்ப்பால் குடிக்கும் குழந்தைக்கும் கொடுக்கும் தாய்க்கும் அதிகமான பாசம் கிடைக்கும்.

தாய்ப்பால் விரைவாக ஜீரணம் ஆகும். அதனால் குழந்தை பசியால் அடிக்கடி அழும். குழந்தைக்கு எந்த நேரத்திலும் பாலூட்டலாம்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** DJ

பெயர்:..............................
முகவரி:..............................
..............................
தொழில்:..............................
கையொப்பம்:..............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 28-03-1998

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் (27)

புவனா



சாள்ஸ்-டயானாவின் பத்தாவது திருமண ஆண்டு விழாவைக் கொண்டாட பிரிட்டிஷ் அரச குடும்பத்தினர் ஏற்பாடுகளைச் செய்தனர்.

சாரா- ஆண்ட்ரூ உறவு முறிவுகள் பற்றிய செய்திகளால், அரச குடும்பத்திற்கு ஏற்பட்ட அபகீர்த்தியைப் பூசி மெழுகத்தான் அந்த ஏற்பாடு.

அந்த உள்நோக்கம் டயானாவுக்கும் விளங்கியதால், அவர் கடும் எரிச்சலுற்றார்.

தன்னை ஒரு பொம்மை என்று மகாராணி நினைத்துக் கொண்டார்; மருமகளின் துயர் பற்றி சிறிதும் கவலைப்படாத மாமியாருக்கு, குடும்ப கௌரவம் மட்டும் பெரிதாகத் தெரிகிறது. பாடம் புகட்ட முடிவு செய்தார் டயானா.

பத்திரிகையாளர்கள் டயானாவை சந்தித்த போது, பத்தாண்டு விழா பற்றி கேள்வி எழுப்பினர்.

"அப்படி ஒரு விழா தேவையா? அதில் என்ன அர்த்தம் இருக்கிறது?" என்று டயானா கேட்ட கேள்வி, பத்திரிகையாளர்களிடம் பல்வேறு ஊகங்களுக்கு இடமளித்தது. அரச குடும்பத்தை தூக்கிவாரிப்போட்டது.

## தனியறையில்

தன் நெருங்கிய சிநேகிதிகளிடம் தனது மணவாழ்க்கையில் ஏற்பட்ட சோகங்களை இறக்கிவைத்தார் டயானா.

"1984ல் இரண்டாவது மகனான ஹரி பிறந்த தினத்தன்றே எங்கள் உறவு அறுந்து விட்டது. அதன்பின்னர் தனித்தனி அறைகளிலேயே படுத்து உறங்குகிறோம். இந்த மனிதரின் திமிராலும், தாழ்வு மனப்பான்மையாலும் என் நாட்கள் நரகமாகின்றன," என்று தன் சிநேகிதிகளிடம் கூறிக் கவலைப்பட்டார் டயானா.

"1984ல் போத்துக்கல் நாட்டுக்கு அரச பணிக்காக சென்றபோதும், அங்கு தனித்தனி அறைகளில்தான் தங்கியிருந்தோம்" என்ற விபரத்தையும் டயானா கூறியிருந்தார்.

1991ல் கிறிஸ்மஸ் காலத்தின்போது இருவரும் கலந்து கொள்ளவேண்டிய நிகழ்ச்சி ஒன்று இருந்தது.

சாள்ஸ்சுடன் சேர்ந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது, போலியாக நடித்து, மனமொத்த தம்பதியாக ஏனையோரை நம்பவைப்பது என்பவற்றை தவிர்க்கவே டயானா விரும்பினார்.

சாள்ஸ்சை அனுசரித்துச் செல்வதால், சாள்ஸ்சின் மனம் மாறப்போவதில்லை. மாறாக அதனை தனது பலவீனமாகவே எடுத்துக் கொள்கிறார் என்பதை உணர்ந்தபோது, டயானாவின் பிடிவாதக் குணம் மீண்டும் கிளர்ந்தெழுந்தது.

அதனால் பொது நிகழ்ச்சிகளில் சாள்ஸ்சுடன் கலந்து கொள்வதை பல தடவைகள் தவிர்த்தே வந்தார்.

கிறிஸ்மஸ் தின நிகழ்ச்சியையும் தவிர்க்கவே விரும்பினார். குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கு முதல் நாள் நள்ளிரவு வரை இளவரசரும், சாள்ஸ்சின் சகோதரருமான ஆண்ட்ரூவுடன் இசை நிகழ்ச்சி ஒன்றில் டயானா கலந்து கொண்டார்.

# தினமும் முட்படுக்கையில்

அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டுவிட்டு திரும்பிய டயானா மறுநாள் நேரம் கழித்துத்தான் எழுந்தார்.

நித்திரை இன்மையால் சளி சுரம் பிடித்து விட்டதாக கதை விட்டார். அதனால் சாள்ஸ் மட்டும் தனியாகச் செல்ல நேர்ந்தது.

சாள்ஸ்சைக் கண்டாலே தன் மனதில் வெறுப்பு ஏற்படுவதாகவும், அதனை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருப்பதற்கு பலத்த பிரயத்தனம் செய்ய வேண்டி இருப்பதாகவும் டயானா தன் தோழிகளிடம் கூறியிருந்தார்.

இக் காலகட்டத்தில்தான் மகாராணியின் தாயாருடைய 90வது பிறந்த நாள் விழா வந்தது. அதனை முன்னிட்டு கலை நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வேறு வழியின்றி டயானா சாள்ஸ்சுடன் இணைந்து அங்கு காட்சியளிக்கவேண்டி இருந்தது.

எனினும், குறிப்பிட்ட நிகழ்ச்சி நடந்து முடியும்வரை இருவரும் எதுவுமே பேசிக் கொள்ளவில்லை. ஒருவர் முகத்தை இன்னொருவர் பார்க்கவும் இல்லை.

இரு துருவங்களாக அவர்கள் காட்சியளித்ததை பல கண்கள் காணவே செய்தன.

அதனையிட்டு மகாராணி இலேசாக மனம் வருந்தினார். டயானாவுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

தன் வாழ்க்கையை கிழித்துப்போட்டு விட்டு, கண்ணாமூச்சி ஆட்டம் காட்டும் மகாராணியாருக்கும், அவரது மகனுக்கும் ஏற்படும் அவமானங்களை தன் சந்தோசங்களாக கருதத் தொடங்கினார் டயானா.

## இழப்பு

1992 மார்ச் 29ம் திகதி டயானாவுக்கு சோகச் செய்தி ஒன்று எட்டியது.

அவரது தந்தையாரான ஏர்ள் ஸ்பென்சர் இறந்துபோனார்.

டயானாவால் அந்த இழப்பைத் தாங்க முடியவில்லை. தவியாய்த் தவித்துப்போனார்.

அவருக்கு ஆறுதல் சொல்ல அரச குடும்பத்தில் யாரும் இருக்கவில்லை. கடல் போன்ற அந்த அரண்மனையில் மனிதர்களுடன் இயல்பாகப் பழகக் கூடிய ஆட்கள் மட்டும் வலைபோட்டுத் தேடினாலும் கிடைக்க மாட்டார்கள்.



ஏர்ள் ஸ்பென்சர்

பிள்ளைகள் சாள்ஸ்சுடன் இருக்கட்டும் என்று கருதிய டயானா, தான் மட்டும் தனியாகப் புறப்பட்டார்.

தானும் வருவதாக சாள்ஸ் கூறினார். தன் ஈரவிழிகளால் அவரை ஏறிட்ட டயானாவின் இதழ்கள் இகழ்ச்சியாக மடிந்தன.

"வேண்டாம், நான் மட்டும் போகிறேன்!" என்றுவிட்டு புறப்பட்டுச் சென்றார்.

எனினும் இறுதிச் சடங்கில் சாள்ஸ்சும் கலந்துகொண்டார்.

இறுதிச் சடங்கு முடிந்ததும், விமானத்தில் தன்னுடன்கூட வருமாறு சாள்ஸ் அழைத்தார்.

"வேண்டாம், நான் தனியாகவே வருகிறேன். நீங்கள் போங்கள்!" என்றார் டயானா.

சாள்ஸ்சின் உதவியாளர்களால் இவ்விடயம் மகாராணிக்குத் தெரிவிக்கப்பட்டது. உடனே டயானாவுடன் தொடர்பு கொண்ட மகாராணி, "சாள்ஸ்சுடன் இணைந்து வருவதுதான் முறை. இல்லாவிட்டால் உன் தந்தையின் மரணச் சடங்கில்கூட உன்னை கைவிட்டுவிட்டோம், என்று குறைவரும்!" என்றார்.

வேண்டா வெறுப்பாக மகாராணியின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார் டயானா.

இச் சம்பவம் தொடர்பாக தன் தோழிகளிடம் டயானா விபரிக்கையில், "பொதுமக்கள் மத்தியில் தமது மதிப்புக் குறைந்துவிடக்கூடாதே என்று நினைத்து போலி நாடகம் ஆடுகிறார்கள்" என்று கூறினார்.

## சிறுபிள்ளைத் தனம்

போலோ விளையாட்டில் அடிக்கடி விபத்துக்குள்ளாவது சாள்ஸ்சின் வழக்கம்.

ஒருமுறை அவ்வாறு விபத்தில் சிக்கிய பின்னர் தனது மகனான வில்லியமின் கட்டிலை எடுத்துக்கொண்டு போய் தனது அறையில் போட்டுப் படுத்தார் சாள்ஸ்.

அது வெண்கலக்கட்டில். மிகவும் அகலமானது. அக் கட்டிலில் படுத்திருப்பது சாள்ஸ்சுக்கு சுகமாக இருந்தது.

தனது கட்டிலைத் தரும்படி வில்லியம் அடம்பிடிக்கத் தொடங்கிவிட்டார்.

"முடியவே முடியாது. அம்மா மாதிரியே பிடிவாதம் பிடிக்கிறான் பார்!" என்று மறுத்து விட்டார் சாள்ஸ்.

ஆனால் வில்லியம் விட்டபாடில்லை. "அந்தக் கட்டிலைத் தந்தால்தான் தூங்குவேன்!" என்றுவிட்டான்.

இறுதியாக தாயாரிடம் சென்று முறையிட்டார் வில்லியம். "இவர்கள் இருவரில் யார் சிறுபிள்ளை என்பது தெரியவில்லையே!" என்றார் டயானா.

'தினமும் முட்படுக்கையில் கிடப்பது போன்ற இந்த வாழ்க்கையைவிட சாள்ஸ்சை விவாகரத்து செய்துவிடவே விரும்புகிறேன். எங்கள் இருவருக்குமே அதுதான் நல்லது. எப்போது மனம் முறிந்துவிட்டதோ, அதன் பின்னர் மண உறவு நீடிப்பது போலித்தனமானது. உலகத்துக்காக எங்களை நாங்களே மாற்றிக்கொள்வது கொடுமையானது,' என்று டயானா சிந்திக்கத் தொடங்கினார்.

அப்படி விவாகரத்துச் செய்துகொள்வதில் சில இடையூறுகள் இருந்தன. அவற்றை எண்ணியே தன் முடிவைத் தள்ளிப்போட்டு வந்தார்.

'விவாகரத்துச் செய்தால் தன் பிள்ளைகளை பிரிய நேருமோ?' என்று பயந்தார். அதுவும் பிரதான காரணம்.

## நாடகம்

இளவரசர் வில்லியம் தலையில் காயம் பட்டுக் கிடந்த சமயம் சாள்ஸ் நடந்து கொண்ட முறையை பிரிட்டிஷ் பத்திரிகைகள் விமர்சித்தன.

"பாசம் இல்லாத தந்தை, எதிர்கால மன்னர் இப்படியா நடந்து கொள்வது? தன் பிள்ளையையே நேசிக்க முடியாத இளவரசரால் நாட்டு மக்களை நேசிக்க முடியுமா?" என்று விமர்சனங்கள் எழுந்தன.

சாள்ஸ்சுக்கு அந்தரங்கச் செயலாளராக இருந்தவர் கொமாண்டர் ரிச்சாட் ஜலாட்.

அவர் சாள்ஸ்சுக்கு ஒரு குறிப்பு அனுப்பினார்:

"பிள்ளைகள் இருவருடனும் நெருங்கிய உறவு இருப்பதை பொதுமக்கள் காணக் கூடியவாறு தாங்கள் நடந்துகொள்ள வேண்டும். இல்லையெனில் மக்களின் தீராத வெறுப்புக்கு உள்ளாவீர்கள், என்று அஞ்சுகிறேன்!" என்று எழுதியிருந்தார்.

அதன் பின்னர் தனது இரு புதல்வர்களுடனும் சாள்ஸ் பொது இடங்களில் தோன்றினார்.

அக் காட்சிகள் பத்திரிகைகளில் பிரசுரமாயின. இவையெல்லாம் அரச குடும்ப போலி நாடகங்கள். இந்த நாடகங்கள் டயானாவுக்கு அரச குடும்பத்தின் மீது தீராத கசப்பையே தோற்றுவித்தன.

பள்ளிக்கூடத்துக்கு மகன் ஹரியை சாள்ஸ் அழைத்துச் செல்வது போன்றும், மகன்மார் இருவருடனும் சாள்ஸ் சைக்கிள் ஓட்டிச் செல்வது போன்றும் பத்திரிகைகளில் புகைப் படங்கள் பிரசுரமாகியிருந்தன.



டயனா–மூன்றாவது ஆசனத்தில் (வலது) மகாராணியின் தாயார்.

இப்புகைப்படங்களை கண்ணுற்ற டயானாவின் குடும்ப நண்பர் ஒருவர்: "இவ்வாறு தன்பிள்ளைகள்மீது அக்கறை செலுத்தும் ஒரு தந்தையை நீங்கள் 'இரக்கமற்றவர்' என்று எப்படிக் கூறுகிறீர்கள்?" என்று கேட்டார்.

டயானாவுக்கு ஆத்திரம் வந்துவிட்டது. "இந்த வேஷம்தான் எல்லோர் கண்ணுக்கும் தெரிகிறது. இந்த மனம்படும்பாடு யாருக்குத் தெரிகிறது?" என்று சீறினார்.

தனது இரண்டு பிள்ளைகளைப்பொறுத்தவரையும் அவர்களது நடைமுறைகள், அவர்களை அரவணைத்தல் என்று சகலவற்றையும் டயானாவே கவனித்தார்.

ஆனால் பிள்ளைகளுடன் நின்று பத்திரிகைகளுக்கு 'போஸ்' கொடுக்கும் பாசாங்கை மட்டும்தான் சாள்ஸ் காண்பித்தார்.

(அடுத்த வாரமும் வரும்)


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? நுவரெலியா வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | திருமதி ஏ. சுந்தரலிங்கம், பீட்று டிவிசன், பீட்று குறூப், நுவரெலியா. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக-வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.


அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




படிப்பகம்





ஓடி வருகையிலே கண்ணம்மா
உள்ளங்குளிருதடி!
ஆடித் திரிதல் கண்டால்-
உன்னைப்போய்
ஆவி தழுவுதடி!
-சுப்பிரமணிய பாரதியார்

# சரவணன் போட்ட திட்டம்

## பாப்பா முரசு சிறுகதை



ஓர் ஊரில் இராமசாமி என்ற பணக்காரன் இருந்தார். அவர் பணக்காரரே தவிர பிறருக்கு ஒரு உதவியும் செய்யமாட்டார். அவருக்கு சரவணன் என்ற மகன் இருந்தான்.

இராமசாமியின் வீட்டில்தான் அவரது தந்தையும் இருந்தார். ஆனால் அவர் தந்தையைச் சரியாகக் கவனிப்பதில்லை. அவர், தந்தையை வீட்டின் பின்புறத்தில் இருக்கும் மாட்டுத் தொழுவத்தில்தான் தங்க வைத்தார்.

உடைந்த தட்டில்தான் தந்தைக்கு சாப்பாடு போடுவார். கிழிந்த, அழுக்கான துணிகளைக் கொடுப்பார்.

ஆனால் சரவணன் தன் தாத்தாவிடம் மிகவும் அன்பாக இருப்பான். தனது தாத்தாவுக்கு தன் தந்தை செய்யும் செயல்கள் அவனை மிகவும் கவலைப்பட வைத்தன.

தந்தைக்குத் தெரியாமல் சரவணன் தாத்தாவிற்கு வீட்டிலிருந்து பலகாரங்களை அடிக்கடி எடுத்து வந்து கொடுப்பான்.

இப்படி ஒருநாள் சரவணன் பலகாரங்களை எடுத்துக் கொண்டு போய் தாத்தாவுக்குக் கொடுக்கும் போது, இராமசாமி பார்த்துவிட்டார்.

உடனே அவர் சரவணனைக் கூப்பிட்டு அடித்துவிட்டார். இதனால் கோபம் கொண்ட சரவணன் தனது தந்தைக்குச் சரியான பாடம் புகட்ட எண்ணினான்.

சில நாட்களின் பின், இராமசாமி தன் தந்தைக்குச் சாப்பாடு போடப்போனபோது, அங்கே அவரது உடைந்த தட்டைக் காணவில்லை. எல்லா இடமும் தேடிப் பார்த்தார் இராமசாமி. அவரது கண்களுக்கு அது தென்படவேயில்லை.

வீட்டின் முன்னால் விளையாடிக் கொண்டிருந்த சரவணனைக் கூப்பிட்டு, "தாத்தாவிற்குச் சாப்பாடு போடும் உடைந்த தட்டைக் கண்டாயா?" என்று கேட்டார் இராமசாமி.

"ஓ... அதுவா! அது என்னிடம்தான் இருக்கிறது," என்றான் சரவணன்.


"அதை நீ ஏன் எடுத்து வைத்திருக்கிறாய்?" என்று கேட்டார் இராமசாமி.

"அந்தத் தட்டை இப்போது பத்திரமாக வைத்திருந்தால்தான் நீங்களும் தாத்தா மாதிரி வந்தபின், நான் உங்களுக்கு அதில் சாப்பாடு போடமுடியும்," என்று சொன்னான்.

இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த இராமசாமி அப்போதே தனது தந்தையை அழைத்துத் தன்னுடன் வைத்துக்கொண்டார். அதுமட்டுமன்றி அவரை நல்லபடியாகக் கவனித்தும் வந்தார்.

தனது திட்டத்தால் தன் தந்தையின் மனமாற்றத்தைக் கண்டு மகிழ்ந்தான் சரவணன்.


# அதிசயம்—ஆனால் உண்மை!



### சிலுவை மரம்:

பவேரியாவில் உள்ள ஒபர் மர்கோ அருகே மலைச்சிகரத்தில் சிலுவை உருவத்தில் இம்மரம் காணப்படுகின்றது. இங்குதான் இயேசுநாதரின் சமய நாடகங்கள் நடக்கும்.

### ஆழ்கடல் இறால்:




ஆழ்கடலில் வாழும் ஒருவகை இறால் இனம் தம்மைச் சுற்றி ஒளிவண்ண மேகத்தை உருவாக்கி எதிரிகளை மயங்கச் செய்யும்.

### வீரப்பதக்கம்:

3500 ஆண்டுகளுக்கு முன்னரே எகிப்திய பாரோ மன்னர்கள் போரில் வெற்றிவாகை சூடிவரும் வீரர்களின் உடையில் தங்கத்தால் செய்யப்பட்ட தேனீ வடிவிலான பதக்கங்களை அணிவித்து கௌரவித்தனர்.



### வலை விரிக்கும் புழு:



லார்வா கோட்டீஸ் எனப்படும் புழு, கடலில் வலை பின்னி அதை நீரின் மீது விரித்து அதில் சிக்கும் சிறு உயிரினங்களை உண்ணும்.

# வாரம் ஒரு நாடு

## அன்டோரா



தலைநகர்–அன்டோரே-லா-வில்லே
பரப்பு– 464 சதுர கிலோமீட்டர்
மக்கள் தொகை– 59 ஆயிரம்
மொழி– கத்தலான், ஸ்பானிஷ், ஃபிரெஞ்ச்
எழுத்தறிவு– 99%
சமயம்– கிறிஸ்தவம்
நாணயம்– ஃபிரெஞ்ச் ஃபிராங்க் மற்றும் ஸ்பானிஷ் பெசடா.

**அமைவிடம்:**

தென்மேற்கு ஐரோப்பியநாடு; நான்கு புறமும் நிலப்பகுதியால் சூழப்பட்டது. ஃபிரான்சிற்கும் ஸ்பெயினுக்கும் இடையே அமைந்துள்ளது.


**வரலாறு:**

தேர்ந்தெடுக்கப்பட்ட 28 உறுப்பினர் கொண்ட கவுன்சில் வழி ஆட்சி நடைபெறுகிறது. 1993ல் இதற்கெனத் தனி அரசியல் சட்டம் வகுக்கப்பட்டதோடு ஐக்கிய நாடுகள் சபையின் 184வது உறுப்பினராகவும் இணைந்தது. பெயரளவில் இது ஃபிரான்ஸின் சர்வாதிகாரத்திற்கும், ஸ்பெயினின் அர்ஜெல் பிஷப்பின் அதிகாரத்திற்கும் உட்பட்டது.

**பொருளாதாரம்:**

தானியங்கள், உருளைக்கிழங்கு, புகையிலை போன்றவை முக்கிய விளை பொருட்கள். சுற்றுலாத்துறை முக்கிய வருமான மூலமாகும்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 28.03.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 237
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 235

பரிசுக்குரியவர்:
எஸ். அருண்,
மட்/ களுதாவளை மகா வித்தியாலயம், களுவாஞ்சிக்குடி.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ரி.எல். மடோனா, நல்லாயன் கல்லூரி, கொட்டாஞ்சேனை. | ரிஷ்னி முக்தார், திரித்துவக் கல்லூரி, கண்டி. |
| எஸ். லலித் பிரகாஸ், ஹாலி-எல. தமிழ் வித்தியாலயம், ஹாலி-எல. | எஸ். சர்வவிக்நேபன், உவெஸ்லி கல்லூரி, கொழும்பு. |
| எம். சிவசங்கர், தமிழ் மகா வித்தியாலயம், வவுனியா. | பே. ரேகாசலன், உதயபுரம் தமிழ் வித்தியாலயம், பெரிய கல்லாறு. |
| கே. ஸ். ப்ராஸ் மொஹமட், மஹாவெல முஸ்லிம் வித்தியாலயம், வெள்வாய. | கி. சரவணன், இந்து மத்திய கல்லூரி, இராகலை. |
| யூ. திலீப் ஜெயஷான், சென் போனதேத் தமிழ் வித்தியாலயம், சிலாபம். | சீன் பீரிஸ், டொன் பொஸ்கோ மாவத்தை, நீர்கொழும்பு. |


# சந்திரனுக்குச் சென்றவர்கள்

சந்திர மண்டலத்திற்கு முதலில் பயணம் செய்தவர் யார் என்று கேட்டால் நீல் ஆம்ஸ்ரோங் என்று உடனடியாகப் பதிலளித்து விடுவீர்கள். இதுவரை சந்திர மண்டலத்திற்கு எத்தனை பேர் சென்று வந்துள்ளனர் என்று தெரியுமா? சந்திர மண்டலத்திற்கு இதுவரை 12 பேர் சென்று வந்துள்ளனர். அவ்வாறு சென்று வந்துள்ள 12 பேரின் பெயர்களும் அவர்கள் பயணம் செய்த விண்கலங்களின் பெயர்களும் பின்வருமாறு:



| விண்வெளி வீரர் | விண்கலம் |
|---|---|
| 1. ஆம்ஸ்ட்ரோங் | அப்பொலோ-11 |
| 2. அல்ட்ரின் | அப்பொலோ-11 |
| 3. கொண்ட்ராட் | அப்பொலோ-12 |
| 4. பீன் | அப்பொலோ-12 |
| 5. ஷெப்பர்ட் | அப்பொலோ-14 |
| 6. மிச்செல் | அப்பொலோ-14 |
| 7. ஸ்கொட் | அப்பொலோ-15 |
| 8. இர்வின் | அப்பொலோ-15 |
| 9. யங் | அப்பொலோ-16 |
| 10. டியூக் | அப்பொலோ-16 |
| 11. செரினென் | அப்பொலோ-17 |
| 12. ஸ்கிமிட் | அப்பொலோ-17 |

# மூழ்கும் தீவு



ரஷ்யாவின் பால்டிக் பிரதேசத்தில் உள்ள லிவோனியாவில் லிக்பென்ஜன் என்ற ஏரியில் ஒரு சிறு தீவு இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் மாதம் இத்தீவு ஏரியின் நீர்மட்டம் உயர்வதால் நீரில் மூழ்கி மறைந்து விடும். மூன்று மாதம் கழித்து ஏரியின் நீர் குறைந்து விடுவதால் மறுபடி தீவு தோன்றுகிறது.

அந்த இடைவெளியில் விவசாயிகள் விவசாயம் செய்து அறுவடை செய்வார்கள். ஒவ்வொரு ஆண்டும் தீவு நீரில் மூழ்குவதும், பின்னர் வெளிவருவதும் நடைபெறுகிறது.

அவுஸ்திரேலியாவில் உள்ள ஃபால்கன் தீவு 1913ம் ஆண்டு முற்றிலுமாகக் கடலில் மூழ்கியது. 13 ஆண்டுகளுக்குப் பின், 1926ம் ஆண்டு அத்தீவு கடலில் தோன்றியது. பின்னர் 23 ஆண்டுகளுக்குப் பின் 1949ம் ஆண்டு ஃபால்கன் தீவு மீண்டும் கடலில் மூழ்கி விட்டது.

# ஏன் தெரியுமா?

எம்மை நுளம்பு கடித்ததும், கடித்த இடத்தில் அரிப்பு எடுக்கிறதே இது ஏன்



என்று உங்களுக்குத் தெரியுமா?

இரத்தம் உடனடியாக உறைந்துவிடும். நுளம்புகள் நம்மைக் கடித்து இரத்தத்தை உறிஞ்சும்போது, இரத்தம் உறைந்துவிட்டால் நுளம்புகளுக்குச் சிரமம் ஏற்படும். இதனால் நுளம்புகள் நம்மைக் கடித்ததும் அவை தங்களது வாயில் சுரக்கின்ற ஒரு திரவத்தை நமது தோலுக்குள் செலுத்துகின்றன. இந்தத் திரவம் இரத்தம் உறைவதைத் தடுக்கிறது. அதன் பின்னர்தான் நுளம்புகள் இரத்தத்தைக் குடிக்க ஆரம்பிக்கின்றன.

நுளம்புகள் நமது தோலுக்குள் செலுத்தும் திரவம்தான் எமது உடலுக்கு ஒவ்வாமல் போகிறது. அதனால்தான் நுளம்பு கடித்த இடத்தில் அரிப்பு எடுக்கிறது.

# விடுகதைகளும் விடைகளும்

1. காற்றில் அசைபவன், காற்றிலே இசைவான்.
   அவன் யார்?
2. பாலாற்றிலே கறுப்பு மீன் உலாவுது.
   அது என்ன?
3. கோடையிலே ஆடிவரும், வாடையில் முடங்கி விடும்.
   அது என்ன?
4. நாளும் மெலிபவன், நாளும் சொல்வான்.
   அவன் யார்?
5. சின்னக் குதிரைக்கு நூறு கடிவாளம்.
   அது என்ன?
6. காற்றைக் குடித்து காற்றில் பறப்பான்.
   அவன் யார்?
7. மோதியபின் மின்னுவான், மின்னிய பின் வெடிப்பான்.
   அவன் யார்?
8. காலையில் விழிப்பாள் ஒருத்தி, மாலையில் விழிப்பாள் இன்னொருத்தி
   அவர்கள் யார்?
9. தண்ணீரில் நீந்தி வருபவன், தரையில் தாண்டி வருவான்
   அவன் யார்?
10. அண்ணன் தம்பி இருவர், அவர்களைச் சுற்றிப் பன்னிருவர்.
    அது என்ன?

## விடைகள்

1. மூங்கில் 2. கண்விழி
3. விசிறி 4. கலண்டர்
5. தறி 6. பலூன்
7. இடிமின்னல் 8. தாமரை-அல்லி
9. தவளை 10. கடிகாரம்

தொகுப்பு: செல்வி.எஸ்.கயல்விழி.

# முதன் முதலில்.....

* பாய்மரப் படகுகளை அறிமுகப் படுத்தியவர்கள்- எகிப்தியர்கள்.
* நெடுஞ்சாலைகளை அமைத்தவர்கள்- பாரசீகர்கள்.
* கலங்கரை விளக்கத்தைப் பயன்படுத்தியவர்கள்- கிரேக்கர்கள்.
* பருத்தி ஆடை நெய்யும் முறையை அறிமுகப்படுத்தியவர்கள்- இந்தியர்கள்.
* நிலக்கரியைப் பயன்படுத்தியவர்கள்- சீனர்கள்.
* சாவியை வளையத்தில் மாட்டும் முறையை அறிமுகப்படுத்தியவர்கள்- ரோமர்கள்.

www.padippakam.com

# திக் திக் திக் புதிய தொடர் 03

# நந்தினி 440 வோல்ட்

## கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

**ராஜேஸ்குமாரின் கதை என்றால் விறுவிறுப்புக்கு பஞ்சம் இருக்காதல்லவா? அதனை மீண்டும் நிரூபிக்கும் விதமாக வாரா வாரம் அசுர வேகத்தில் நகரும் கதையிது:**

தண்ணீர் நிரம்பிய குடத்தை எடுத்து இடுப்பில் வைத்தபடி நடந்த பொன்னுசாமி வாத்தியாரின் மகள் லட்சுமி வீரபத்ரனைப் பார்த்ததும் புன்னகைத்தாள்.

"அண்ணே!" என்றாள்.

"என்னம்மா லட்சுமி, சௌக்கியமா?"

"சௌக்கியந்தாண்ணே!"

"அப்பாரு?"

"அப்பாரும் சௌக்யந்தான்... இத்தினி நாளா எங்கண்ணே போயிருந்தீங்க...?" லட்சுமி அவனோடு இணைந்து நடந்தபடியே கேட்டாள்.

"அதையேம்மா கேக்கற...? சம்பாதிக்கத் துப்பில்லாதவன், அம்மாவையும் தங்கச்சியையும் காப்பாத்த வக்கில்லாதவன்னு ஊர்ப்பஞ்சாயத்து என்னைக் கேவலமா பேசினதைத் தாங்கிக்க முடியாமே... நாலு காசு சம்பாதிக்கணும்கிற வெறியில ஊரை விட்டு ஓடிப்போனேன். இப்போ நாலு காசோட திரும்பி வந்திருக்கேன்... என்னோட தங்கச்சி பார்வதியும் அம்மாவும் இப்போ எப்படி இருக்காங்க லட்சுமி...?"

"அ...ண்...ணே..."

லட்சுமி த்தட்டென்று நின்றாள்.

"என்னம்மா?"

"உ... உங்களுக்கு விஷயம் தெரியாதா அண்ணே?"

"விஷயமா? என்ன விஷயம்..?"

"உங்கம்மாவும் தங்கச்சி பார்வதியும்...செ...செ... செத்துப் போயிட்டாங்க..."



வீரபத்ரனின் கையிலிருந்த இரண்டு சூட்கேஸ்களும் நழுவி உருண்டன. வாய் தன்னிச்சையாகத் திறந்துகொள்ள- உதடுகள் துடித்தன.

"செ... செத்துட்டாங்களா...?"

"ஆமா..!"

"எப்போ...?"

"ரெண்டு வாரத்துக்கு முந்தி..."

"எ...எ...எப்படி...?"

"குடிசை... எரிஞ்சு போயி..."

"அம்மா....ஆ...! பார்வதி ஈ...ஈ...ஈ!"

வீறிட்ட வீரபத்ரன் தன்வீட்டுக் குடிசை இருந்த திக்கை நோக்கி ஓடினான். கையில் செம்போடு பொட்டல் வெளிகளைத் தேடிப் போய்க்கொண்டிருந்த ஜனங்கள் அவனை வேடிக்கை பார்க்க- தெரு நாய்கள் அவனைப் பார்த்துக் குரைத்தன.

நிமிஷ நேர ஓட்டம்.

வீடு இருந்த இடத்தைத் தொட்டான்.

மனசுக்குள் வலி திமிறியது.

குடிசை இருந்த இடத்தில்- தீப்பட்டுக் கரிந்த குட்டிச்சுவர்கள் மட்டும் நின்றிருந்தது. குடிசையின் சாம்பல் மண்ணோடு மண்ணாய்க் கலந்து கெட்டிப்பட்டிருந்தது. பாதி எரிந்து போன மூங்கில் கம்புகளை ஓர் ஓரமாய்க் குவித்திருந்தார்கள்.

கண்களில் நீர் திரள வீட்டையே சுற்றிச் சுற்றி வந்தான் வீரபத்ரன். திடீரென்று அவனுடைய தோளின்மேல் ஒரு கை விழுந்தது.

கணேசமூர்த்தி... அவனுடைய பால்யகால நண்பன். இறுகிப்போன முகத்தோடு நின்றிருந்தான். கணேசமூர்த்தி ஒரு வேலையில்லா பட்டதாரி... வேலை கிடைக்காததால் கவர்மெண்டைத் திட்டிக்கொண்டும்- ஏதோ ஒரு மன்றத்தை அமைத்துக் கொண்டும்- உரத்த சிந்தனைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பவன்.

"வாடா... வீரபத்ரா..!" வீரபத்ரனின் தோளைப் பற்றி தன்னுடைய வீட்டுத் திண்ணைக்கு இழுத்துக்கொண்டு போனான் கணேசமூர்த்தி. வீரபத்ரன் புலம்பினான்.

"டேய்.. கணேசா... எப்படிடா... என்னோட அம்மாவும் பார்வதியும்... குடிசையில தீப்பிடிச்சுச் செத்தாங்க...?"

கேணசமூர்த்தி கசப்பாய் புன்னகைத்தான். "அடுப்புத்தீ... கூரை விரிச்சுல பட்டுத் தீப்பிடிச்சதா பொலிஸ் சொல்றாங்க... ஊர் ஜனங்களும் அப்படித்தான் நினைச்சுட்டிருக்காங்க. ஆனா என்னைப் பொறுத்த வரையில நான் அப்படி நினைக்கலை..."

வீரபத்ரன் விசுக்கென்று அவனை ஏறிட்டான். கண்களில் இருந்த நீரை அவசர அவசரமாய் துடைத்துக் கொண்டான்.

"நீ என்னடா நினைக்கிறே...?"

"திட்டம் போட்டு பண்ணின கொலைன்னு நான் நினைக்கிறேன்..."

"கொலையா...?"

"கொலையேதான்... அசந்து தூங்கிட்டிருந்த உங்கம்மாவையும் பார்வதியையும் குடிசைக்குள்ளே வெச்சு வெளிப்பக்கமா பூட்டிக்கிட்டுத் தீ வெச்சு உயிரோட ரெண்டு பேரையும் கொளுத்தினா அதுக்குப்பேரு கொலைதானே..?"

முகம் பூராவும் இரத்தச் சிவப்பானான் வீரபத்ரன். உறுமினான். "தீ வெச்சது யாரு..?"

அக்கம் பக்கம் பார்த்துக் கொண்டு மெல்லிய குரலில் சொன்னான், கணேசமூர்த்தி.

●●

அன்றைக்குக் காலை வந்த தபால்களைப் பிரித்து-அரசாங்க வாசனை வீசும் கடிதங்களைப் படித்துக் கொண்டிருந்தார் ஜெயில் சூப்ரின்டெண்ட் பாண்டுரங்கன்.

தொப்பி வைத்து வைத்து அமுங்கிப்போன நரை கிராப் போடு தெரிந்த பாண்டுரங்கனுக்கு வரப்போகிற வருஷம் ரிடையர்மெண்ட் வருஷம். காக்கி யூனிபார்ம்களைப் போடும்போதே இருதயங்களைக் கழற்றி வைத்து விடுகிற ஆபீஸர்களுக்கு மத்தியில் இவர் கொஞ்சம் வித்தியாசமானவர். சுலபத்தில் ஈரம் கசிகிற மனசு இவருக்கு. தமிழ் நாட்டின் எல்லா சிறைச்சாலைகளிலும் தலா ஐந்து வருஷம் வேலை பார்த்துக் கடைசியாய் இந்த கோவைச் சிறைச்சாலையில் சர்வீஸை முடிக்கக் காத்திருப்பவர்.

தபால்களைப் பார்த்துக் கொண்டே வந்தவரின் பார்வை-சட்டென்று அந்தக் கடிதத்தில் தேங்கியது. 'அட' என்கிற பாவனையில் நெற்றியைக் கீறிக் கொண்டே இண்டர்காமின் ரிஸீவரை எடுத்தார்.

டெப்டி சூப்ரிண்டெண்ட் அருள்ராஜின் அறையிலிருந்த இண்டர்காம் கத்தியது. அவர் எடுத்தார். "ஸார்..." என்றார்.

"மிஸ்டர் அருள்ராஜ். என்னோட ரூம் வரைக்கும் கொஞ்சம் வந்துட்டுப் போறீங்களா?"

"வர்றேன் ஸார்."

"ஆன் த வே... 'எம்' ஸெல்லுக்குத் தகவல் அனுப்பி-ப்ரிஸ்னர் மாயாண்டியை என்னோட ரூமுக்குக் கூட்டிட்டு வரச் சொல்லுங்க..."

"எஸ்.. ஸார்.:"

"இன்டர்காமின் ரிஸீவரைக் கீழே வைத்துவிட்டு- நெற்றியை மறுபடியும் தேய்த்தபடி அந்த பழுப்பு நிறக்காகிதத்தில் ஒட்டியிருந்த எழுத்துக்களையே பார்த்துக் கொண்டிருந்தார் பாண்டு ரங்கன்.

அருள்ராஜ் ஒரு சல் யூட்டோடு உள்ளே வந்தார்.

"பீ...ஸீட்டற் அருள் ராஜ்."

அருள்ராஜ் உட்கார்ந்தார்.

"மாயாண்டியை அழைச்சுட்டு வரச் சொன்னீங்களா...?"

"சொல்லியிருக்கேன் ஸார்."

பாண்டுரங்கன் மெல்லிய குரலில் சொன்னார். "டெல்லியிலிருந்து ஆர்டர் வந்தாச்சு அருள்ராஜ்."

"ஃபார்வாட் ஸார்?"

பாண்டுரங்கன் வாயைத் திறந்து பதில் சொல்வதற்குள்- கதவுக்கு வெளியே இரும்புச் சங்கிலிகள் கலகலக்கும் சத்தம் கேட்டது.

"மாயாண்டி வர்றான்."

மாயாண்டியை அழைத்து வந்த வார்டன் விறைப்பான சல்யூட்களை விநியோகிக்க மாயாண்டி பாண்டுரங்கனைப் பார்த்துக் கோணல் சிரிப்பு சிரித்தான்.

மாயாண்டிக்கு ராட்சஸ உருவம். கைகளிலும் கால்களிலும் அமோகமான ரோமப் பயிர். மொட்டையடித்த தலை. அகலமான நெற்றிக்குக் கீழே இரத்தத்தில் மிதக்கிற மாதிரியான செக்கச்செவேலென்ற விழிகள். முன் வரிசைப் பற்கள் இல்லாமல் அவன் சிரிக்கும்போது பார்ப்பவர்களின் வயிற்றில் பய ஊசி இறங்கும். சாராயக்கடையில் ஏற்பட்ட ஒரு சின்னத் தகராறின் காரணமாக அதீதமாய் ஆத்திரப்பட்ட மாயாண்டி- ஆட்டை அறுக்கிற வெட்டுக் கத்தியால் எட்டுப் பேரை கண்டம் துண்டமாய் வெட்டிப் போட்டான்.

"மாயாண்டி...!"

சூப்ரிண்டெண்ட் பாண்டுரங்கன் கூப்பிட மாயாண்டி தன் கைச் சங்கிலிகள் கலகலக்க நிமிர்ந்தான்.

"என்ன ஸார்" என்றான், அலட்சியமாய்.

"உன்னைத் தூக்குல போடச் சொல்லி உத்தரவு வந்தாச்சு..."

"சந்தோஷம்..."

"நாளைக்குக் காலையில அஞ்சு மணிக்கு..."

"பரம சந்தோஷம்."

"உன்னோட கடைசி ஆசை ஏதாவது இருந்தா சொல்லு!"

மாயாண்டி சிரித்தான். "நாளைக்குக் காலைல அஞ்சு மணிக்குத் தூக்குக் கயித்துக்கு என்னைக் கொண்டுட்டுப் போகும் போது என்னோட கடைசி ஆசையை ஒரு பேப்பர்ல எழுதித் தர்றேன்..."

"ஏன் இப்பவே சொல்ல மாட்டியா....?"

"மாட்டேன்."

"ஏன்?"

"சொன்னாலும் ஒரு பிரயோசனமும் இல்லை..."

ஜெயில் சூப்ரின்டெண்ட் பாண்டு ரங்கனும் டெபுடி அருள்ராஜும் மாயாண்டியை ஆச்சர்யமாய்ப் பார்த்தார்கள். அவன் மோவாயைச் சொறிந்து கொண்டு எங்கோ பார்த்தான்.

பாத்ரூமை விட்டு வெளியே ஓடி வந்த பாரி, ஜன்னலோரமாய் மயங்கிக் கிடக்கும் நந்தினியைப் பார்த்ததும் அதிர்ந்து போனான்.

"நந்து... நந்து..."

அவளருகே ஓடிப் போய்க் குனிந்து- நந்தினியை இரண்டு கைகளாலும் அள்ளிக்கொண்டு படுக்கைக்கு வந்தான்; கிடத்தினான்.

நந்தினியின் அலறலைக் கேட்டு பாரியின் அப்பா வாகீசனும், அம்மா பரிமளமும், பக்கத்து அறையிலிருந்து ஓடிவர- மாடியிலிருந்து பாரியின் தம்பி விமலும் அவனுடைய மனைவி சொப்னாவும் தடதடத்து வந்தார்கள்.

"டேய்... பாரி.. நந்தினிக்கு என்னடா ஆச்சு...?" – பரிமளம் கேட்டாள்.

"தெரியல்லேம்மா."

"இவன் ஏதாவது பயமுறுத்தியிருப்பான்" வாகீசன் சொன்னார்.

"இல்லேப்பா. நந்தினி சத்தம் போட்டப்ப நான் பாத்ரூம்ல இருந்தேன்."

சொப்னா சிரித்தாள்.

"பச்சையோ, கரப்பான் பூச்சியோ அக்காவுக்குப் பக்கத்துல ஓடியிருக்கும். அக்கா உடனே பயந்து அலறியிருப்பாங்க..."

விமல் ஓடிப் போய் வாட்டர் ஜக்கைக் கொண்டு வந்து உள்ளங்கையில் கொஞ்சம் போல் தண்ணீர் வார்த்து- நந்தினியின் முகத்தில் விசிறினான்.

நந்தியினின் முகம் உணர்ச்சிக்கு வந்தது.

மெல்ல மெல்ல கண்களை மலர்த்தினாள்.

"நந்து... நந்து..." என்று சொல்லிக் கொண்டே அவளுடைய கன்னத்தை லேசாய்த் தட்டினான் பாரி. நந்தினி மெல்ல எழுந்து உட்கார்ந்தாள்.

"என்னம்மா நந்தினி... எதுக்காக அப்படி கத்தினே...?" வாகீசன் குனிந்து மெல்லிய குரலில் கேட்டார்.

"எ...எலி... எலி.. மாமா..."

(தொடர்ந்து வரும்)

---

# 'சே' ஒரு மனிதன் போராளி

**கியூபாவின் கெரில்லாப் போரில் சேகுவேரா (சே) பற்றிய அனுபவங்களை அவருடன்கூட இருந்தவர்கள் பகிர்ந்து கொள்கின்றனர்.**



முன்னேறிக் கொண்டிருக்கும் போதே அவருக்கு ஆஸ்துமா தொந்தரவு வருமானால் அதைக் காரணம் காட்டி அணியிலிருந்து தன்னை விலக்க அனுமதிக்க மாட்டார். சியாரா மாய்ஸ்ட்ராவில் அவரோடு சேர்ந்து போராடிய ஜோல் இக்லெசியாஸ் கூறுகிறார்: "சே ஆஸ்துமா தாக்குதலுக்கு ஆளான போதும், அது அணியின் இயக்கத்தைப் பாதிக்க அவர் அனுமதிக்க மாட்டார். அதிகபட்சமாகத் தனது முதுகுப் பையை யாரேனும் தூக்கி வர அனுமதிப்பார்.

தனது நோயின் காரணமாகத் தாமதம் ஏற்பட்டுவிடக்கூடாது என்று சே கருதினார். இது அனைவருக்குமான பொது விதி. நோய்வாய்ப்பட்டவர்களுக்காக குழு தாமதிக்காது. உன்னால் நடக்க முடியவில்லை எனில்-தொடர்ந்து செல். அவர் ஒருபோதும் விதியை மீறியதே இல்லை."

ஒரு வெளிநாட்டவரும், மருத்துவரும், ஆஸ்துமா நோயாளியுமான இந்தப் புரட்சிக்காரர் கியூபா புரட்சியாளர்களின் இதயங்களில் உயர்ந்த இடத்தைப் பிடித்தார். சிலருக்கு அவர் ஒரு அதிசயமாகத் தோன்றினார். மற்றவர்களது மரியாதைக்கும் அன்புக்கும் உரியவராகினார். பொன்சியான பெரஸ் என்ற, மலைகளில் வயதான விவசாயப் பெண்மணி (இவரை சே கேலியாக, "எனது வருங்கால மனைவி" என்று அழைப்பார்) தனது நினைவுகளைக் கூறுகிறார்.

"பாவம் சே! அவர் ஆஸ்துமாவால் எவ்வளவு தொல்லைப்பட்டார் என்பதை நான் பார்த்தேன். தொந்தரவு ஆரம்பமானதும் அவர் பெருமூச்சு மட்டும் விடுவார். பேசாமல் படுத்துக் கொள்வார். தனது வேதனையை மட்டுப்படுத்துவதற்காக அமைதியாகச் சுவாசிப்பார்.

இப்படிப்பட்ட தொந்தரவு வருகிற போதும் பலர் வெல வெலத்துப் போவார்கள், இருமுவார்கள், வாயை வாயைத் திறப்பார்கள். சே தொந்தரவை அடக்க முயலுவார்; ஆஸ்துமாவைக் கட்டுப்படுத்துவார். ஒரு மூலையில் நாற்காலியின் மீதோ, கல்லின் மீதோ உட்கார்ந்து ஓய்வெடுப்பார். சில நேரங்களில், நான் அவரோடு பேசிக் கொண்டிருந்தபோது, அவர் இரண்டு வார்த்தைகளுக்கிடையில் இடைவெளி விடுவதைக் கவனித்திருக்கிறேன்.

அப்படி இடைவெளி விட்டால் அவர் ஆஸ்துமா தொந்தரவுக்கு ஆளாகியிருக்கிறார் என்பதை உறுதியாகக் கண்டு கொள்ளலாம். அந்த மாதிரி நேரங்களில் நான் விரைந்து அவருக்கு ஏதேனும் சூடாகக் குடிக்கக் கொடுப்பேன். நெஞ்சைச் சூடாகத் தேய்த்து விடுவேன். இது அவரது வேதனையைக் குறைக்கும். புனித மாதாவே! அந்தப் பலம் பொருந்திய சுறுசுறுப்பான மனிதர் துன்பப்படுவதையும், மூச்சுத் திணறுவதையும் பார்த்துக் கொண்டிருப்பது எவ்வளவு கஷ்டம் தெரியுமா?

ஆனால், அவர் மீது யாரும் இரக்கப்படுவதை அவர் விரும்பமாட்டார். யாரேனும் பாவம் என்று சொல்லிவிட்டால் உடனே கூர்மையான கனமான அவரது பார்வை சொன்னவரைத் துளைத்துவிடும். பெருமூச்சு, இரக்கமான வார்த்தைகளால் அவரை எரிச்சலூட்டுவதைக் காட்டிலும் உடனே ஒரு பாத்திரத்தில் கஷாயம் வைத்துக் கொடுத்தால் அவர் விரும்பி ஏற்றுக் கொள்வார்."

இந்த அசாதாரணப் புரட்சிக்காரர், அவர்களிடமிருந்து வேறுபட்டவராக இருந்தபோதும், வித்தியாசமான ஆர்ஜென்டைன் மொழி பேசிய போதும், கியூபா புரட்சியாளர்கள் அவரை மதித்தனர். உலகின் எந்தப் பாகத்திலும் போற்றப்படுகிற மானிடக் குணங்களான- எளிமை, துணிச்சல், நேர்மை ஆகிய குணங்களால் அவர் பல விவசாயிகளைக் கவர்ந்தார்.

ராபேல் சாவோ என்கிற புரட்சிக்காரர் குவேராவைப் பற்றிக் கூறுகிறார்: "அவர் எப்போதும் நல்ல மனநிலையில் இருந்தார். எப்போதும் ஒரே விதமான தொனியில் பேசினார். அவரது பேச்சு கடுமையான சொற்களாய் இருந்தபோதிலும், அவர் ஒருபோதும் யாரையும் சத்தமிட்டதில்லை. அவர் ஒருபோதும் கூக்குரலிட்டதில்லை. சுடுசொல் சொன்னதில்லை. கூர்மையான மிகக் கூர்மையான நாவை உடையவராய் இருந்தபோதும் தேவை ஏற்பட்டால் அவரைப் போன்ற சுயகட்டுப்பாடு உடையாரை நான் கண்டதே இல்லை.

அவரிடம் ஒரே ஒரு இனிப்பு உருளைக் கிழங்கு இருந்தாலும், அதையும் அவர் தயக்கமின்றித் தனது தோழர்களுக்குக் கொடுத்து விடக்கூடியவர்.

ஒரு கெரில்லாப் போர் வீரன் தன்னலம் மறுக்கும் துறவியைப் போல் இருக்க வேண்டும் என்று சே கூறுவார். தான் சொன்னதை அவர் செய்து காட்டினார். ஒரு கெரில்லாப் படைத்தளபதி அப்பழுக்கற்ற நடத்தை உடையவனாகவும், சர்வ பரித்தியாகம் செய்யத் தயார் நிலையில் இருப்பவனாகவும் இருக்க வேண்டும் என்று சே கற்றுத்தந்தார்.

மிகவும் அபாயகரமான பொறுப்பை ஏற்றுக் கொண்டு, அதிலிருந்து பின்வாங்காமல் அதனைச் செய்து முடிக்கும் அசாதாரண மனிதர் சே என்று பிடல் காஸ்ட்ரோ கூறினார்.

ஒரு கெரில்லாப் போர்வீரன், எவ்விதத் துன்பங்களையும் ஏற்றுச் சமாளிக்கக் கூடிய, நோய்வாய்ப்படாத நல்ல ஆரோக்கியம் உடையவனாக இருக்க வேண்டும் என்று சே கூறினார். இந்த வரிகளுக்கிடையே தனது சொந்த நோய் குறித்து அவரது சோகப் பெருமூச்சு ஒலிப்பதை நாம் உணர முடிகிறது. ஆஸ்துமாவின் தாக்குதலுக்கு ஆளான போதெல்லாம் தனது மனத்தின்மையைக் காப்பாற்றிக் கொள்ள அவர் தார்மீக ரீதியாக எவ்வளவு முயற்சி செய்திருக்க வேண்டும் என்று நம்மால் யூகிக்க முடிகிறது.

இத்தகைய மனிதர் புரட்சிக்காரர்களால் மட்டுமன்றி கியூபா புரட்சியாளர்களால் மதிக்கப் பட்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை...

இந்தப் போர்க்களத்தில் சே எழுதி வந்த டைரியை ஆதாரமாக வைத்துத்தான் அவரது 'கியூபா புரட்சிகர யுத்தத்தின் கதை' என்ற புகழ்பெற்ற நூல் எழுதப்பட்டது.

தந்திரமான அரக்கத்தனமான எதிரியை எதிர்த்து, வெற்றி அல்லது வீரமரணம் என்று யுத்தத்தில் ஈடுபட கியூபாவுக்கு வந்த வீரர்களின் கனவுகளைப் பற்றி நம்பிக்கைகள் பற்றி, வருத்தங்கள் பற்றி, அபாயகரமான கெரில்லா வாழ்க்கை பற்றி இருந்த நூல் உண்மை யான, ருசிகரமான பல விஷயங்களைத் தருகிறது.

மேலும் சே இந்த நூலில் தன்னைப் பற்றிச் சிறிதளவே கூறியிருந்த போதும், தனது புகழைக் குறைத்துக் காட்டும் நோக்கத்தோடு தன்னைப்பற்றி அங்கதத்தோடு அல்லது நகைச்சுவையோடு கூறியிருந்த போதும், துணிச்சலும், நேர்மையும், அன்பும் பொருந்திய மனிதரான அவரைப் பற்றியும் அறிய முடிகிறது.


தன்னை உயர்த்திப் பேசுதல், ஜம்பமடித்துக் கொள்ளுதல், மிகைப்படுத்துதல், சுயவிளம்பரம் ஆகியவற்றைச் சே சகித்துக் கொள்ளவே மாட்டார். மிகைப்படுத்திக் கூற வேண்டிய அவசியமே இல்லாத அளவுக்கு அவர் துணிச்சல் உடையவராக இருந்தார்.

பைசிட்டா என்ற கிராமத்தில் அவரது ஆட்களுக்கும் எதிரிகளுக்கும் நடந்த யுத்தம் பற்றி, இந்நூலில் அவர் எழுதுகிறார்: "இந்த யுத்தத்தில் நான் போதுமான அளவுக்குப் பங்கேற்கவில்லை. வீரச்செயல்கள் ஒன்றும் செய்யவில்லை. துப்பாக்கி சுடும் சப்தங்கள் கேட்டபோது நான் மனதார வாழ்த்தாமல் சபித்தேன்." ■



படிப்பகம்

www.padippakam.com




# மேக்கப் புன்னகை

## 22

மதுமிதா தன் மனதில் தோன்றிய உடனடி சந்தேகத்தை வடிகட்டாமல், வார்த்தைகளில் அலங்காரம் சேர்க்காமல் பளிச் சென்று கேட்டு விட்டதில் சற்றே அதிர்ந்து போனான் சந்திரசேகர்.

அவளை உற்றுப் பார்த்தபடி அமைதியாக இருந்தான்.

"பதில் சொல்லுங்க சந்துரு!" அவனை உசுப்பினாள் மதுமிதா.

"என்ன சொல்லணும்?"

"உங்க ஆபீஸ்ல வேலை பார்க்கற ஒருத்தரை நாடகம் நடத்தச் சொல்லி, என் கேரக்டரை டெஸ்ட் செஞ்சது அவரைத் திருப்திப்படுத்தறத்துக்காகவா, இல்லை உங்களுக்கே ஒரு சந்தேகம் என் மேல இருந்துச்சான்னு கேட்டேன்."

"மது, இப்படி நீ கேக்கறதுதான் என்னை அவமானப்படுத்தற மாதிரி இருக்குது. என்னோட உண்மையான அன்பை இப்ப நீதான் சந்தேகப்படறே"

மதுமிதா கோபமாக முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

"மது, இங்கே என்னைப் பாரு... நான் உன்னைச் சந்தேகப்படுவேன்னு நீ எப்படி சந்தேகபட்டே?"

"நீங்க என்னை சமாதானப்படுத்தறதுக்காக இப்படி எல்லாம் பேசறீங்க. இல்லைன்னா இவ்வளவு ஒரு மோசமான நாடகத்தை எதுக்காக நடத்தணும்?"

"அதான் சொன்னேனே, அந்த சாரி சாரை திருப்திப்படுத்தறதுக்காகன்னு"

"நான் நல்லவள்னு அவருக்கு நம்பிக்கை ஏற்படுத்த வேண்டிய அவசியம் என்ன? கல்யாணம் செய்துக்கப் போறது நீங்களும் நானும். நமக்கு ஒருத்தர் மேல ஒருத்தருக்கு முழுமையான நம்பிக்கை இருக்கு. இதில் நடுவில அவர் எங்கே வந்தார்?"

"நான் மதிக்கிற நபர்கள்ல அவரும் ஒருத்தர் மது. வயசுல மூத்தவர். என் மேல அன்பும், அக்கறையும் வெச்சிருக்கிறவர். எனக்குத் தொழில் நுணுக்கம் எல்லாம் கத்துக் கொடுத்தவர். நம்ம கல்யாணத்துக்கு ஒரு சாட்சியா அவரும் இருக்கணும்னு நான் ஆசைப்பட்டேன். அவர் பழைய சம்பிரதாயங்கள்ல ஊறினவர். சினிமா நடிகைன்னா கொஞ்சம் தரக்குறைவான மதிப்பீடுதான் இன்னைக்கு நிறைய பேர் மனசுல இருக்கு. அதே மாதிரித்தான் அவரும் தயக்கமாய் பேசினார். நான் உன்னோட நெருக்கமாப் பழகி உன்னை ரொம்ப உணர்வுபூர்வமா புரிஞ்சுக்கிட்டதால, உலகம் பூரா அதே மாதிரி புரிஞ்சுக்குமா? எனக்கு உலகம் எல்லாம் புரிஞ்சுக்க வேணாம். அட்லீஸ்ட் நான் மதிக்கிற ஒருத்தர் மட்டுமாவது உன்னை சரியா புரிஞ்சுக்கணும்னு ஆசைப்பட்டேன். இது தப்பா?"

மதுமிதா அமைதியாக இருந்தாள்.

"நீ என்ன பதில் சொல்லப் போறேன்னு எனக்கு நல்லாத் தெரியும். அதை அவர் தெரிஞ்சுக்கணும்னு விரும்பினேன். அவ்வளவுதான். அநாவசியமா என் சின்சியாரிட்டியை சந்தேகப்பட்டு, நான் உன்மேல வெச்சிருக்கிற பிரியத்தைக் கொச்சைப் படுத்தாதே!"

அப்போதும் மதுமிதா அமைதியாகவே இருக்க, சட்டென்று எழுந்து கொண்டான் சந்திரசேகர்.

"எது உண்மையோ அதை விளக்கமா சொல்லிட்டேன். எனக்கு உன்மேல எந்தவித சந்தேகமும் கிடையாதுன்னு வேற எப்படி உனக்குப் புரிய வைக்கிறதுன்னு எனக்குத் தெரியலை. இது தேவையில்லாத கோபம்! கொஞ்சம் அமைதியா யோசிச்சுப் பார்த்தா அதை நீ புரிஞ்சுப்பே. புரிஞ்சதுக்கப்புறம் ஃபோன் பண்ணு. இதுக்குமேல இதுல வாதம் செய்யறதுக்கோ, விளக்கம் சொல்றதுக்கோ எதுவும் இல்லை."

வேகமாகக் கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்றான் சந்திரசேகர். அவன் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தாள் மதுமிதா.

'நான்தான் அனாவசியமாக சந்துருவை சந்தேகப்பட்டு விட்டேனா? அவர் சொல்வதெல்லாம் உண்மைதானோ?

எனக்குப் பரீட்சை வைப்பது போல, நாடகமாடச் சொல்லி என்னைப் புரிய வைப்பதும், ஒரு விதத்தில் என்னை அவமானப்படுத்துவது இல்லையா?

ஒரு கோடீஸ்வரன் வந்து சொக்க வைக்கும் வார்த்தைகளில் பணத்தைக் கவர்ச்சிப் பொருளாக்கிக் கவர்ந்து பேசினால் நான் தடுமாறிடுவேனா?

என்ன ஒரு அபத்தமான பரிசோதனை இது?

அந்த சாரி அவர் மதிக்கிற நபராக இருக்கலாம். அதற்காக அவரை நம்ப வைப்பதற்காக என்னை இப்படி எல்லாம் கேள்வி கேட்கச் செய்ய வேண்டுமா?

இது என் தன்மானத்தைப் பாதிக்கிற விஷயம் என்று ஏன் அவருக்குத் தோன்றவில்லை?

ஒரு விளையாட்டுக்காக அந்த சாரியிடம் உங்கள் மகனை நேரில் சந்தித்துப் பேசி பிறகு முடிவு சொல்றேன் என்று நான் பதில் சொல்லியிருந்தால்...?

அந்த பதிலை வைத்து சாரி என்னை பணத்திற்காக மனதை மாற்றிக் கொள்ளக் கூடிய பெண் இவள் என்கிற கருத்திற்கு வந்திருப்பார்.

அதே கருத்தை கண், காது, மூக்கு வைத்து அழுத்தமாக இவரிடம் சொல்லியிருப்பார்.



அப்போது இவரின் நிலை என்ன?

சாரி சொல்கிற பரிசோதனை முடிவை வைத்து இவரின் முடிவை மாற்றிக் கொள்வாரா?

என்ன பேத்தலான நாடகம்? நான் என்ன கார் மாதிரி ஒரு பொருளா? ஒரு பழைய காரை வாங்குவதாக இருந்தால் ஒரு மெக்கானிக்கை அழைத்துச் செல்வார்கள். அந்தக் காரைப் பரிசோதித்துக் கவனிக்கச் சொல்வார்கள். வாங்கலாமா, வேண்டாமா, வாங்கலாம் என்றால் என்ன விலை கொடுக்கலாம் என்று அவர் கருத்துச் சொல்வார். அதன்படி வாங்கச் செல்பவர் முடிவெடுப்பார்.

அந்த மாதிரி யாரோ ஒரு சாரியை அனுப்பி என்னைப் பரிசோதிப்பது ஒரு வேதனை தரும் விஷயம் என்று உங்களுக்குத் தோன்றவில்லையா சந்துரு?

இந்தப் பரிசோதனை எனக்காக இல்லை. அவருக்காகத்தான் என்று விளக்கம் சொல்லிவிட்டால் சரியாய்ப் போயிற்றா?

மதுமிதாவின் மனதில் குமுறல்கள் அலை அலையாக வந்து கொண்டே இருந்தன. 'இந்த சந்துரு ஒரு சந்தேக புத்தி கொண்டவனோ?' என்று ஒரு விதை அவள் மனதில் விழுந்து போனதில் வருத்தமாகவும், வெறுப்பாகவும் இருந்தது.

***

'சினிமா புயல்' பத்திரிகையின் அலுவலகம்.

அந்த தபாலில் வந்த கடிதத்தைப் படித்துப் பார்த்த ஆசிரியர், உடனடியாக இண்டர்காமில் ஒரு நிருபரை தன் அறைக்கு வரச்சொல்லி அழைத்தார்.

சில வினாடிகளில் நிருபர் காசிநாதன், "நடிகை மதுமிதா கூடிய சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கப் போறதா சமீபத்தில் பரபரப்பா ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுத்தாங்க, இல்லையா?"

ஆமாம் சார்"

"ஆந்திராலேர்ந்து வெங்கடரெட்டின்னு ஒரு ஆளு இங்கு வந்திருக்காரு காசிநாதன். அவரு பல வருஷம் முன்னாடியே எனக்கும் மதுமிதாவுக்கும் கல்யாணமாயிடுச்சுன்னு சொல்லி எழுதியிருக்காரு"

"என்ன சார் சொல்றீங்க?"

"இதைப்பாருங்க"

தன் கையிலிருந்த கடிதத்தைக் கொடுத்தார். அதை வாங்கிப் படித்தார் காசிநாதன்.

'அன்புள்ள சினிமா புயல் பத்திரிகையின் ஆசிரியர் அவர்கட்கு...

வணக்கம்.

என் பெயர் வெங்கடரெட்டி. நான் ஆந்திரா மாநிலத்தைச் சேர்ந்தவன். நெல்லூர் அருகில் ஒரு கிராமம் என் சொந்த ஊர்.

இதுவரை இந்தச் சமுதாயத்திற்குத் தெரியாத ஒரு உண்மையைப் பகிரங்கப் படுத்தவே இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

இன்னைக்கு தமிழ் திரையுலகில் கொடி கட்டிப்பறக்கும் முன்னணி நடிகை மதுமிதா யார் தெரியுமா?

அவள் என் மனைவி.

இந்தத் தகவல் உங்களுக்கு அதிர்ச்சியாக இருக்கலாம். ஆனால் இது உண்மை.

எனக்கும் மதுமிதாவிற்கும், அவள் திரையுலகில் நுழைவதற்கு முன்பாகவே ஹைதராபாத்தில் திருமணம் நடந்தது.

அந்தத் திருமணத்திற்கான ஆதாரங்கள். என்னிடம் உள்ளன. இத்தனை வருஷம் சும்மா இருந்து விட்டு இப்போது இதை ஏன் வெளிப்படுத்துகிறேன் என்று உங்கள் மனதில் ஒரு கேள்வி எழலாம்.

இது போல இன்னும் நிறையக் கேள்விகள் உங்கள் மனதில் தோன்றலாம். உங்கள் எல்லாக் கேள்விகளுக்கும் நான் முறையான விளக்கம் தர தயாராக இருக்கிறேன்.

நான் தற்சமயம் சென்னையில் கீழ்க்கண்ட விலாசத்தில் தங்கியிருக்கிறேன். தாங்கள் உங்கள் பத்திரிகையின் நிருபர் ஒருவரை அனுப்பி வைத்தால் விரிவாகப் பதில் சொல்லத் தயார்.

தமிழில் தங்கள் சினிமாப் பத்திரிகை ஒரு முன்னணிப் பத்திரிகை என்பதால் இந்தக் கடிதம் உங்களுக்கு மட்டும் எழுதியிருக்கிறேன்.

பிறகு ஒரு பத்திரிகையாளர்கள் சந்திப்பை ஏற்பாடு செய்து எல்லாப் பத்திரிகைகளுக்கும் பேட்டி கொடுக்கத் திட்டமிட்டுள்ளேன்.

நன்றி
இப்படிக்கு,
வெங்கடரெட்டி.

காசிநாதன் உற்சாகமாகக் கடிதத்திலிருந்து நிமிர்ந்தான்.

"நான் இப்பவே போய்ப் பார்க்கிறேன் சார். இந்த ஆதாரங்கள் உண்மையா இருந்தா அடுத்த இதழ்ல அட்டைப்படக் கட்டுரையா இதைப்போட்டு பர பரப்பா இண்டஸ்ட்ரியையே கலக்கிடலாம் சார்" என்றான்.

"உடனே போய்ட்டு வாங்க" என்றார் எடிட்டர்!

(தொடரும்)

## பட்டுக்கோட்டை பிரபாகர்

> "உங்கள் கடிதங்களில் காதல் கடிதங்களும் இருக்கும் இல்லையா?"
> "இருக்கும். ஒரு கிளாமர் ஹீரோயினுக்கு அந்த மாதிரி வருவது சகஜமே. அது ஆனந்தத்தை ஏற்படுத்தும். ஆனால் சில காதல் கடிதங்களில் உள்ள காதல் வாக்கியங்கள் சொல்ல முடியாத வெட்கத்தைக்கூட ஏற்படுத்தும்."
> நடிகை ரம்பா ஒரு பேட்டியில்... 'பேசும்படம்' ஜூலை 97 இதழில்...

# நில்-கவனி-முன்னேறு

## கவியரசு கண்ணதாசன்

சாக்காட்டின் அடிவாரத்திலே... எண்ணங்களற்ற இன்ப உலகத்திலே, போட்டி, பொறாமைகளற்ற பொதுவுடைமை பூமியிலே.... நீங்காத் துயில் மடுத்திருக்கும் எங்களை, மானிட ஜாதியே! நீ மறந்து விடாமல் இருப்பாயாக!

உயிரோடு உயிராகக் கலந்து உறவாடிக் கொண்டிருந்த எங்களை, இதயத்தில் மாறி மாறி இடம் பெற்றுக் கொண்டிருந்த எங்களை, சதி மனம் படைத்த தன்நலக்காரர்களால் சாய்த்துக் கிடத்தப்பட்ட எங்களை, ஏ மனித சமுதாயமே! நீ யுகயுகாந்திரங்களுக்கு மறந்துவிடாமல் இருப்பாயாக!

காற்றிலேறி விண்ணிலே பறந்தோம், கண்களைக் கட்டி மண்ணிலே தவழ்ந்தோம். நாற்றிடைத் தென்றல் நடிப்பது போலே, நலமிகும் காதலில் மனமகிழ்வுற்றோம். களங்கமனத்தினர் ஆசைகட்காக காதலர் நாங்கள் சாவினை அடைந்தோம். இலட்சிய வாதிகளுக்கு கோபுரம் கட்டும் நல்ல மனிதர்களே! காதலும் ஒரு இலட்சியம் தான் என்பதை மறந்து விடாதீர்கள்!

போரிலே மாண்டால்தான் வீர சுவர்க்கம் போகலாம் என்பீர்களே, நாங்கள் இருப்பதும் வீரசுவர்க்கம்தான் என்பது இன்னும் இங்கு வராத உங்களுக்குத் தெரியுமா?

இதோ லைலா! இதோ கயஸ்! இதோ அம்பிகாபதி! இதோ அமராவதி! ரோமியோ! ஜூலியட்! சீசரும் இங்கே தான் இருக்கிறான். கிளியோபாத்ரா எங்கள் பக்கத்தில்! எல்லாரும் இங்கே தான். இன்னும் சாகாதவர்களே?

வீரசுவர்க்கம் என்றால் சரித்திரம் என்பது உங்களுக்குத் தெரியுமா?

படித்த சரித்திரத்தையும் மறந்துவிடும் பரிதாப ஜென்மங்களே! ஆடவர் பலருண்டு, அழகியர் மிக உண்டு அவனியில்; எனினும் ஒருவருக்கொருவர் என்கிற உறுதியை உயிர்போகும் வரையில் கடைப்பிடித்த எங்களை ஒவ்வொரு விநாடியும் நினைத்துக் கொண்டிருப்பீர்களாக!

மேகம் குவிந்தால் மயில் ஆடுகிறது; மரங்கள் அசைந்தால் குயில் பாடுகிறது; வசந்தத்தின் வரவை நாணல் தலை சாய்த்து வரவேற்கிறது. மலர்ந்திருக்கும் சோலைக்கு வண்டு அழைப்பில்லாமலே வருகிறது. சுவையோடு இசை பிறந்தால் கருநாகம்கூட அசைவற்றுப் போகிறது. ஞானமுள்ளவன் விரல் பட்டால் வீணையிலே நல்லிசை எழுகிறது. சமுத்திரத்திலே நிறைய நீர் இருந்தாலும், சக்ரவாகப் பட்சி பனித்துளியைத்தான் நாடுகிறது. தினசரி நிகழும் இவையெல்லாம் எங்கள் காதலை உங்களுக்கு நினைவூட்டவில்லையா?

அன்பு மலை முகட்டில், இன்பக் கடலடியில், ஆசை நதிப்பெருக்கில், காதற் பூங்காவனத்தில் எங்கெங்கு நோக்கினும் அங்கெல்லாம் எங்கள் உருவம் தோன்றவில்லையா?

ஓ! உறக்கத்திலிருப்பவர்களே! எங்கள் குரல் உங்கள் காதுகளில் விழவில்லையா?

அறுபட்ட காற்றாடிபோல் அலைந்து, மரம்விட்ட இலைபோல மறைந்துவிடும்



மக்கள் கூட்டமே! எங்களைப் பாருங்கள்; நாங்கள் சொல்வதைக் கேளுங்கள்!

வசந்தம் உங்களைத் தழுவ வரும் போது, அசந்த நிலையில் அதை அணைத்துக்கொள்ளுங்கள்.

மாமழை உங்களைச் சுற்றி விழும் போது, மாளிகையோ, மண் குடிசையோ, 'ஒருவர் உடலில் ஒருவர் ஒதுங்கி, இருவர் எனும் தோன்றலின்றி' இன்பங்காண விழையுங்கள்.

ஆடவரெல்லாம் அழகியரின் தலை கோதி மெய்சிலிர்த்திருங்கள்; அழகியரெல்லாம் ஆடவரின் மார்பில் சாய்ந்து மனம் குளிருங்கள்.

போட்டி உங்களுக்கு வேண்டாம். பொறாமையை மறந்து விடுங்கள். சண்டைக்கு வேறுகளம் வேண்டாம். காதற் களம் போதும். சச்சரவுக்கு நேரமில்லாமல் காதல் அளியுங்கள். கண்ணீர் வரட்டும்; ஆனந்தத்தில் மட்டும்! கவலை என்று அழுபவனைப் பார்த்துச் சிரியுங்கள். மண்ணகத்திலே வாழுகின்ற போதிலும் உங்கள் கன்னத்திலே கணந்தோறும் களிப்புச் சிந்தட்டும். இன்பம் கொள்ளுங்கள். எக்காளமிடுங்கள். நாளைக்கு நாம் போவது உறுதியென்றாலும், இந்த வேளையிலே சுகமிருப்பது உறுதி என்று நினையுங்கள்

பொழுது போய்க்கொண்டிருக்கிறது. பகல் நடந்துவிட்டது. மாலை வந்து விட்டது. இதோ தென்றல்! ஆகா! இன்பமயமான தென்றல்! கவலைகளை மறைப்பதற்கு 'மணமுடி' கொண்டு வரும் தென்றல்! இதோ வந்துவிட்டது.

ஓ, தோழரே! தோழியரே! தயாராகிக் கொள்ளுங்கள்! பஞ்சணையில் மலர் தூவுங்கள்! சன்னல்களைத் திறந்து வையுங்கள். வீணை எங்கே? மெல்லியரே எடுத்துக் கொள்ளுங்கள்! மீட்டுங்கள்! பாடுங்கள்! காதல் கீதம் பாடுங்கள். வீரர்களே கேளுங்கள்! உங்கள் செவிகளிலே, தேன்மாரி செய்த தீஞ்சுவைக் கனியைத் தழுவத் தாவுங்கள்! அவசரம் வேண்டாம். மெல்ல வாருங்கள். வீணையை வாங்கித் தரையிலே வையுங்கள்.

பூங்கரம் பற்றி புளகாங்கிதம் பெறுங்கள். அருகிலே அணைத்தபடி அணையருகே செல்லுங்கள். கட்டிலுக்கு வலிக்காது. ஆனாலும் மெதுவாக அமருங்கள். காதற் புறாக்களே! கதவை மூடி விடுங்கள்!

நீலங்கரைத்த வானிலே, கோலங் குழைத்து வந்திருக்கிறது வெண்ணிலா! அது நடந்து வந்த வேளையில் விழுந்து விட்ட வைரங்கள் பொறுக்குவாரில்லாமல் கிடக்கின்றன.

ஓ! காதலரே! இவற்றை நீங்கள் காண முடியாது! ஆனாலும், கதவைத் தாழிட்ட கட்டழகரே! இவற்றின் நினைவே எங்களுக்கு வராது!

சுவையாகச் சுவையாக இரவு போய் விட்டது. பொழுது விடிந்து விட்டது.

கண்ணாடி மேனியரே! நீங்கள் வெளி உலகத்திற்கு வாருங்கள்!

இதுதான்-பகல்தான்... இப்போது காண்பதுதான்- உலகமா? இல்லை...

நிச்சயமாக இல்லை.

இரவு நீங்கள் கண்டீர்களே! அது தான் உலகம்! அதுதான் உண்மையான உலகம்...

பகல், வெறும் கனவு!

நீங்கள் விரும்பினாலும், விரும்பா விட்டாலும் தினசரி வரும் கனவு!

கனவைப் பொறுமையோடு போக விடுங்கள்.

மாலை வரட்டும்... ஆகா! மாலை வரட்டும்!...

மீண்டும் தென்றல் வரும்... வரும்... வரும்.... தடையில்லாமல் வந்து கொண்டேயிருக்கும்.

ஓ, மானிட ஜாதியே! எங்கள் குரல் உன் காதுகளில் விழுந்ததா?



படிப்பகம்

www.padippakam.com

# புகுந்த நேரம்

**...கவிதா அழுதுகொண்டே துணிமணிகளை சூட்கேஸில் அடைத்துக்கொண்டு கணவனோடு புறப்பட்டாள்...**

**தி**யாகு-கவிதா திருமணம் சிறப்பாக நடந்து முடிந்தது.

பத்து நாட்கள் எடுத்த லீவு கரைந்த பிறகு, ஆபீஸ் புறப்பட்டான் தியாகு.

கவிதா வாசல்வரை வந்தாள்.

"கவிதா...! நான் வரட்டுமா...?"

உதடுகளில் சிரிப்பைத் தந்து தலையாட்டினாள்.

"உனக்கு என்ன வேணும்?"

"இந்த அன்பு எப்பவும் வேணும்..." தியாகு சிரித்தான்

"சரி... என்ன வாங்கி வரட்டும்?"

"எதுவுமே வேண்டாம்... வீண்செலவு!"

"வரட்டுமா...?" தியாகு கையசைத்து ஸ்கூட்டரில் அமர-



கவிதா, அவன் ஸ்கூட்டர் தெருக்கோடியில் வளைந்து மறையும்வரை, பார்த்துக் கொண்டே இருந்தாள்.

***

**க**தவு தட்டப்பட

தியாகுவின் அம்மா ஜெகதாம்பாள் கதவைத் திறந்தாள்.

வாசலில் புதிதாக ஒருவன் நின்றிருந்தான்.

அவனிடம் படபடப்பு தெரிந்தது.

"நீ யாருப்பா...? என்ன வேணும்...?"

"இது தியாகு வீடுதானே...?"

"ஆமா..."

"டி.பி.எஃப்.கம்பனியில் அக்கவுண்டண்ட்டா இருக்கற தியாகு வீடுதானே இது...?"

ஜெகதாம்பாள் பதறினாள்.

"ஆமாப்பா... விஷயத்தைச் சொல்லு...?"

அவன் தயங்கித் தயங்கிச் சொன்னான்:

"கொஞ்ச நேரத்துக்கு முன்னால... ஒரு பஸ்ஸுக்கு அடியில கச கசன்னு கிடக்கு..."

சமையல் அறையிலிருந்து ஓடி வந்தாள் கவிதா.

"அவருக்கு... என்னங்க ஆச்சு..?"

"தெரியலேங்க...."

கவிதா தவிப்போடு கேட்டாள்,

"இப்ப... அவர் எங்கேங்க...?"

"பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு போயிருக்காங்க..."

வந்தவன் ரோட்டில் இறங்கி மறைய- பக்கத்து வீடுகளிலிருந்து வந்தவர்கள் கூட்டமாக மொய்த்தார்கள்.

"ஜெகதாம்பா...! தியாகுவுக்கு என்னாச்சு..?"- ஆளுக்கு ஆள் கேட்க-

தலையில் அடித்துக் கொண்டு புலம்பினாள் ஜெகதாம்பாள்.

"அய்யோ! எம் மகனுக்கு என்ன ஆச்சோ...? கல்யாணம் பண்ணி வெச்சு பத்துநாள்கூட ஆகலையே...? இந்த மகராசி வந்த நேரம், எம் பையனை முழுசா தூக்கி முழுங்கிட்டாளே?... பாவி! இப்படி ஆகும்னு தெரிஞ்சிருந்தா, கல்யாணம் பண்ணி வெச்சிருக்க மாட்டேனே? இவள் எம் மகனுக்கு மனைவியா வரலே... எமனா வந்திருக்கா!... இப்ப நான் என்ன பண்ணுவேன்?" ஜெகதாம்பாள் புலம்பப் புலம்ப-

**விஜயாலயன்**

கவிதா அதிர்ச்சியால் அப்படியே விறைத்துப் போனாள்.

ஜெகதாம்பாளும் கவிதாவும் மருத்துவமனையை அடைந்தபோது, ஒரு நர்ஸ் எதிர்ப்பட்டாள்.

கவிதா பொங்கி வரும் அழுகையில் கேட்டாள்:

"சிஸ்டர்! தியாகுன்னு ஒருத்தர்... கொஞ்ச நேரம் முன்பு ஸ்கூட்டர் விபத்துல அடிபட்டு... இங்க அட்மிட் ஆகி இருக்கார். அவர் எந்த ரூம்...?"

"மாடியில.... அறுபதாம் நெம்பர்..."

வெள்ளை உடை சொல்லிக் கொண்டே போக-

இருவரும் படிகளில் தடதடத்து- அறைக்குள் நுழந்தபோது-

டாக்டர் வெளியேறிக் கொண்டிருந்தார்.

தியாகு கட்டிலில் சாய்ந்து கொண்டிருந்தான்.

இருவரையும் பார்த்ததும், புன்னகைத்தான்.

ஜெகதாம்பாள் பதறலுடன் கேட்டாள்:

"ஏப்பா... தியாகு! உனக்கு ஒண்ணும் ஆகலையே...?"

தியாகு சிரித்தான்.

"இல்லம்மா... எனக்கு எதுவும் ஆகலே. ஸ்கூட்டர்ல போறப்போ திடீர்னு ஒரு ஸ்கூல் பையன் உள்ள வந்துட்டான். ஒடித்துத் திசையை மாத்தறதுக்குள்ளே, ஸ்கூட்டர், பஸ் மேல மோதி தூக்கி எறியப்பட்டேன். லேசா தோள்பட்டையில் சிராய்ப்புத்தான். ஆனா... ஸ்கூட்டர்தான் பஸ்ஸுக்குள்ளே சிக்கிடுச்சு..."

"போனாப் போகட்டும்ப்பா... நீ நல்லபடியா பிழைச்சியே...? அந்த முருகனுக்குத்தான் நன்றி சொல்லணும்..."

"ஏங்க! வேறு எந்தத் தொந்திரவு ஒண்ணும் இல்லையே...?"- கவிதா விழிநீரோடு கேட்க-

இரகசியமாய்க் கண்ணடித்தான் தியாகு.

"ஐ'ம் ஆல்ரைட் கவிதா. இன்னும் ஒரு மணி நேரத்துல நம்ம வீட்டுக்குப் போயிடலாம்..."

கவிதாவின் நெஞ்சுக்குள் நிம்மதி வந்து உட்கார, கண்களில் தேங்கிய நீர் கரைந்தது.

ஆட்டோவிலிருந்து மூவரும் வீட்டிற்குள் நுழைந்தபோது-

பின்னாலேயே ஒரு குரல் கேட்டது

"சார்....! தந்தி...."

"தந்தியா...? என்ன தந்தி...?" என்றவாறே கையெழுத்துப் போட்டு வாங்கிப் பிரித்தான் தியாகு.

படித்துவிட்டுச் சோகத்தோடு நிமிர்ந்தான்.

"என்னங்க தந்தி...? யார் குடுத்திருக்காங்க...?" என்றாள் கவிதா.

"ஸாரி... கவி! உங்கப்பா ஹார்ட் அட்டாக்ல இறந்துட்டாரு..."

"அப்... அப்...பா... ஆஆஆ!"- என்று அலறினாள் கவிதா.

தியாகு அம்மாவிடம் திரும்பினான்.

"அம்மா! நானும் கவியும் போயிட்டு வந்திடுறோம்..."

"சரிப்பா..."

பத்து நிமிஷத்தில் கவிதா அழுது கொண்டே துணிமணிகளை சூட்கேஸில் அடைத்துக் கொண்டு, கணவனோடு புறப்பட்டாள்.

ஜெகதாம்பாள் எதிர்ப்பட்டாள்.

"அத்தை...! போயிட்டு வர்றேன்..."

"சரிம்மா..."

விழிநீரைத் துடைத்துக்கொண்டு நிமிர்ந்தாள் கவிதா.

"அத்தை...! போறதுக்கு முன்னால, உங்ககிட்டே ஒரே ஒரு கேள்வி?.. நான் இந்த வீட்டுக்கு வந்த நேரம், உங்க மகன் ஒரு விபத்துல சிக்கி... முருகனருளால தீனமா உயிர் பிழைச்சிட்டாரு... ஆனா... உங்க மகன் எங்க வீட்டுக்கு மருமகனா வந்த நேரம், எங்கப்பா அல்ப ஆயுசுல போயிட்டாரேன்னு எங்கம்மா எங்கிட்டே கேட்டா... அதுக்கு நான் என்ன பதில் சொல்லட்டும்... அத்தை...?"

'தட்டீர்' என்று கன்னத்தில் அறை விழுந்ததைப்போல் நிமிர்ந்தாள் ஜெகதாம்பாள்.

தியாகு ஒன்றும் புரியாமல் மனைவியைப் பார்த்தான்.

"உங்களுக்கு எதுவும் புரியலே இல்லே? எதுவும் புரிய வேண்டாம்! வாங்க..." என்று தியாகுவை இழுத்துக்கொண்டு நடக்க ஆரம்பித்தாள் கவிதா. ■

# அலைச்சல்....

**வெ**ளிநாட்டு முகவரின் வீட்டு வரவேற்பறையில் சிவானந்தமும் மனைவி கற்பகமும் அவரின் வரவுக்காகக் காத்திருந்தனர்.

"பத்து நிமிடம் வெயிற் பண்ணுங்க! அப்பா வந்துவிடுவார்!" என முகவரின் மகள் சொல்லிவிட்டுச் சென்று பல பத்து நிமிடங்கள் கரைந்து விட்டிருந்தன.

சிவானந்தமும் கற்பகமும் இருந்த இடத்திலேயே இருந்துகொண்டிருந்தனர்.

மகனை வெளிநாட்டுக்கு அனுப்பத் தொடர்பு கொண்டதிலிருந்து கடந்த இரண்டு வருடங்களாக இந்த வீட்டு வாசலில் காத்திருப்பது அவர்களுக்கு வழமையாகிவிட்டது.

பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்காக காசையும் கொடுத்துவிட்டு, அவர்களது வீட்டுவாசலில் தமது காலத்தையும் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தை வீணடிப்பதும் இன்றைய சமுதாயத்தின் பிரதான வேலையாகிவிட்டது.

சிவானந்தமும் கற்பகமும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். இந்த முகவரினூடாக மகனை கனடாவுக்கு ஒரு தடவை அனுப்பி

**மு.கலை**

மகன் திரும்பி வந்ததிலிருந்து இம்முகவரின் வீட்டுக்கு அலைந்து திரிந்துகொண்டிருக்கிறார்கள்.

முதற்தடவை கடனா சென்று மகன் திரும்பியதிலிருந்து இன்றுவரை ஆறு இலட்சம் ரூபா செலவாகியிருந்தது. காசுமட்டுமல்ல காலமும் கரைந்து போயிருந்தது.

இழந்த தொகைய மீளப் பெற வேண்டுமாயின் மகனை வெளிநாட்டுக்கு அனுப்பியே ஆகவேண்டும் என்பதில் உறுதியாக சிவானந்தம் இருந்தார். அதனால்தான் சிவானந்தத்திற்கு இவ்வளவு பொறுமையும் சகிப்புத் தன்மையும் ஏற்பட்டிருந்தது.

ஏற்கனவே இழந்த தொகையில் ஒரு பகுதி கடன்பட்டுத்தான் அனுப்பியிருந்தார். மீள அனுப்புவதற்கும் காசு கட்டவேண்டியிருந்தமையினால் மேலும் கடன் பட்டிருந்தார்.

"நீங்கள் வருகிற திங்கட்கிழமை வாங்க. உங்கடை மகனை அனுப்பி 'பிளைற் ரிக்கற்' செய்து வைச்சிருப்பன். நீங்கள் பயண ஒழுங்கைச் செய்யுங்க," என கடைசியாக சந்தித்தபோது முகவர் சொல்லியிருந்தார்.

இந்த வார்த்தையில் துளிகூட நம்பிக்கை கிடையாது. முகவர் எல்லோருக்கும் வழமையாகச் சொல்லுகிற பதில்தான் அது.

இன்னும் அந்த வார்த்தைகளில் நம்பிக்கை இல்லாதபோதிலும் 'முருகா! இண்டைக்கு எங்களுக்கு நல்ல பதில் கிடைக்க வேணும்' என கற்பகம் தனது குலதெய்வத்தை வேண்டிக்கொண்டபோது, முகவர் தனது அலுவலக அறைக்குள் வந்தார்.

"இன்டைக்கு இரவு பத்து மணிக்கு உங்க மகனுக்கு பிளைற்," என முகவர் சொன்னதை நம்பமுடியவில்லை.

"இதோ! பிளைற் ரிக்கற்," என முகவர் அவர்களிடம் காட்டியபின்தான் நம்பினார்கள். மகிழ்ச்சியின் எல்லைக்கு இருவரும் சென்று விட்டனர்.

'முருகா! இந்தத் தடவை என்ரை பிள்ளை வெளிநாடு போய்ச் சேர்ந்தால், உனக்குப் பொங்கல் வைக்கிறன்,' என கற்பகம் மனதிற்குள் நேர்த்தி வைத்தாள்.

"இந்தத் தடவை எந்தப் பிரச்சனையுமில்லாமல் உங்கடை மகன் கனடா போய்ச் சேருவார். இன்னும் கட்டவேண்டிய தொகையைக் கட்டிட்டு பயணத்துக்கு ஆயத்தமாக வாங்க," என முகவர் சொல்லி



முடிப்பதற்குள் கொண்டுவந்திருந்த காசை சிவானந்தமும் கற்பகமும் வைத்துவிட்டு வெளியே வந்தனர்.

இன்றுடன் அலைச்சலுக்கு முடிவு கிடைத்துவிடும் என்ற சந்தோசம் எழுந்து நின்றபோதிலும் 'போன தடவை போல இடையில் திரும்பிவந்து விட்டால்' என்ற பயமும் ஓர் மூலையில் உறுத்திக்கொண்டிருந்தது.

தங்கியிருந்த விடுதிக்கு வந்து சேர்ந்தனர்.

"இண்டைக்கு இரவு பத்து மணிக்கு என்ரை மகனுக்கு பிளைற்!" என வாசலில் நின்ற, அவர்களது ஊரைச்சேர்ந்த ஒருத்தரிடம் சொன்னாள் கற்பகம்.

அந்நபரிடமிருந்து பிரதிபலிப்பு எதையும் காணவில்லை. அதை உணர்ந்த கற்பகம் "என்ன ஒருமாதிரியா இருக்கிறியள்? நான் சந்தோசமான விசயம் சொல்லுறன் நீங்க பேசாம இருக்கிறியள். ஏதாவது எங்களோடை கோபமோ?" என்றாள்.

வார்த்தைகளை மென்று விழுங்கி அந்நபர் வெளியிட்டார்.

"லொட்ஜுக்கு வந்த பொலிஸ் உங்கடை மகனை சந்தேகத்தின் பேரில் பிடிச்சுக் கொண்டு போட்டினம்!"

இருவரினது நெஞ்சமும் தீப்பற்றியது.

இதுவரை வெளிநாட்டுக்கு மகனை அனுப்புவதற்கு அலைச்சல். இனி பொலிஸிலிருந்து மகனை வெளியே எடுக்க அலைச்சல்....! ●

# என் வீடு

**அ**ந்த வீட்டின் படிகளில் ஒவ்வொன்றின்மீதும் கால் வைத்து ஏறும்போது, சந்தோஷமும், புத்துணர்ச்சியும் பொங்கின. தன்னுடன் தன் கணவன் திவாகர் வருவதற்கும் மேலான ஒரு மகிழ்ச்சி ஆர்ப்பரித்தது- கீதாவிற்கு. இருபத்தியொரு வருடம், பிறந்ததிலிருந்து இந்த உலகை அணுஅணுவாக இரசித்த இடம்... கீதாவின் பிறந்த வீடு.

"வாம்மா... கீதா... வாங்க மாப்பிள்ளை...."- வரவேற்பறையில் புத்தகம் படித்துக்கொண்டிருந்த கீதாவின்



அப்பா நடராசன் வாய் நிறைய வரவேற்றார். சமையலறையில் வேலையாயிருந்த லட்சுமி சத்தம் கேட்டு வந்தவள், மகளை- கண்டதும் மகிழ்ச்சிக் கடலில் தொப்பென விழுந்தாள்.

"பிரயாணம் சவுகரியமாக இருந்ததா மாப்பிள்ளை?"- நடராசன்.

"எல்லாம் நல்லபடியாக இருந்தது மாமா?" எனச் சொல்லிவிட்டு திவாகர் மாடிக்குச் சென்றுவிட்டான்.

"ஏம்மா, அண்ணி மைதிலி எங்கே காணோம்?"- கீதா தேடலாகக் கேட்டாள்.

அவங்க அம்மா வீட்டுக்குப் போயிருக்கிறாளம்மா.... நாளையோ, நாளன்னிக்கோ வந்துடுவா... சும்மா பார்த்துட்டு வரேன்னு சொன்னா... உங்க அண்ணன் திலகத்தான் கொண்டு விட்டுட்டு வந்தான்."

"அண்ணனும் வரலையா... இல்லை அவர் வந்துட்டாரா?"- கீதாவின் கேள்விக்கு, "அவன் அப்பவே வந்துட்டானம்மா. வெளியே போயிருக்கான் போல," என்றது அம்மா லட்சுமியின் பதில்.

"சரி வாம்மா... குளிச்சிட்டுச் சாப்பிடலாம்..." என்றபடி சமையலறைக்குள் போனாள் லட்சுமி. கீதா மாடிக்குப்போனாள்.

"**வ**ந்து நாலு நாள் ஆகுது... என்னப்பா, அண்ணியைக் காணோம்! அவரும் ஊருக்குப் போயிட்டதனால்... ரொம்ப போரடிக்குது... அண்ணி இருந்தால் அவ்ங்ககூட சுத்தலாம்... அரட்டையடிக்கலாம்... சொந்தக்காரங்க கூட எல்லாம் பேசிட்டு வரலாம்... என்னாச்சு அண்ணிக்கு? இரண்டு நாளில் திரும்பிவாறேன்னு சொன்னாங்களாப்பா?" கீதாவின் கேள்வி... நடராஜனுக்கு மருமகள் மைதிலி மேல் கோபத்தை வரவழைத்தது.

மாலை:

முன் அறையில், புத்தகம் படித்துக் கொண்டும், அப்பா சொன்ன பெரியபுராணக் கதைகளை கேட்டுக் கொண்டும் இருந்த

**உ. மோகன்ராஜ்**

கீதா, வாசலில் ஆட்டோ சத்தம் கேட்டு எட்டிப் பார்த்தாள். 'ஹை....ஹை அண்ணி மைதிலி.'

"அண்ணி...." என்றபடி எழுந்து ஓடிச்சென்று, அண்ணியை போய்க் கட்டிப் பிடித்துக்கொண்டாள். அண்ணியின் தோளை அணைத்தபடி படியேறி கூட்டிக் கொண்டு முன் அறைக்கு வரும்போது, அப்பா நடராசன் தன் மருமகளை 'வா' என கேட்கவில்லை; மைதிலியை ஊடுருவிப் பார்த்தார்.....

"என்னம்மா... மைதிலி! ரெண்டு நாளில் திரும்பிடுறேன்னு சொல்லிட்டுப் போனவள்... ஐந்து நாளாச்சு.. இப்ப வந்திருக்கிறே?"- கேட்டார் நடராசன்.

"மாமா... சொந்தக்காரங்க வீட்டுக்கெல்லாம் அப்படியே போயிட்டு வந்தேன்.... அம்மா ரெண்டு நாள்கூட இருந்துட்டுப் போகணுமின்னு சொன்னாங்க... அதான்..." மைதிலியின் குரலில் பயமும், மரியாதையும் இருந்தன.

"உங்கம்மா... உங்க வீட்டில் இருந்துட்டுச் சொல்லுவாங்க... ஆனால்... உனக்குத்தான் தெரியணும், இங்கே இருக்கிற நிலைமை... லட்சுமிக்கு அடுப்புப் புகைச்சல் பிடிக்காது. அவளுக்கு இன்னும் ரெண்டு மாசத்தில் கண் ஆபரேஷன் வேறு பண்ணணும்... போன இடத்தில் உனக்கு எங்களையெல்லாம் - மறந்துடுமோ?"- நடராசனின் வார்த்தைகள் வெப்பத்தில் தோய்ந்து விழுந்தன.

மைதிலி தடுமாறிப் போனாள்.

கீதா மைதிலியை அணைத்துக் கொண்டாள். "அப்பா... ஏதோ போன இடத்தில் தாமதம் ஏற்பட்டிருக்கலாம்.... அண்ணிக்கு நம்ம வீட்டு நிலைமை தெரியாமல் இருக்குமா? - விடுங்கப்பா.... நீங்க வாங்க அண்ணி..." என வீட்டினுள் அழைத்துக் கொண்டு போனாள்.

மைதிலி, கண்களில் நீர் ததும்ப, உள்ளே சென்றாள்.

மறுநாள்:

காலையில், முன் அறையில், ஷேவ் செய்து கொண்டிருந்த நடராசன், கீதா பெட்டியுடன் புறப்பட்டு வருவதைப் பார்த்து அதிர்ந்தார்.

"என்னம்மா, பெட்டியும் கையுமா? எங்கே புறப்பட்டு விட்டாய்?" எனக் கேட்டார்.

"அப்பா, நான் வந்து இன்னியோட அஞ்சு நாளாச்சு... நேத்து நீங்க அண்ணியை திட்டினதைக் கேட்டுட்டு, எனக்கு மனசுக்குள்ளே... என்னவோ சிந்தனை. அதான் ஊருக்குப் போகப்போறேன் அப்பா!" என்றாள் கீதா.

"கீதா, அண்ணியைத் திட்டிட்டு, நான் கோபப்பட்டேன் என்கிறதுக்காக, நீ ஏம்மா இந்த வீட்டை விட்டு போகணும்? அவ கிடக்கிறாள்... இன்னிக்கு நம்ம ஊர் தியேட்டரில் புதுப்படம் போட்டிருக்கிறான்... இன்னும் உனக்கு வாய்க்கு ருசியா எதுவுமே செஞ்சு கொடுத்தனுப்பலை... அதுக்குள்ளே, போறேன்னு சொன்னா எப்படி?" நடராசன் பரிவுடன் கேட்டார்.

"இல்லேப்பா... அவங்க இந்த வீட்டுக்கு மருமகள்... அவுங்களுக்கு நீங்க சொன்ன புத்திமதி எனக்கும் பொருந்தும்! ஏன்னா... நான் இன்னொரு வீட்டுக்கு மருமகள் தானே அப்பா? நான் என்னோட மாமியார், மாமனார், கணவர்னு ஒவ்வொருத்தரோட தேவைகளைப் புரிஞ்சிட்டு அதை நிறைவேற்றி அவங்களோட, மகிழ்ச்சியாக வாழறது தான் எனக்கும் நல்லது, உங்களுக்கும் நல்லது! இடையில், அவ்வப்போது நான் உங்களைபார்க்க வரலாம், ஆனால் அது ஒரு நாள் நிகழ்ச்சி போலத்தான் இருக்கணும்ங்கிறதை, நீங்க நேத்து நம்ம அண்ணியை திட்டும்போதே நான் புரிஞ்சிட்டேன்....

"தவிர... நாளைக்கு நான் எங்க வீட்டுக்குப் போகும்போது, என் மாமனாரும் இப்படி என்னை வாசலில் நிறுத்தி வச்சு... கேள்வி மேல் கேள்வி கேட்க மாட்டார்ன்னு நான் நம்ப முடியுமாப்பா? இந்த அஞ்சு நாளிலேயும் எனக்கு ஏற்பட்ட பிறந்த வீட்டு சந்தோஷமே எனக்கு பூரண மகிழ்ச்சிதான் அப்பா... அம்மாகிட்டேயும், அண்ணிகிட்டேயும் சொல்லிட்டேன்... நான் வரேன் அப்பா!"- படிக்கட்டுகளில் இறங்கி நடந்தாள் கீதா. ■

# அடையாளம்

**இ**ன்றும் குடித்து விட்டுத்தான் வந்திருக்கிறான் என்பதை அவனுடைய பேச்சிலிருந்தே நந்தினி புரிந்து கொண்டாள். குமாருக்கு தினமும் குடித்துவிட்டு வருவதே வாடிக்கையாகிப் போயிற்று.

வீட்டில் அப்பா, அம்மா, மாமனார் அவனைவரும் குடிக்காதே என்று சொல்லிப் பார்த்துவிட்டார்கள்! ஆனால் அவன் எதையும் கேட்பதாகத் தெரியவில்லை.

குழந்தைகள் இரண்டும் தூங்கிக் கொண்டிருந்தன. இப்பொழுது அவனிடம் ஏதாவது கேட்டால் சத்தம் போட்டு ஊரைக் கூட்டுவான். குழந்தைகள் இரண்டும் விழித்துக் கொள்ளும், என்பதால் ஒன்றும் பேசாமல் படுத்துவிட்டாள் நந்தினி.

"நந்தினி... எங்க என்னோட டவலைக் காணோம்?"

"ராத்திரியானா நல்ல குடிச்சிட்டு வந்துட வேண்டியது. காலையில எழுந்தப்புறம்தான் பொண்டாட்டி புள்ளைங்க ஞாபகமே வரும்!"

மன்னிச்சிடு நந்தினி. நேத்து ஆபீஸ்ல ஒரு பார்ட்டி. அதான் கொஞ்சம் வர்றதுக்கும் லேட்டாயிடுச்சி."

'அப்படி என்னதான் பார்ட்டியோ? இந்த மனுஷன் எப்போதுதான் திருந்தப் போகிறாரோ?' என்பதை நினைக்கும்போதுதான் நந்தினிக்கு கவலையாயிருந்தது.

"ஏங்க... நாளக்கி எங்க சித்தி பையனுக்கு கல்யாணம். ஞாபகமிருக்கில்லையா? இன்னக்கி சாயந்திரம் போயாகணும். ஆபீஸ்லேருந்து இன்னிக்காவது கொஞ்சம் சீக்கிரம் வாங்க!"

**தி**ருமண மண்டபத்தில் முதல் நாளிரவே ஏகப்பட்ட கூட்டம். குமார் அங்கேயிருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டான். நந்தினி குழந்தைகளுடன் தனக்குத் தெரிந்த உறவினர்களுடன் பேசப் போய்விட்டாள்.



எம்.எஸ்.குருமூர்த்தி

தனக்குத் தெரிந்தவர்கள் யாராவது இருக்கிறார்களா; என்பதை குமார் பார்த்துக் கொண்டிருக்கும் போதுதான் அவனுக்கு பக்கத்து நாற்காலிகளில் அமர்ந்திருந்த பெரியவரும் அவர் மனைவியும் நந்தினியைக் காட்டி ஏதோ சொல்லிக் கொண்டிருப்பதைக் கவனித்தான்.

"ஆமா-ரெண்டு குழந்தைகளோட பச்சைக் கலர் சாரியில அங்கு சிரிச்சுப் பேசிட்டிருக்காளே- யாரு அந்தப் பொண்ணு?" பெரியவர் மனைவியிடம் கேட்டார்.

"அதாங்க... நம்ம பழனிச்சாமியோட பொண்ணு; அந்தக் குடிகாரன் குமாரோட பொண்டாட்டி."

அவர் மனைவி சொன்ன பதிலைக் கேட்டு குமாருக்கு ஒருபுறம் மனதிற்குள் கடுமையான கோபம். மறுபுறம் தன்னைக் குடிகாரனென்று மற்றவர்கள் அழைப்பதை நினைத்து அதிர்ச்சியும் அவமானமும் அடைந்தான்.

அந்த இடத்தில் இருக்கப் பிடிக்காமல் நந்தினியிருக்கும் இடத்தை நோக்கி வேகமாகப் போனான் குமார்.

தன்னையும், குழந்தைகளையும் அவசரமாக திருமண மண்டபத்தை விட்டு வெளியே அழைத்து வந்த கணவனை ஒன்றும் புரியாமல் ஆச்சரியத்துடன் பார்த்தாள் நந்தினி.

தன்னை ஆச்சரியத்தோடு பார்த்த நந்தினியிடம், "நாளையிலிருந்து இன்னொரு ஆச்சரியம் உனக்கு காத்திட்டிருக்கு!" என்று கூறிவிட்டு மனதிற்குள் 'இனிமேல் குடிக்க மாட்டேன்!' என்பதையும் சொல்லிக் கொண்டான் குமார். ■



படிப்பகம்

www.padippakam.com

# நாடு இதை நாடு

இலக்கிய நயம்

தருவது ரசிகன்

ஆடுங்கள்-பாடுங்கள்
ஆனந்தம் கொள்ளுங்கள்!

காளையரே ஓடுங்கள்
காதலியரைக் கூடுங்கள்

காதலியரே ஓடுங்கள்
காதலரைக் கூடுங்கள்!

பொன் நகைக்கு
பஞ்சம் இருந்தாலும்
புன்னகைக்கு
பஞ்சம் இல்லை!

முத்துக்களுக்கு
பஞ்சம் இருந்தாலும்
வெண் முத்து பற்களுக்கு
பஞ்சம் இல்லை!

வைரங்கள்
இல்லை என்றாலும்
வைர நெஞ்சங்கள்
இல்லாமல் போகவில்லை!

வென்றாலும்
நம் புகழ் இருக்கும்!
வீழ்ந்தாலும்
நம புகழ இருக்கும்!

மாற்றான்
கால்பட்டு நம்பூமி
மானம் போக
அவன் கால் தொட்டு
கிடப்பவர்களல்ல நாங்கள்!

உதைக்கின்ற காலுக்கு
ஒரு முத்தம்;
இடிக்கின்ற கரத்திற்கு
பூங் கொத்து;
கொடுக்கின்ற மனிதர்க்கு
இல்லை வெட்கம்!


எழுகின்ற சூரியனாய்
உணர்ச்சி பொங்க
துள்ளிப் பாய்கின்ற கடலாக
வீரம் துள்ள
கொதிக்கின்ற உலையாக
உள்ளம் மாற
அசையாத மலையாக
உறுதி கொள்வோம்!

வீரமும்-காதலும்
மானமும்-நேர்மையும்
நமது கண்கள்!

வாடி என் காதலி
கூடிச் செல்வோம்!
விரியும் போர்க்களத்தில்
ஆடிப் பார்ப்போம்!

எதிரியைப் பந்தாடி
ஓட வைப்போம்!
குருதியைப் பொட்டாக்கி
அழகு பார்ப்போம்!

கோட்டையை
முற்றுகையிட்டிருந்தன
சாளுக்கிய நாட்டு படைகள்!



சோழ மக்கள்
துவளவில்லை! அச்சத்தால்
மாளவில்லை!

வீதிகள் எங்கும்
ஆண்களும், பெண்களும்
ஆர்ப்பரித்துத் திரிந்தனர்!

கொடு ஒரு முத்தம்
காதலன் கெஞ்ச,
குவிகின்ற உதட்டை
கொடுத்து வாங்குவாள்
காதலி ஒருத்தி!

விடும் என் கரத்தை
காதலி கெஞ்ச,
"உன் கரம் விடேன்
என் கரம் விடவோ?"
என்றவன் கேட்டான்!

குறும்பு புரியாமல்;
"சரி விடும்!"
என்பாள்!

அவள் மேனி எங்கும்
அவன் கரம் விடுவான்!
கரம் விடு தூது
சுரம் பல மீட்டும்!

"போடா போக்கிரி
பொல்லாத துக்கிரி"
அவன் கரம் தட்டிவிடுவாள்!

"பேசும் வீணை
நீ எனக்கு!
மீட்டும் விரல்
நான் உனக்கு!"

மன்னனும்
ராணியிடம் கொஞ்சுவான்!

கோட்டை முற்றுகை
கோட்டைக்குள்
காதல் கோட்டைகள்!

விரக்தி இல்லை
அச்சம் இல்லை
குழப்பம் இல்லை!

நகரை
வலம் வந்த புலவருக்கு
பேராச்சரியம்!

சோழனிடம் சென்றார்
வழக்கம் போல்
வரவேற்பு!

"மன்னா! ஆச்சரியம்!
எங்கும் கண்டேன்
பொங்கும் உவகை!
போரும் வாழ்வும்
நகமும் சதையுமானதோ?
இன்பமும், துன்பமும்
இரவும் பகலும்
போலானதோ?"

புலவர் கேள்விகள்
தொடுத்தார்

சோழ மன்னன்
தடித்த மீசைக்குள்
சிரித்தான்!

"பொங்கும் கடலுக்கு
மிரண்டால்
முத்துக் குளிக்க முடியுமா?

வீசும் புயலுக்கு
பயந்தால்
கடலில் இறங்க முடியுமா?

விஷப் பாம்புக்கு
மாண்டால்
தாழம் பூவை கிள்ளமுடியுமா?

வாழ்க்கை என்பதே
சவாலில்தான்
சுவைக்கிறது!

வரலாறு என்பதே
துணிச்சலில்தான்
பிறக்கிறது!

போரை நாங்கள்
கூவி அழைப்பதில்லை!

பேடிகள் என நினைத்து
போரைத் திணித்தால்
கூனி நின்றதுமில்லை!

நாடு பிடிக்கும் ஆசையை
நான் விட்டுவிட்டேன்!
நாட்டை பிடிக்க வந்தால்
நான் எப்படி விடுவது?"

சோழன் விடைகூறி
இறுதியில் வினா போட்டான்!

"சாளுக்கியப் படைகள்
பல நாடுகளை
வென்ற படைகள்
உன் நாடோ
உருக்குலைந்து கிடக்கிறது!

மழையில்லை
அதனால் விளைச்சலில்லை!
உணாவில்லை
அதனால் செழிப்பில்லை!
என் செய்வாய்?"

புலவர் கேட்டார்
சோழன் நகைத்தான்.

"வீதி உலா வந்தீரே
விரக்தியுற்ற முகம்
ஒன்றாயினும் கண்டீரா?"

"இல்லை மன்னா!
கட்டழகுப் பெண்டிரும்
கட்டிளம் காளையரும்
காதல் விளையாடுகிறார்.

பொக்குவாய்க் கிழவரும்
பொங்கு நகை சிறுவரும்
துள்ளித் திரிகின்றார்.
'அஞ்சாத மக்கள் இவர்
மிஞ்ச யார் உளர்'
என்று வியந்தேன் நான்!"

சோழன் மீசை
பெருமிதத்தில் துடித்தது!
உடைவாளை
ஒரு கரத்தால் வருடினான்!

"நாடு என்றால்
என்ன அர்த்தம்
என்று தெரியுமா?"

புலவர் புருவம்
உயர்த்தினார்.

சோழன்
விளக்கம் கூறினான்.

"பகைவரால்
கெடுக்கப்படா முடியாத
மன உறுதியும்,
கெட்டுப் போனாலும்
மன வளம் குன்றாமல்
மண் வளம் மாறாமல்
மீண்டும் கிளர்ந்தெழும்
பட்டுப்போகாத வீரமும்
படைத்த நாடே
நாடுகளில் சிறந்த நாடு!"

சோழன் சொன்ன
சிறந்த நாட்டு இலக்கணம்
திருக்குறளிலும் உண்டு.

"கேடறியாக் கெட்ட விடத்தும்
வளங் குன்றா
நாடென்ப நாட்டின் தலை!"
அதிகாரம் 74. குறள்: 736

---

# சிந்தியா பதில்கள்

"தெரியுமே! 'பிராய்லர்' என்று சொல்லுவோமே- அதுதானே!"

"ஆமாம். அதுவேதான், இப்போது நான் கேட்பது என்னவென்றால், ஒரு நெருப்புக் கோழியை கறிக்கோழியாக மாற்றமுடியுமா?"

"அது எப்படி முடியும்? அது வேறு, இது வேறுதானே!"

"முடியும்!"

"எப்படி?"

"நெருப்பை தண்ணியிலே நனைத்தால் கரியாகிவிடுகிறது. அதனால் நெருப்புக் கோழியை தண்ணிரிலே நனைத்தால் கறிக் கோழியாகிவிடும்."

○ ◌

★ அமெரிக்காவின் இராணுவ நிபுணர்கள் பயிற்சி அளிக்க வருகிறார்களாமே?

தே. கிஷோர், திருமலை.

எப்போது போனார்கள் வருவதற்கு? போவதாகப் பாவ்லா காட்டிவிட்டு இங்கு தான் குந்தியிருக்கிறார்கள்.

○ ◌

★ சிந்தியா! சரியான விஷயங்களை தவறாகப் புரிந்துகொண்டால் என்னாகும்?

பி. மணிவாசகம், கண்டி.

ஒரு மாணவன் தன் தந்தையிடம் சொன்னான்: "உண்மையும் நேர்மையும் உயர்வு தரும் என்பதை நான் அனுபவ பூர்வமாக உணர்ந்துகொண்டேன்."

"எப்படி?" என்று கேட்டார் தந்தை.

"நான் பர்ட்சையில் கொப்பி யடிச்சேன் என்ற உண்மையை மிக நேர்மையாக என் ஆசிரியரிடம் சொன்னேன். உடனே அவர் என்னை பெஞ்சுமேல் ஏறி நிற்கச் சொன்னார். நான் ஏறினேன். நான் ஏனைய மாணவர்களைவிட உயர்ந்து விட்டேன். உண்மைதான் என்னை உயரவைத்தது!" என்றான் மிக அடக்கமாக!

○ ◌

★ கிடைக்கும் சந்தர்ப்பங்களை அனைவரும் பயன்படுத்துவதில்லை. கோட்டை விட்டுவிடுகிறார்கள். பின்னர் கவலைப்படுகிறார்கள் என்கிறேன் நான். நீர் என்ன கூறுகிறீர்?

வி. ஜெமீமா, பதுளை.

ஆமாம்!

ஒருத்தனைப் பார்த்து அவன் நண்பன் கேட்டான், "வெறிநாய் ஒன்று உன்னைக் கடித்தால் என்ன செய்வாய்?"

"உடனே பேப்பரும், பேனாவும் கேட்பேன்!" என்றான் அவன்.

"ஏன் உயில் எழுதுவதற்கா?" என்றான் நண்பன்.

"இல்லை. நான் யார் யாரையெல்லாம் கடிக்கவேண்டும் என்று பட்டியல் தயார் பண்ண!"

○ ◌

★ சமீபத்தில் பார்த்ததில் பிடித்த படம் எது?

செல்வி கா. விஜயராணி,
மட்டக்களப்பு.

'மறுமலர்ச்சி!' குடும்பத்தோடு இரசிக்கக் கூடிய, விறுவிறுப்பாக நகரும் படம்!

○ ◌

★ 'முரசு' இங்கே (புங்குடுதீவில்) 25 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. உங்களுக்குத் தெரியுமா?

சி. நிக்சன், புங்குடுதீவு.

நாம் நேரடியாக யாழுக்கு அனுப்பும்போது இந்நிலை இருக்காது! எனினும் விரைவில் விலையைக் கட்டுக்குள் கொண்டுவர முயற்சிப்போம்!

○ ◌

★ காலம், நேரம், சூழல் பார்க்காமல் அவசரக் குடுக்கைகளாக இருப்பவர்களை திருத்த முடியாதா?

என். தனலட்சுமி, வவுனியா.

சிறையில் இருந்து ஒரு எழுத்தாளர் வெளியே வந்தார்.

"என்ன, சிறையில் இருந்தபோதும் ஏதாவது புத்தகம் எழுதினீர்களா?" என்று நண்பர் கேட்டார்.

"எழுதினேன். அதன்பின்னர்தான் வெறுங் காவல் தண்டனையில் இருந்து கடுங்காவல் தண்டனையாக மாற்றிவிட்டார்கள்," என்றார்.

நண்பருக்கு ஆச்சரியம்: "அப்படி என்ன புத்தகம் எழுதினீர்கள்?" என்றார்.

"'சிறையில் இருந்து தப்பிப்பது எப்படி?' அதுதான் புத்தகத்தின் தலைப்பு." என்றார் அந்த எழுத்தாளர்.

○ ◌

★ மட்டக்களப்பிலும், அம்பாறையிலும் வாகனத்தடை வந்ததின் நோக்கம்?

சி. தங்கேஸ்வரன், காரைதீவு.

இயலாமை!

○ ◌

★ காதல், காமம் இரண்டில் சிறந்தது எது?

கே. திவ்வியப்பிரபா, சிலாபம்.

காதலோடு கூடிய காமம்!

○ ◌

★ சிந்தியா! யாரை நம்பலாம் என்றே தெரியவில்லையே?

எம். பூபாலன், மட்டக்களப்பு.

அந்தளவுக்கு காலம் கெட்டுப் போய்க் கிடக்கிறது! ஆனாலும் இன்னமும் மனிதர்கள் இருக்கிறார்கள். தேடிக் கண்டுபிடித்து நம்புங்கள்!

○ ◌

★ உலகில் சிறந்த மதமாக எதனைக் கருதுகிறீர்?

ஆர். ராஜேஸ்வரி, கந்தப்பளை.

மனிதம்!

○ ◌

★ சோனியா காங்கிரஸ் தலைவியாகியுள்ளாரே?

ஏ.ரவி, கொழும்பு-06.

சோறூட்டும்போது இரண்டு தரம் மறுத்துவிட்டு மூன்றாவது தடவை 'ஆ' காட்டும் குழந்தைமாதிரி, மறுத்து மறுத்து ஏற்றுக்கொண்டிருக்கிறார் சோனியா. அடுத்த குறி பிரதமர் நாற்காலி!

○ ◌

★ தொண்டாவின் கொழும்பு வீட்டின் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டம் எதைக் காட்டுகிறது?

ஜி. ரங்கநாதன், மருதானை.




பேரினவாதிகளின் துணிச்சலையும், தமிழ்க் கட்சிகளின் குனியும் போக்கையும்! சுலோக அட்டை ஒன்றில் 'தொண்டா போடா' என்று தமிழில் எழுதி வைத்திருந்தனர். இன்று தொண்டாவுக்கு நாளை தங்களுக்கு என்ற உணர்ச்சி நம் தமிழ்க் கட்சிகளுக்கு வரவில்லைப் பாருங்கள்! 'தானாடா விட்டாலும் தசை ஆடும்' என்பர், அதற்கும் சொரணை என்ற பசை இருக்க வேண்டுமே!

○ ◌

★ மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட உள்ளதாமே?

என். சிவகுமாரன், திருமலை.

எல்லோரும் சர்வசன வாக்கெடுப்பு பூச்சாண்டியைப் பற்றி பேசிக்கொண்டிருந்த போது, 'அது நடக்காது மாகாணசபைத் தேர்தல்தான் வரும்!' என்றது முரசு! இராஜ தந்திரியின் வாய்க்கு சர்க்கரை போடலாம்!

○ ◌

★ பாரதிய ஜனதா கட்சிக்கு ஆதரவு வழங்க ஜெயலலிதா இழுத்தடித்தது நியாயமா?

கே. ஆனந்தன், மட்டக்களப்பு.

அநியாயம்! அநாகரிகம்!

○ ◌

★ சிந்தியா! அறுவை ஜோக் ஒன்று சொல்லுங்களேன்?

சீ. சிநேகா, ஹட்டன்.

"நீங்கள் கறிக்கோழியைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?"



'அன்பே' படத்தில் கரசி

★ கதையைவிட கவர்ச்சியை நம்பும் இயக்குநர்கள் எப்போது திருந்துவார்கள்?

ஏ.எம். பௌசி, கண்டி.

கதையுள்ள படங்கள் கலக்கல் நடத்தும்போது!

---

ஸ்போர்ட்ஸ்

# கவுண்டி அணியில் லாரா



மேற்கிந்தியத் தீவுகள் அணியின் கப்டனான பிரையன் லாரா, மேற்கிந்தியத் தீவுகளில் உள்ள உள்ளூர் அணிகளுள் ஒன்றான ட்ரினிடாட்-ரொபாகோ அணியில் சேர்ந்து 'ரெட் ஸ்ரைப்' கோப்பைக்காக நடக்கும் போட்டிகளில் ஒப்பந்தம் செய்யப்பட்டு விளையாடுகிறார். இந்த ஒப்பந்தம் வரும் ஏப்ரல் மாதத்துடன் முடிவடைகிறது.

ஏப்ரல் மாதத்தில் இருந்து இங்கிலாந்து கவுண்டி அணிகளுள் ஒன்றான வோர்விக்ஷயர் அணியில் சேர்ந்து 1998ம் ஆண்டிற்கான போட்டித் தொடர்களில் தலைமைப் பதவியை ஏற்கப்போகிறார். இதற்காக லாராவுக்கு வருடமொன்றிற்கு இரண்டு இலட்சம் ஸ்டேர்லிங் பவுன்ஸ் (நம்மூர் மதிப்பின்படி சுமார் 2கோடியே 4இலட்சம் ரூபாய்) வழங்கப்படும்.

இத்தகவலை மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் சபையின் பிரதம அதிகாரி ஸ்டீவ் கமாச்சோ ஊர்ஜிதப்படுத்தியுள்ளார்.

கவுண்டி என்னும் பிராந்திய மட்டத்திலான கிரிக்கெட் ஆட்டக்காரர்களில் இவ்வளவு அதிகமான ஊதியத்தைப் பெறுபவர் பிரையன் லாராதான்.

வோர்விக்ஷயர் அணியில் விளையாடி வந்த இன்னொரு வெளிநாட்டு வீரரான தென்னாபிரிக்க அணியின் அலன் டொனால்ட் இம்முறை விளையாடவில்லை.

1994ல் 'பென்சன் அன்ட் ஹெட்ஜஸ்' கோப்பையை வோர்விக்ஷயர் அணி வெல்வதற்கு முழுமுதற் காரணமானவர் லாராதான். அத்துடன் அந்தப் பருவகாலத்தில்தான் லாரா ஆட்டமிழக்காமல் 501 ஓட்டங்களைக் குவித்து உலக சாதனை படைத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஒழுங்கு நடவடிக்கை

பாகிஸ்தானுக்கு எதிரான டேர்பன் கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின்போது ஆசிய இரசிகர்களைத் திட்டியதற்காக தென்னாபிரிக்க வீரர்களான பட் சிம்கொக்ஸ், ஃபனி டி. வில்லியர்ஸ் ஆகியோர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானுக்கும், தென்னாபிரிக்காவுக்குமிடையே டேர்பனில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியின்போது சிம்கொக்ஸ் மற்றும் டி. வில்லியர்ஸ் ஆகிய இரு வீரர்களும் ஆசிய இரசிகர்களை தகாத வார்த்தைகளால் திட்டியதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி தென்னாபிரிக்க, கிரிக்கெட் சபை ஒன்றுகூடி விவாதித்தது. இக்கூட்டத்தில் இதைப்பற்றி ஆராய விசாரணைக் கமிஷன் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

## சுற்றுப் பயணம்

மேற்கிந்தியத் தீவுகள் அணி 1998-99ம் ஆண்டுக் காலத்தில் தென்னாபிரிக்காவில் சுற்றுப் பயணம் செல்லவிருக்கிறது.

இக்கால கட்டத்தில் 5 டெஸ்ட் போட்டிகளில் தென்னாபிரிக்க அணியை எதிர்த்து ஆடவிருப்பதாக தெ.ஆ.ஐக்கிய கிரிக்கெட் சபையின் நிர்வாக இயக்குநர் அலி பச்சர் அறிவிக்கிறார்.

ஜொஹான்ஸ்பேர்கிலுள்ள வாண்டரர்ஸில் முதலாவது டெஸ்ட்- நவம்பர் 25ல் 30 வரை இடம்பெறவிருக்கிறது.

அடுத்து போர்ட் எலிஸபத்திலுள்ள சென்ஜோர்ஜ் பார்க்கில்- டிசம்பர் 10 முதல் 14 வரையும், டர்ஹாமிலுள்ள கிங்ஸ் மீடில்- டிசம்பர் 26 முதல் 30 வரையும், கேப்டவுனிலுள்ள நியூலண்ட்ஸில் ஜனவரி 2 முதல் 6 வரையும் பிரிட்டோரியாவுக்கு சமீபமாகவுள்ள செஞ்சூரியன் பார்க்கில் ஜனவரி 15 முதல் 19 வரையும் போட்டிகள் நடைபெறவுள்ளன.

## தொடர்ந்து முதலிடம்

கிரிக்கெட் வீரர்களின் டெஸ்ட் போட்டி பெப்சி வரிசைப்பட்டியல் அண்மையில் வெளியாகி இருக்கிறது. பெப்சி வரிசைப் பட்டியலில் 13வது இடத்தில் இருந்த இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர் 3வது இடத்திற்கு முன்னேறியுள்ளார். சமீபத்தில் அவுஸ்திரேலியாவுடன் சென்னையில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் சிறப்பாக ஆடி சதமடித்திருந்தார்.

பெப்சி வரிசைப் பட்டியலில் தொடர்ந்தும் முதலிடத்தில் இருக்கிறார் இலங்கை வீரர் அரவிந்த டி சில்வா. 2வது இடத்தில் பாகிஸ்தான் வீரர் அஸார் முகமட்டும், 4வது இடத்தில் இலங்கை வீரர் சனத் ஜெயசூரியாவும், 5வது இடத்தில் பாகிஸ்தான் வீரர் இன்ஸமாம் உல்-ஹக்கும் இருக்கின்றனர்.

இந்திய வீரர்களான சௌரவ் கங்குலி, நவ்ஜோத்சிங் சித்து, முகமட் அஸாருதீன், ராகுல் ட்ராவிட் ஆகியோர் முறையே 6,10,15,20 ஆகிய இடங்களில் இருக்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 1

## ஆண்டவன் படைத்த ஆதிமனிதன்

உலகை இறைவன் படைத்தான். தான் படைத்த உலகில் வாழக் கூடிய உயிரினங்களையும் இறைவனே படைத்தான்.

விண்ணையும் மண்ணையும் படைத்த ஆண்டவன் விண்ணிலிருந்தே ஒளி சிந்தி உயிரினங்களுக்கு ஊட்டமளிக்கும் கதிரவனையும், வான் மதியையும், விண்ணகமெங்கணும் பரவிக்கிடக்கும் விண்மீன்களையும் படைத்தார். காற்றையும் படைத்தார்; தீயையும் உண்டாக்கினார். மழை பொழியும் முகில் கூட்டங்களையும் படைத்தார்.

மரஞ் செடி கொடிகள், புல் பூண்டு, புச்சி புழுக்கள், நீரில் வாழும் சீவ ராசிகள் அத்தனையும் இறைவனின் படைப்புக்களே. வானில் வட்டமிடும் புள்ளினங்கள், கானில் திரியும் காட்டு விலங்குகள் அத்தனையும் ஆதியில் உருவாக அந்தப் பரம்பொருளே முழுமுதற் காரணம்.

அதனால்தான் இறைவனை ஆதி மூலம் என்றும் பரிபூரணமான பரம்பொருள் என்றும் கண்டு கொண்டோம். அவனன்றி ஓரணுவும் அசையாது என்ற பேருண்மையையும் அறிந்து கொண்டோம்.



கடவுள் முதல் மனிதனைத் தன்னை ஒத்த சாயலிலே படைத்தார். அம் மனிதனுக்குத் துணையாக ஒரு பெண்ணையும் – அம்மனிதனுடைய ஓர் எலும்பினைக் கொண்டே– படைத்தார். இருவரும் இணைந்து வாழ்வதற்கேற்ற சகல வசதிகளையும் கொண்ட ஒரு தோட்டத்தையும் உருவாக்கினார். இன்பமயமான வாழ்க்கையைத் தவிர வேறு எந்தத் துன்பமும் தலையெடுக்காத வாழ்க்கையில், ஆண்டவனால் உருவாக்கப் பட்ட அந்த ஆதி மனிதனும் அவன் துணைவியும் வாழ்ந்து வந்தனர்.

அவனுக்கு ‘ஆதாம்’ என்று பெயர். அவனுடைய துணைக்கு அவனே ‘ஏவாள்’ என்று பெயர் சூட்டினான். இவர்களுக்காக இறைவன் அமைத்த தோட்டம் ‘ஏதேன்’ என்ற பெயரைப் பெற்றது.

### ஏதேன் தோட்டம்

ஏதேன் தோட்டத்தில் அந்த இருவரும் வாழ்வதற்கு உரிய தேவைகள் அத்தனையும் இருந்தன. உண்பதற்கு வேண்டிய உணவு வகைகள், உலாவருவதற்கான சோலைகள், இவர்களுக்கு இன்ப உணர்வுகளை ஊட்ட அழகிய மலர்கள், பண்பாடும் பறவை இனங்கள், பாய்ந்தோடித்திரியும் மிருகங்கள், சலசலக்கும் அருவி; அதில் நீச்சலடிக்கும் நீர்வாழும் ஜந்துக்கள், இத்தனையும் ஆண்டவனால் ஆக்கப் பட்டு, ஆதாம்–ஏவாளின் ஏகபோக உரிமையாக்கப்பட்டிருந்தன.

ஆண்டவனின் குழந்தைகளான அவ்விருவரும் எப்போதும் மகிழ்ச்சியாகக் காணப்பட்டனர். தோட்டத்தில் வாழ்ந்த பறவைகளும் மிருகங்களும் இருவரையும்– எத்தகைய பயமுமின்றிச் சுற்றி வந்தன. அவற்றுடன் சேர்ந்தே ஆதாமும் ஏவாளும் எப்பொழுதும் ஆடிப்பாடி மகிழ்ந்தனர்.

இத்தனை வாழ்க்கை வசதிகளையும் படைத்துக்கொடுத்த ஆண்டவன் அத் தோட்டத்தின் மத்தியில் அழகிய இரு மரங்களையும் உருவாக்கியிருந்தார். அம்மரங்கள் பூத்துக் காய்த்து பொலிவுடன் விளங்கின. இம்மரங்களில் ஒன்று நன்மை தீமையை உணர்த்தும் தன்மையானது. மற்றொன்று ஜீவசத்தைத் தரவல்லது.

தான் படைத்த மனிதர்களிடம் கடவுள் ஒரு கட்டளையைப் பிறப்பித்தார்: “நீங்கள் இத் தோட்டத்தில் உங்கள் விருப்பப்படி எதுவும் செய்யலாம். சகல மரங்களிலுமுள்ள பழங்களையும் நீங்கள் புசிக்கலாம். ஆனால் அறிவாகிய மரத்தின் பழங்களை மட்டும் நீங்கள் புசித்தலாகாது! அப்பழங்கள் உங்கள் சாவுக்கே வழி காட்டும்!” என்பதுதான் ஆண்டவனிட்ட கட்டளையாகும்.

சிறு குழந்தையிடம் ஏதாவது ஒரு காரியத்தைச் செய்யக்கூடாது என்று கட்டளையிட்டால், அக்காரியத்தைச் செய்யவே துணியும். அதே போல் தீண்டக்கூடாது என்று ஆண்டவனால் குறிப்பிட்டுச் சொல்லப்பட்ட அந்த மரத்தின் மீதே மனிதனின் மனம் தாவியது ஒன்றும் வியப்பில்லை. குறிப்பாகப் பெண் குழந்தைகள்தான், தவிர்க்கப்பட்ட பொருளைத் தாவிப் பிடிக்கத் துடிக்கும் இயல்புடையவை.

ஏதேன் தோட்டத்தில் ஊர்ந்து திரிந்த பாம்பு ஒன்று ஏவாளிடம் வந்து, “பெண்ணே! இந்த மரத்திலுள்ள பழங்களைப் புசிக்கக் கூடாது என்று ஆண்டவன் ஏன் கட்டளையிட்டான் தெரியுமா? இம்மரத்தின் பழத்தினைப் புசித்தால் உங்களுக்கு அதிசயிக்கத்தக்க சக்தி உண்டாகும். நன்மை– தீமைகளை உணரக்கூடிய ஆற்றலைப் பெறுவீர்கள். ஆண்டவனுக்குள்ள அத்தனை சக்திகளையும் நீங்களும் பெறுவீர்கள்!” என்று கூறியது.

### பழம் தந்த பலன்

அம்மரத்தின் கனிகளைப் பார்த்துப் பார்த்து அதுவரை ஏங்கிய அந்தப் பெண், பாம்பின் துண்டுதலால் பழம் ஒன்றைப் பறித்தாள்; புசித்தாள்; அதன் சுவையே அவளைப் பரவசப்படுத்தியது. அதே வேளை அவள் கணவன் ஆதாம் அங்கே வருவதைக் கண்டாள். புதுமையான ஓர் உணர்வு அவளை ஆட்கொண்டது. ஓடிச் சென்று ஒரு செடியின் பின்னால் மறைந்து கொண்டாள்.

தான் வரும்போது ஓடிவந்து அன்போடு தன்னை வரவேற்கும் அன்பு மனையாள், என்றுமில்லாதவாறு ஓடி மறைவதைக் கண்ட ஆதாம் துணுக்குற்றான். அருகே இருந்த மரத்தின்பின் அவள் ஒளிந்திருக்கிறாள் என்பதை உணர்ந்து கொண்ட அவன், “ஏவாளே! ஏன் அங்கே ஒளிந்து நிற்கிறாய்? உனக்கு என்ன நடந்தது?” என்று கேட்டான். அவளிடமிருந்து ஒரு சிரிப்பொலிதான் கேட்டது.

தொடர்ந்து தனது வலது கரத்தில் ஏந்தியிருந்த– பாதி கடித்த கனியை அவன் முன் நீட்டினாள்.

“இந்தப் பழத்தைத் தீண்டவே கூடாது என்றுதானே ஆண்டவன் கட்டளை இட்டிருந்தார். நீயோ இக்கனியைப் பறித்தது மல்லாமல் பாதியைப் புசித்துமிருக்கிறாய்! இது கடவுளின் கட்டளையை மீறிய செயல் அல்லவா?”

இவ்வாறு ஆதாம் கேட்க, ஏவாள், “அன்பரே! நாம் இதுவரை சுவைத்த அத்தனை கனிகளையும்விட இக்கனிதான் மிக மிகச் சுவையாக இருக்கிறது. இதனை உண்டவுடன் என்னிடம் புத்துணர்ச்சியே பெருகுகிறது. இத்தகைய அற்புதச் சுவையும் சக்தியும் நிறைந்த கனியை இறைவன் ஏன் தீண்டவே கூடாது என்று கட்டளை இட்டாரோ தெரியவில்லை. இதனை நீங்களும் உண்டு பாருங்கள், நான் கூறுவதன் உண்மையினை நீங்களே அறிவீர்கள்!” என்றாள்.

அக்கனியைக் கடித்துச் சுவைத்தமையினால், அதிலிருந்து ஏவாளின் கையில் வடிந்தோடிய கனியின் சாற்றின் நிறமும் மணமும் ஆதாமையும் சுண்டி இழுத்தன. உடனடியாகவே அக்கனியை ஏவாளின் கையிலிருந்து பறித்தெடுத்துச் சுவைக்கலானான்.

அக்கனியைக் கடித்தது தான் தாமதம் ஆதாமின் உள்ளுணர்வுகள் மர்மமான முறையில் மாற்றமடைந்தன. அதுவரை பிறந்த மேனியனாகத் திரிந்த அவனும், ஏவாளைப் போல் தன்னை மறைத்துக்கொள்ள மறைவிடம் தேடலானான். தன்னுடைய சூழ்ச்சித்திட்டம் பலித்துவிட்டதை எண்ணி மகிழ்வுற்ற அந்தப் பாம்பும் ஒரு புதருக்குள் ஓடி மறைந்துகொண்டது.

### தண்டனை

ஆதாமும் ஏவாளும் எந்தவிதமான கள்ளங்கபடமற்று அன்று வரை வாழ்ந்து வந்தனர். நன்மை தீமைகளை உணர்த்தும் மரத்தின் பழத்தைப் புசித்ததும் ஒருவரை ஒருவர் நேராகக் காண்பதற்கே வெட்கப்பட்டுக் கொண்டனர். அப்போது ஆண்டவன் ஏதேன் தோட்டத்துக்கு வந்தார். அவர் அங்கு வரும்போதெல்லாம் ஓடோடி வந்து வரவேற்கும் ஆதாமும் ஏவாளும் தோட்டத்தில் காணப்படாமையினால் ஆண்டவன் சற்றுத் திகைப்புற்றார். “ஆதாமே! ஏவாளே! நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?” என்று அழைத்தார்.

தங்கள் மறைவிடத்தைவிட்டு வெளிவராமலேயே ஆதாம், “தங்களுடைய குரல் எங்களுக்குக் கேட்கிறது. ஆனால் தங்களருகில் வருவதற்கு எங்களுக்கு வெட்கமாக இருக்கிறது,” என்று கூறினான்.

ஆண்டவருக்கு அவர் படைத்த மனிதனைப் பற்றித் தெரியாதா என்ன? தான் விதித்த தடையினை எப்படியும் ஒரு நாள் மீறுவார்கள் என்பதும் அவருக்குத் தெரிந்தது தான். இருப்பினும் அவர் தொடர்ந்து வினவினார்: “அந்தக் குறிப்பிட்ட மரத்தின் அருகே போகவும் கூடாது; கனிகளைப் பறிக்கவும் கூடாது, புசிக்கவும் கூடாது என்று நானிட்ட கட்டளைப்படி நீங்கள் நடக்கவில்லை. என் உத்தரவை மீறிவிட்ட உங்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட்டே ஆக வேண்டும்!” என்றார்.

இராஜகுமாரன்

தன்னுடைய மனைவி ஏவாள்தான் பழத்தைப் பறித்துப் புசித்து விட்டு தனக்கும் தந்ததாக ஆதாம் சொன்னான். ஏவாளோ பாம்பினால் தான் தூண்டப்பட்டதாக பழியை பாம்பின் மீது சுமத்தினாள்.

தனது ஆணையை மீறியமைக்காக, ஏவாளுக்கு ஆண்டவன் தண்டனை விதித்தார். “நீ உன் குழந்தைகளைப் பெறும்போது, மிக்க வேதனை அடைவாய்! அத்துடன் ஆணே உன்மீது ஆட்சி செலுத்துவான்!” என்றார். பெண்ணின் பேச்சைக் கேட்டு அவள் தந்த பழத்தினைப் புசித்தமைக்கு ஆதாம்மீதும் சாபமிட்டார்.

“மண்ணிலே உருவான நீ மண்ணுக்கே உன் உடலைக் கொடுப்பாய்! உன் அன்றாட உணவைத்தேட, அதே மண்ணைப் பண்படுத்திப் பாடுபட்டு உழைப்பாய்! மண்ணில் மறையும் வரை நீ இதே போல் உழைத்தே உண்ணக் கடவாய்!” என்று சாபமிட்டார். அத்தி இலைகளைக் கொண்டு தங்கள் உடம்புகளை மறைத்திருந்த ஆதாமுக்கும் ஏவாளுக்கும் மிருகத் தோலாலான ஆடைகளை ஆண்டவன் கொடுத்தருளினார். மனிதனின் சுகவாழ்வுக்காகப் படைக்கப்பட்ட ஏதேன் தோட்டத்திலிருந்து இருவரையும் வெளியேறுமாறு கட்டளைஇட்டார்.

சோகமே உருவாக இருவரும்– இன்பமயமான ஏதேன் தோட்டத்தை விட்டு– வெளியேறினர். மூப்பு, பிணி, சாக்காடு என்ற துன்பங்கள் எதுவும் தீண்டாமல் என்றும் வாழ வேண்டிய மனிதன், ஆண்டவனின் ஆணையை மீறியமையினால் துன்ப துயரங்களை அணைத்துக் கொண்டான். அவன் சந்ததிகளுக்கும் அவற்றையே சொத்தாகத் தந்தான்.

(தொடர்ந்து வரும்)

### திருமறை 1 வினா

**ஆதாமுக்கும் ஏவாளுக்கும் ஆண்டவனிட்ட கட்டளை என்ன?**

இவ்வினாவுக்குரிய விடையை 28.03.98க்கு முன்னர் அனுப்பவேண்டிய முகவரி:

திருமறை 1 விடை:
தினமுரசு
த.பெ.இல.1772,
கொழும்பு.

---

## நட்பா பகையா?



**காபூ.கா:** ஐயா! கலைஞரே! இப்படியா உங்களுக்கு வீழ்ச்சி வரவேண்டும்? இந்த வீழ்ச்சிக்கு என்ன காரணம்?

**கலைஞர்:** நிறுத்தும்! இது வீழ்ச்சியல்லை, சிறு தோல்வி இதனை வீழ்ச்சி என்று கூறுகிறார் அந்த அம்மையார்!

**காபூ.கா:** தோல்விக்கும் வீழ்ச்சிக்கும் என்ன வேறுபாடு?

**கலை:** வீழ்ச்சி என்பது வீழ்வதைக் குறிக்கும்!

**காபூ.கா:** எழுச்சி என்பது எழுவதைக் குறிக்குமோ?

**கலைஞர்:** ஆம்! தோல்வி என்பது வெற்றிக்கு முதல் படியைக் குறிப்பது! அதனால்தான் வீழ்ச்சியல்ல, தோல்வி என்று கூறுகிறேன்.

**காபூ.கா:** மக்கள் ஏன் உங்களுக்கு வாக்களிக்கவில்லை?

**கலை:** எங்களுக்கு வாக்களித்தவர்கள் எல்லோரும் மக்களல்ல மாக்கள் என்று நினைத்து கேட்கப்படும் கேள்வி இது!

**காபூ.கா:** மன்னிக்கவேண்டும், நீங்கள் வெற்றி பெறும் அளவுக்கு ஏன் வாக்களிக்கவில்லை?

**கலைஞர்:** நாங்கள்தான் வெற்றிபெறுவோம் என்ற நம்பிக்கையில் ஏராளமான மக்கள் வாக்களிக்காமலேயே இருந்து விட்டார்கள்.

**காபூ.கா:** அப்படிப் பார்த்தாலும்கூட கடந்த முறையை விட இம்முறை ஜெயலலிதா அணிபெற்ற வாக்குகள் அதிகமாகியுள்ளதே.

**கலைஞர்:** நிலையான ஆட்சி வரும் என்ற மயக்கத்தில் மக்கள் வாக்களித்துள்ளார்கள்.

**காபூ.கா:** மதவாத சக்திகள் வெற்றிபெறவே விடமாட்டோம் என்று சூளுரைத்தீர்களே?

**கலை:** வெற்றி பெற விடமாட்டோம் என்பது நம் உறுதியைக் குறிக்கிறது. வெற்றி பெற்றுள்ளார்கள் என்பது நம் உறுதி குலைந்துவிட்டதை குறிக்காது.

**காபூ.கா:** குண்டுவெடிப்புக்களை தடுக்க உங்கள் ஆட்சி தவறிவிட்டதாக குற்றம் சாட்டுகிறாரே செல்வி?

**கலை:** (சட்டென்று தன் சட்டைப்பையில் உள்ள கல்குலேட்டரில் கணக்குப் பார்க்கிறார்) ஜெயலலிதா ஆட்சியில் மொத்தம் 116 குண்டுவெடிப்புக்கள் நடந்துள்ளன. 316 பேர் காயமடைந்தனர். கோவைக் குண்டுவெடிப்பில் 313 பேர்தான் காயமடைந்தனர். எங்கள் ஆட்சியில் இதுவரை 16 குண்டு வெடிப்புக்கள்தான் நடந்திருக்கின்றன.

**காபூ.கா:** இந்த விடயத்தில் ஜெயலலிதா அரசின் சாதனையை உங்கள் அரசு முறியடிக்குமா? இன்னமும் 101 குண்டுவெடிப்பு நடந்தால் சாதனையை முறிடித்துவிடலாமே.

**கலை:** (முறைக்கிறார்) பத்திரிகைகள் பொறுப்போடு நடந்து கொள்ள வேண்டும்! பத்திரிகைகள் பொறுப்போடு விமர்சித்தால் விருப்போடு கவனிப்பவனும் நான்தான்! பொறுப்பற்று விமர்சித்தால் வெறுப்போடு கவனிப்பவனும் நான்தான்! இதனை முதல்வராக இருந்தல்ல, உங்கள் வீட்டுப் புதல்வராக இருந்து கூறுகிறேன்!

**காபூ.கா:** பாரதிய ஜனதா வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்துவிட்டது, என்ன செய்யப்போகிறீர்கள்?

**கலை:** வெற்றிபெற விடமாட்டோம் என்றோமே தவிர, வெற்றி பெற்றாலும் விடமாட்டோம் என்று நாம்கூறியதில்லை!

**காபூ.கா:** உங்கள் ஆட்சி கவிழ்க்கப்படும் என்கிறார்களே?

**கலை:** கவிழ்க்கும் அளவுக்கு பாரதிய ஜனதா பாரதீய ஜனதாவாக செயற்படும் என்று நான் எண்ணவில்லை! என் முப்பதாண்டுகால நண்பர் வாஜ்பேயி அரசியல் நாகரிகம் தெரியாதவரல்ல! அடுத்தாரைக் கவிழ்க்கும் எண்ணம் கொண்டவரல்ல! உத்தரபிரதேசத்திலே பாரதிய ஜனதா அரசை கலைக்க எடுத்த முயற்சியை கண்டித்தவன் நான் என்பதையும் பாரதிய ஜனதா நன்கறியும்! இதன் பின்னரும் எம் ஆட்சியை கவிழ்த்தால் அக் கட்சி நன்றியை அறியாதது என்றுதான் பொருள்!

**காபூ.கா:** பாரதிய ஜனதா அரசோடு ஒத்துழைப்பீர்களா?

**கலை:** உறவுக்கு கைகொடுப்போம் உரிமைக்கு குரல் கொடுப்போம்!

**காபூ.கா:** மதவாத சக்திகளுக்கு எதிரான போராட்டம் என்னாவது?

**கலை:** போராட்டம் வேறு, மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் இடையேயான நட்பு என்ற தேரோட்டம் வேறு! இந்த தேர் ஓடினால்தான் ஆட்சி சீராக நடக்கும்! அதே சமயம் மதவாதத்துக்கு எதிரான போராட்டம் தொடரும்! நட்புக்காக தப்புச் செய்ய மாட்டோம். தப்புச் செய்து நட்பையும் கெடுக்க மாட்டோம்!

**காபூ.கா:** புரியவில்லையே!

**கலை:** போகப் போகப் புரியும்!

**காபூ.கா:** எவ்வளவு போகவேண்டும்!

**கலை:** போகக்கூடிய தூரம்வரைதான் எதுவும் போகும், போகவும் முடியும்! இப்போது நீர் போக வேண்டிய நேரம் என்பதால் போய் வாரும்.

---

## எங்கிருந்தாலும் வீழ்க

**காபூ.கா:** வணக்கம் அம்மா!

**ஜெ:** (பாட்டுக் கேட்டபடி இருக்கிறார்)

விடுவரை தோழி
விதிவரை தொண்டர்
காடுவரை கட்சி
கடைசிவரை யாரோ?

ஆடும்வரை ஆட்டம்
ஆட்சியிலே நாட்டம்
கூடிவரும் கூட்டம்
தோற்றபின்னே வருமா?

தோற்றவரைக் கேட்டால்
கள்ளவோட்டு என்பார்
வென்றவரைக் கேட்டால்
நல்லவோட்டு என்பார்.



**காபூ.கா:** அம்மா! தாயே!

**ஜெ:** (பாட்டை நிறுத்திவிட்டு) யார் நீர், எங்கள் கட்சியில் புதிதாக சேர்ந்தவரோ? மளமளவென்று துதி பாடாமல் தயங்கித் தயங்கி அழைக்கிறீரே!

**காபூ.கா:** நான் பேட்டி எடுக்க வந்தேன் அம்மா!

**ஜெ:** பேட்டி, வேட்டி ஹா ஹா ஹா மிஸ்டர் கந்தசாமி, யூ நோ, வேட்டி கட்டிய தமிழர்கள்தான் இம்முறையும் பிரத மரை தெரிவு செய்வார்கள் என்று பீலா விட்டாரே கருணாநிதி. என்ன சொல்கிறார் இப்போது? போய்க் கேட்டு வாரும், பின்னர் பேட்டி தருகிறேன்.

(பாட்டைக் கேட்கிறார்)

ஆடிய ஆட்டமென்ன? பேசிய வார்த்தை என்ன?
தேடிய வோட்டு என்ன? திரண்ட தோல்வி யென்ன?
கையைவிட்டு ஆட்சிபோனால்
கூடவே வருவதென்ன?

**காபூ.கா:** இந்தப் பாட்டு முன்னர் உங்களுக்கு பொருத்தமாக இருந்தது போலிருக்கிறதே!

**ஜெ:** யெஸ்! நேற்றிருந்தது இன்றில்லை. இன்றிருந்தது நேற்றில்லை! யானைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கு ஒரு காலம் வரும் புரிஞ்சுக்கோங்கோ.

**காபூ.கா:** யார் யானை? யார் பூனை?

**ஜெ:** யோவ், கிண்டலா?

**காபூ.கா:** பாரதிய ஜனதா ஆட்சியில் நீங்கள் நினைப்பதெல்லாம் நடக்குமா?

**ஜெ:** (பாடுகிறார்)

பட்டத்துராணி பார்க்கும் பார்வை
பாரதிய ஜனதா
படிந்துதான் ஆகவேண்டும்!
ஆளுங்கள்– இந்த
அம்மா சொல்லும்படி ஆளுங்கள்!
வெல்லுங்கள்– என்னோடு
இணைந்து வெல்லுங்கள்!

**காபூ.கா:** அவர்கள் உங்கள் நினைப்புப்படி நடக்காவிட்டால்?

**ஜெ:** ஆட்சி நடக்காது! அடுத்த தேர்தல்தான் நடக்கும்! (பாடுகிறார்)

நினைத்ததை நடத்தியே.
முடிப்பவள் நான் நான் நான்!

**காபூ.கா:** கடைசியாக கலைஞர் மு.கருணாநிதிக்கு என்ன கூறவிரும்புகிறீர்கள்?

(பாடுகிறார்)

எங்கிருந்தாலும் வீழ்க! உன்
ஆட்சி புயலில் வீழ்க!
மஞ்சள் துண்டுடன் திரிக–உன்
மங்கல ஆட்சி வீழ்க!

இங்கே சிறுத்தி காத்திருந்தாலும்
பதவி சுகத்தை பார்த்திருந்தாலும்
சென்ற நாளை நினைத்திருந்தாலும்
திரு.மு.க.வே நீ வீழ்க!

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்



பெண்களின் அழகோ இரகசியம்! அதை
எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331


# விமானச் சிறகினிலே



➡ விமானப் பயணத்திற்கு புது அர்த்தமே கொடுத்து விட்டார் இந்த மனிதர்.

நம்புவதற்கு கஷ்டமான நம்பகமான சாதனைச் செய்தி இது.

எல்லோரும் விமானத்திற்குள் இருந்துதான் பயணம் செய்வார்கள். இவர் விமானத்தின் வெளியே அதன் இறக்கையில் நின்றபடி பயணம் செய்திருக்கிறார்.

இந்த அசாத்திய சாதனை மன்னரின் பெயர் றோயல் காசில். பிரிட்டனைச் சேர்ந்தவர்.

1972 முதல் 1993 வரை பி.பி.சி. தொலைக்காட்சி நடத்திய உலக சாதனையாளருக்கான போட்டியில்தான் இந்த உலக சாதனையைப் படைத்தார்.

1990 ஆகஸ்ட் 02ம் திகதி இச் சாதனை நிகழ்த்தப்பட்டது.




SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


⬅ பிரிட்டனின் மேற்கு சசெக்ஸ் மாநிலத்தின் கட்விக் என்ற இடத்திலிருந்து புறப்பட்டு ஃபிரான்சின் தலை நகர் பாரிஸ் அருகேயுள்ள லீபோர்கெற் என்ற இடம்வரை விமான இறக்கையில் பயணம் செய்தார். 3 மணி நேரமும் 23 நிமிடங்களும் பிடித்தது.

கீழே விழுந்துவிடாதபடி கயிற்றினால் பிணைத்திருந்தாலும், எதனையும் பற்றிக் கொள்ளாமல் பயணித்தார். இந்த உலக சாதனை படைக்கப்பட்டு 8 வருடங்களாகிவிட்டன. வேறு யாரும் முறியடிக்கவில்லை. சோகமான செய்தி யாதெனில், றோயல் காசில் தற்போது உயிருடன் இல்லை. தனது 62வது வயதில் 1994ம் ஆண்டு காலமானார்.

# தனித்துவம்



⬅ உலகிலேயே மிக உயரமான பள்ளிவாசல் தூபி இதுதான். மொறோக்கோ நாட்டில் கசாப்லான்கா என்கின்ற நகரிலுள்ள கிறேற் ஹசான் பள்ளிவாசலில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த தூபியின் உயரம் 200 மீற்றராகும். (656 அடி)

1984ல் கட்டிமுடிக்கப்பட்ட இப்பள்ளி வாசலில் ஏக காலத்தில் 25 ஆயிரம் பேர் தொழுகை நடத்த முடியும். 9 ஹெக்டயர் (22 ஏக்கர்) விஸ்தீரணத்தில் கட்டப்பட்டுள்ள இந்த பள்ளி வாசல் பளிங்குக் கற்களால் ஆக்கப்பட்டு தரையில் சலவைக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன.

மற்றொரு தகவல்: உலகிலேயே மாபெரும் பள்ளி வாசல் என்ற பெருமைக்குரியது பாகிஸ்தான் தலை நகர் இஸ்லாமாபாத்திற்கு அருகேயுள்ள 'ஷா பைசால்' பள்ளிவாசல்தான்.

இங்கு ஒரே நேரத்தில் ஒரு இலட்சம் பேர் தொழுகையில் ஈடுபடலாம். இதை விட முற்றம் மற்றும் அதனோடிணைந்த நிலப்பரப்பில் இரண்டு இலட்சம் பேர் ஒன்று கூடமுடியும்.

அந்த பள்ளிவாசலின் கட்டடம், அதனைச் சுற்றியுள்ள பகுதி மொத்தம் 19.45 ஹெக்டயர் (48.06 ஏக்கர்) விஸ்தீரணம் கொண்டது.

# ஆடவரலாம்



➡ 'பார்பி' என்ற பெயருடைய பெண் பொம்மை அமெரிக்காவைச் சேர்ந்த விளையாட்டுப் பொம்மைகளை உருவாக்கி விற்பனை செய்துவரும் மட்டெல் என்பவருடைய கற்பனையில் உருவானது.

முதன் முதலில் 1959ம் ஆண்டு உருவான இப்பொம்மை இன்று உலகம் முழுவதும் 60 கோடிக் குழந்தைகளின் கைகளிலும் மடியிலும் படுக்கையிலும் கொஞ்சிக்குலாவுகிறது.

மிக வேகமாக விற்பனையாகி வருவதுடன் இப்பொம்மையைக் கதாநாயகியாக வைத்து தொலைக்காட்சி நாடகங்களும் பல உருவாகி குழந்தைகளை மட்டுமல்லாமல் பெரியவர்களையும் கவர்ந்திழுத்து வருகிறது.

பார்பியை வைத்து கதைப் புத்தகங்களும் சித்திரக் கதைகளும் வந்துவிட்டன.

பார்பி' பொம்மைக்கு உலகளாவிய நிலையில் ஏற்பட்டுள்ள மதிப்பினைக் கண்டுவிட்டு, டென்மார்க்கைச் சேர்ந்த 'அக்குவா' இசைக்குழு 'பார்பி கேள்' என்றோர் பாடலை இயற்றி ஆடிப் பாடி அமர்க்களப்படுத்துகிறது. அப்பாடலுக்கு பயங்கரமான வரவேற்பு. நம்நாட்டில் டேக் இட் ஈஸி ஊர்வசி பாடல் வயது வித்தியாசமின்றி எல்லோர் உதடுகளிலும் உலாவியது போல, பார்பி பாடல் மேல் நாடுகளில் படு பிரபலம்.

அப்பாடலை பாடும் இசைக் குழுவில் பார்பி என்ற பெண்ணாக தோன்றும் அழகியையும் இசைக் குழுவினரையுமே படத்தில் காண்கிறீர்கள். இந்த பார்பி உயிருள்ள பொம்மை.

தற்போது இந்த இசைக்குழுவினர் ஒரு சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ளனர். இவர்கள் பார்பி பொம்மைக்குள்ள செல்வாக்கை பயன்படுத்தி எக்கச்சக்கமாக சம்பாதிப்பதை அறிந்த பார்பி பொம்மை தயாரிப்பாளர் மட்டெல் வழக்குத் தொடுத்துள்ளார். "என் அனுமதியில்லாமல், என் பொம்மையைப் பற்றி எப்படி பாடலாம்?" என்று கிடுக்கிப் பிடியாய் கேள்வி தொடுத்திருக்கிறார். பொம்மை ஒன்றுக்கு இத்தனை செல்வாக்கு இருப்பதும், சர்ச்சைகள் கிளம்புவதும் ஆச்சரிய சமாச்சாரம்தானே.


## 250 புலமைப்பரிசில்கள்

முதன் முதலாக குழந்தைகளுக்கான கம்புயூட்டர் பாடத்தை புலமைப்பரிசில் மூலம் அறிமுகப்படுத்திய எமது நிறுவனம், உங்கள் குழந்தைகளும் ரூபா 5000 பெறுமதியான கீழ்க்கண்ட பாடநெறியை மீண்டும் கற்க வாய்ப்பளிக்கின்றது. இது தொகுதிகளாக முன்னூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பாடநெறியை முடித்துக்கொண்டு வெளியேறியுள்ளனர். உங்கள் குழந்தைகளும் இலவசமாக புலமைப் பரிசில் மூலம் கற்று கம்பியூட்டர் உலகிற்கு காலடி எடுத்து வைக்க இன்னுமொரு சந்தர்ப்பத்தை பெருமையுடன் வழங்குகின்றோம்.

* Computer Technology
* Setting up Hardware and Software
* Use of software packages.
* Application of microprocessor based technology in the field of music.
* Internet & Email Application

உங்கள் குழந்தைகளும் புலமைப்பரிசிலைப் பெறுவதற்கு நீங்கள் செய்ய வேண்டியது கீழ்க்கண்ட கூப்பனை நிரப்பி ரூபா 100 இனை காசாக அல்லது காசுக்கட்டளையாக இணைத்து கீழ்க்கண்ட முகவரிக்கு 30.03.98 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ அனுப்பி உங்கள் குழந்தையின் புலமைப்பரீட்சையில் தோற்ற வாய்ப்பளியுங்கள். (காசுக் கட்டளை வெள்ளவத்தை தாபாறகந்தோருக்கு எடுக்கப்பட வேண்டும்.) பரீட்சைக்கான நேரம், திகதி, இடம், பரீட்சார்த்திகளுக்கு பின்னர் தபால் மூலம் அறிவிக்கப்படும்.

*Specimen Form*

Full Name : ..........
Address : ..........
..........
School : .......... Class : ..........
Sex : .......... Age : .......... Phone : ..........

அனுப்ப வேண்டிய முகவரி :-

**Metro Computer World**
17, Charlemont Road, Colombo-06. T.P : 074 - 511164


➡ அசாருதீன் இந்திய அணியின் ராசியான கப்டன் என்று இன்று புகழப்படுகிறார்.

பங்களாதேஷில் சுதந்திரக் கிண்ணத்தை வென்ற மகிழ்ச்சி, சென்னையில் நடந்த டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியாவுக்கு தோல்வியை வாரி வழங்கியது என்று இந்திய அணியின் ரசிகர்களுக்கு ஏகப்பட்ட சந்தோசம்.

சென்னையில் நடைபெற்ற 'டெஸ்ட்' போட்டியில் டெண்டுல்கரும், அசாருதீனும், சித்துவும், திராவிட்டும் அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன்வோர்னை பெண்டு நிமிர்த்தி விட்டனர்.

கடைசியாக நடைபெற்ற சென்னை டெஸ்ட் உட்பட இதுவரை இந்தியாவுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையே 52 டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றன. பதினாறு போட்டிகளில் அவுஸ்திரேலியாவும், ஒன்பதில் இந்தியாவும் வெற்றி பெற்றுள்ளன.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக ஒரே போட்டியில் அதிக ரன் குவித்தவர்கள் பட்டியலில் டெண்டுல்கர் ஆறாவது இடத்தில் இருக்கிறார். முதலிடம் ரவிசாஸ்திரி. 206 ரன்கள்.

கப்டன் அசாருதீனுக்கு பல பெருமைகள் உள்ளன. இந்திய அணிக் கப்டன்களில் அதிக டெஸ்ட் போட்டிகளில் வெற்றிக் கனி பறித்த கப்டன் அசார்தான். மொத்தம் 38 டெஸ்ட் போட்டிகளுக்கு தலைமை தாங்கியுள்ளார். 12 வெற்றி. 9 தோல்வி. ஏனையவை வெற்றி தோல்வி இல்லை.

முன்னர் பல வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்தும்கூட பின்னர் ஏற்பட்ட சரிவால் 'ராசியில்லாத கப்டன்' என்று தூற்றப்பட்டார்.

மீண்டும் அசாரையே கப்டனாக்கியது மூலம், அவர்மீதான பழிச் சொற்கள் துடைக்கப்பட்டுள்ளன. ஆனாலும் மீண்டும் தூற்றமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? அதனால் முன்னர் போன்று புகழாரங்களைக் கண்டு புளகாங்கிதம் அடையாமல் நிதானமாக இருக்கிறார் அசார்.



# வெற்றிச் சிரிப்பு



படிப்பகம்